# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 004 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 14, ஞாயிற்றுக்கிழமை 30.11.2014


காலநிலை
மழையுடன் கூடிய காலநிலை காணப்படும். காற்று மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் வீசும்.

# வரலாற்று தவறுகளை இழைக்காதிருப்போம்

## யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் மஹிந்தவுடனான சந்திப்புக்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, நவ.30

கொழும்பில் நாளை நடைபெறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்றில் பங்கேற்க யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கு விடுக்கப் பட்டுள்ள அழைப்புக்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

அப்பாவி மக்களை இலகுவாக ஏமாற்றுவது போல எம்மையும் ஏமாற்றப்பார்க்கிறார்களா? என்று கேள்வி எழுப்பியுள்ள யாழ். பல் கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர், பல்கலைக்கழக ஆசிரி யர்களைச் சிந்தித்துச் செயற்படு மாறு அழைப்பு விடுத்துள்ளார். "வரலாற்றுத் தவறுகளை இழைக் காதிருப்போம்" என்றும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித் துள்ளதாவது:

கொழும்பில் நாளை நடத்தப்பட விருக்கும் பல்கலைக் கழகங் களின் முன்னேற்ற மீளாய்வு சம் பந்தமான கூட்டம் ஒன்றிற்குகல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர் கள் அனை வரையும் பக்.25

## யாழ்ப்பாணத்துக்கு புதிய இந்திய துணைத் தூதுவர்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்துக்குப் புதிய துணைத் தூதுவராக, கண்டியில் கடமையாற்றிய நடராஜ் அடுத்த மாதம் பதவியேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியத் துணைத் தூதுவராகக் கடமையாற்றிய பக்.25

## பளு தூக்கும் போட்டியில் இருவருக்கு தங்கம்



யாழ்ப்பாணம், நவ.30

இலங்கை பளுதூக்கு சங்கத்தி னால் நடத்தப்படும் 18 வயதுப் பிரிவு பளுதூக்கும் போட்டியில் வடமாகாணத்தை சேர்ந்த இரண்டு வீராங்கனைகள் தங்கப் பதக்கம் பெற்று சாதனை நிலைநாட்டியுள் ளனர்.

நேற்றுச் சனிக்கிழமை பொலன்ன றுவை றோயல் கல்லூரியில் இடம் பெற்ற பளுதூக்கும் போட்டியில் பெண்களுக்கான பக்.25

## சுப நேரத்தில் பொறுப்பேற்றார் யாழ். படைத் தளபதி அல்விஸ்



யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி யாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜென ரல் ஜகத் அல்விஸ் தனது கடமை களை, பலாலி படைத் தலைமை யகத்தில் நேற்று உத்தியோகபூர்வ மாகப் பொறுப்பேற்றுக் கொண் டார்.

யாழ்.மாவட்ட இராணுவத் தளப தியாக பதவி வகித்த, மேஜர் ஜென ரல் உதய பெரேரா, திடீரெனக் கொழும்புக்கு பக்.25

## 9,000 குடும்பங்கள் வடக்கில் மழையால் அவலம்

யாழ்ப்பாணம், நவ. 30

பருவப் பெயர்ச்சிகாரணமாகதொடர்ச் சியாக பெய்து வந்த மழை நேற் றுச் சற்று ஓய்ந்தது. இதனால் பல பகுதிகளில் வெள்ளம் வடிந்துள் ளது. இருப்பினும், வடக்கில் 9 ஆயிரம் குடும்பங்கள் வரையில் இடரினால் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக வடக்கின் எல்லா மாவட்டங்களிலும் கடும் மழை காற்றுடன் பெய்தது. இத னால் கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஏனைய பக்.25

## பொது எதிரணியின் ஒப்பந்தம் நாளை

யாழ்ப்பாணம், நவ. 30

ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்த லில் களமிறங்கவுள்ள பொது எதி ரணிக் கட்சிகளுக்கு இடையி லான புரிந்துணர்வு ஒப்பந்தம் நாளை திங்கட்கிழமை ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ளது. கொழும்பு விகாரமாதேவி பூங்கா திறந்த வெளி அரங்கில் காலை 10 மணிக்கு இடம்பெறும் என்று ஜன நாயக மக்கள் முன்னணியின் தலை வர் மனோ கணேசன் பக்.25

## மஹிந்தவே வெல்வார்

*ஆஸ்தான சோதிடர் ஆரூடம்*



யாழ்ப்பாணம், நவ. 30

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே எதிர்வரும் ஜனவரி மாதம் இடம் பெறவுள்ள தேர்தலில் வெற்றி பெறுவார் என்று, ஜனாதிபதியின் ஆஸ்தான சோதிடர்சுமணதாச அபே குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

'இரண்டாவது முறை பெற்ற வெற் றியை விட இந்த முறை மிக இலகு வாக வெற்றி பெறுவார்' என்று, சுமணதாச அபேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். பக்.25

## பொலநறுவையில் மைத்திரி அனுராதபுரத்தில் மஹிந்த

*ஆரம்பமாகிறது தேர்தல் பரப்புரை*

யாழ்ப்பாணம், நவ. 30

பொது எதிரணி வேட்பாளர் மைத் திரிபால சிறிசேனவின் முதலாவது தேர்தல் பரப்புரைக்கூட்டம் பொல நறு வையில் இன்று ஆரம்பமாகின்றது.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அநுராத பக்.25

## வருடா வருடம் வெள்ளத்தில் மூழ்கும் எமக்கு உதவி செய்ய யாருமில்லையா?

### பொம்மைவெளி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 30

வருடா வருடம் மழை நீரில் மூழ்கும் எமக்கு உதவி செய்ய யாருமில்லையா? என்று கேள்வி யெழுப்பிய நாவாந்துறை பொம்மைவெளி பிர தேச மக்கள், தமக்கான காணி உரிமை வேண் டும் எனக் கோரி நேற்றுக் காலை திடீர்க் கவன வீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் – அராலி வீதியை மறியல் செய்து போக்குவரத்தைத் துண்டித்து பக்.25




## சிறிசேனவின் சகோதரரது லொறியின் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 30

பொது எதிரணி வேட்பாளர் மைத் திரிபால சிறிசேன வின், சகோதரர் டட்லி சிறிசேனவின் அரிசி ஆலைக்குச் சொந்தமான லொறி மீது இனந்தெரியாதோர் தாக்கு தல் நடத்தியுள்ளனர். பக்.25


SDB உபஹார

வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
0112 832577
*நிபந்தனைகளுக்குட்பட்டது.
ஓய்வுபெற்றவர்களான உங்களது விருத்திக்காக வேண்டி ஆகக்குறைந்த வட்டி வீதத்துடன் உங்களுக்கு பெற்றுத்தரப்படும் மாபெரும் வெகுமதி.
Sri Lanka Pensions
ஓய்வூதியத் திணைக்களம்
S D B L
சணச அபிவிருத்தி வங்கி
தேசத்தின் முன்னோடி
Reg. No: PB 62PQ Fitch rating BB+(lka)

# செய்திகள்

## இந்தியாவுக்கு எதிராக செயற்பட மாட்டோம்

### உறுதி கொடுத்தது இலங்கை

யாழ்ப்பாணம், நவ.30

இந்துமா சமுத்திரத்தின் பாதுகாப்பு சர்ச்சையை உருவாக்கியுள்ள சீன நீர்மூழ்கிக் கப்பல் இலங்கைக்கு வந்தமை தொடர்பான விவகாரம், இந்திய நாடாளுமன்றத்திலும் எதிரொலித்துள்ளது. இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் எந்தச் செயலிலும் இலங்கை முனைப்பாகாது என்ற உறுதிமொழி இலங்கை அரசால் வழங்கப்பட்டமையும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

சீன நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று கடந்த செப்ரெம்பர் 7 ஆம் திகதி தொடக்கம், 13 ஆம் திகதி வரையிலும், ஒக்ரோபர் 31 ஆம் திகதி தொடக்கம், நவம்பர் 6 ஆம் திகதி வரையிலும் கொழும் புத்துறைமுகத்தில் தரித்து நின்றது. இது தொடர்பில் இந்திய நாடாளுமன்றத்தின் குளிர் காலக் கூட்டத் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பதில ளித்துள்ளார்.

எமது அயல் நாடுகளில் வெளிநாட்டு இராணுவப் பிரசன்னம் தொடர்பாக நாம் உன்னிப்பாக அவதானிக்கின்றோம். சீன நீர் மூழ்கியின் அண்மைய கொழும்புப் பயணம் குறித்து இலங்கை அரசிடம் நாம் கேள்வி எழுப்பினோம். அதற்கு இந்த நீர்மூழ்கிகள் விநியோகத் தேவைகளுக்காகவே கொழும்புத்துறை முகம் வந்தன என இலங்கை பதிலளித்துள்ளது.

அத்துடன், இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு எதிராக எந்தச் செயலையும் செய்ய மாட்டோம் என்றும் இலங்கை அரசு மீண்டும் வாக்குறுதி வழங்கியுள்ளது. இந்தியாவின் பாதுகாப்பையும், இறைமையையும் பாதுகாப்பதற்கு இந்திய அரசு தேவையான் எல்லா நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த–5)

## கிளிநொச்சி பழைய கச்சேரியை நூலகம் அமைப்பதற்கு வழங்குக

### மாவை எம்.பி கோரிக்கை



கிளிநொச்சி, நவ. 30

கிளிநொச்சி பழைய கச்சேரிக் கட்டடத்தைக் கரைச்சி பிரதேச சபைக்கு வழங்கி நூலகத்தை இயங்க வைப்பதற்கான முயற்சிகளைக் கிளிநொச்சி அரச அதிபர் மேற்கொள்ள வேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா கோரியுள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் நேற்று முன்தினம் நடந்த தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கோரினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

கரைச்சிப் பிரதேச சபையினால் நூலகம் ஒன்றை உருவாக்குவதற்கு பழைய கச்சேரிக் கட்டடத்தை வழங்குவதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலர் ஒப்புதல் வழங்கியிருந்தார். அது எல்லோருக்கும் தெரியும். ஆனால் தற்போது கட்டடத்தை வழங்குவதற்குத் தாமதிப்பதற்கான காரணம் தெரியவில்லை.

தாமதிக்காமல் பழைய கச்சேரிக் கட்டடத்தைப் பிரதேச சபைக்கு வழங்குவதன் மூலம் எதிர்காலச் சந்ததியின் அறிவு, ஆற்றலை வளர்த்தெடுப்பதற்கு கிளிநொச்சி அரச அதிபர் உதவ வேண்டும்.

பழைய கச்சேரிக் கட்டடத்தைப் கரைச்சி பிரதேச சபைக்கு வழங்கி நூலகத்தை அமைப்பதற்கு நிர்வாக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் பிரதேச சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அரச அதிபரிடம் நாம் கேட்பது என்னவென்றால் இதில் ஏன் தாமதம் காட்டுகின்றீர்கள் என்பதே.

எங்களுடைய கலைகள், கலாசாரங்கள் அழிந்துபோகாமல் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சில நாள்களுக்கு முன்னர் மழை வீழ்ச்சி குறைந்து இரணைமடு போன்ற குளங்கள் நீர் குறைவு காணப்பட்ட நிலையில் பெரும் வறட்சியான சூழலில் ஏங்கிக் கொண்டிருந்தோம். தற்போது மழை பொழிந்து எல்லோருடைய மனங்களிலும் மகிழ்வு பொங்கியுள்ளது. உயிர் வாழ முடியுமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது – என்றார்.

கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.வை.குகராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் த.பிரபாகரன் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த–18)



கொழும்புத்துறை மேற்கில் உள்ள இலந்தைக்குளம் வெள்ளத்தால் நிரம்பிப் பாய்வதால் அருகில் உள்ள கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயக் கட்டடத்துக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இலந்தைக் குளத்தில் இருந்து செல்லும் வெள்ளம் பிரதான வடிகாலில் கழிவுப் பொருள்கள் தேங்கியதால் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குளம் நிரம்பி வெள்ளம் பாடசாலை வளாகத்தை நிறைத்துள்ளது. எனவே வெள்ளத்தை வழிந்தோட வைக்க மாநகராட்சி மன்றம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (த–17)

## வைத்தியசாலையின் விடுதிக்குள் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ. 29

குடாநாட்டில் பெய்த கன மழை காரணமாகக் கோண்டாவில் பிரதேச சபை வைத்தியசாலையினுள் மழைவெள்ளம் புகுந்தது. நோயாளர் விடுதி உட்பட அனைத்துப் பகுதிகளுக்கும் மழை நீர் புகுந்தமையால், அங்கு சென்ற நோயாளிகள் சிகிச்சை பெற முடியாது திரும்பிச் சென்றனர்.

மதகு துப்புரவு செய்யப்படாதமையால் மழை நீர் தொடர்ந்து செல்ல முடியாது வெள்ளம் பெருக்கெடுத்து வைத்தியசாலையின் வைத்தியர் அலுவலகம், நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறும் விடுதி, மருந்து பாதுகாப்புப் பகுதி, பல் சிகிச்சைப் பிரிவு என வைத்தியசாலையின் அனைத்துப் பகுதிகளுக்குள்ளும் புகுந்துவிட்டது. இதனாலேயே நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாத நிலை ஏற்பட்டது. (த–4)

## கரை சேர்ந்தனர் மீனவர்

### படகு மூழ்கியதால் நீந்தி வந்தனர்

கரணவாய், நவ. 30

கடலில் மீன்பிடித் தொழிலுக்குச் சென்று காணாமல் போன சக்கோட்டையைச் சேர்ந்த மூன்று மீனவர்களும் படகு கடலில் மூழ்கிய நிலையில் நீந்தி நேற்று கட்டைக்காட்டுப் பகுதியில் கரை சேர்ந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை கடலுக்குச் சென்ற சக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பொன்ராசா நித்தியசீலன், செபமாலை லூசியன், கெனடி லூசியன் ஜெயவனன் ஆகியோர் படகுடன் காணாமல் போயிருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் அவர்கள் சென்ற படகு கடற்கொந்தளிப்பில் அடித்துச் செல்லப்பட்டு கட்டைக்காட்டுப் பகுதியில் மூழ்கியுள்ளது. இதனை அடுத்து மீனவர்கள் படகில் இருந்து குதித்து நீந்தி கட்டைக்காட்டுப் பகுதியை அடைந்துள்ளனர்.

தற்போது கட்டைக்காட்டுப் பகுதி மீனவர் சங்கமும் சக்கோட்டை மீனவர் சங்கமும் இணைந்து கடலில் மூழ்கியுள்ள படகினை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருவதாக சக்கோட்டை மீனவர் சங்கத்தைச் சேர்ந்த ப.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் கடலில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதுடன் கடல் கொந்தளிப்பாகவும் அலை அடிப்பது உயர்வாகவும் காணப்படுவதால் வடமராட்சி கரையோரப் பகுதி மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை. இதனால் கடல் உணவுகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. (த–108–173–109)

## ஆதிகோவில் கரையில் ஒதுங்கினர் தென்னிலங்கை மீனவர்கள் ஐவர்

### றோலர் படகுடன் நேற்று அதிகாலை

வல்வெட்டித்துறை, நவ. 30

'சஞ்சனா' என பெயரிடப்பட்ட மீன்பிடி றோலர் ஒன்று நேற்று அதிகாலை 5 தென்னிலங்கை மீனவர்களுடன் வல்வெட்டித்துறை ஆதிகோவில் கடற்கரையில் கரையொதுங்கியிருக்கிறது. இந்தப் படகின் இயந்திரம் பழுதாகியதால் காற்றில் அடித்து வரப்பட்டு கரையொதுங்கியதாக கரையொதுங்கிய மீனவர்கள் தெரிவித்தனர். இவர்களை சொந்த இடத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருப்பதாக ஆதிகோவில் பகுதி மீனவர் சங்கம் தெரிவித்தது.



இது குறித்து மேலும் தெரிய வருவதாவது;

நேற்று அதிகாலை றோலர் ஒன்று கரையை நோக்கி அடித்து வரப்பட்டுக்கொண்டிருப்பதையும் கடலின் கரையில் உள்ள பாறையொன்றில் சிக்குண்டு த்தத்தளித்துக் கொண்டிருப்பதையும் கரையில் நின்ற மீனவர்கள் அவதானித்திருக்கின்றனர். அங்கு சென்று விசாரித்த போது தாங்கள் காலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் படகின் இயந்திரம் பழுதாகி விட்டது என்றும் தெரிவித்தனர். படகில் 5 மீனவர்களும் மீன்பிடி வலைகள், உபகரணங்கள் என்பன்வும் காணப்பட்டதாகவும் இதனையடுத்து படகில் இருந்தவர்களுக்கு உதவிசெய்து அவர்களை கரைக்கு கொண்டுவந்தாகவும் ஆதிகோவில் மீனவர்கள் தெரிவித்தனர். கரையொதுங்கிய மீனவர்களின் பெயர் விவரம் வருமாறு –

பிர சாந்த (வயது 45), சசீத் மதுசாந்த (வயது 36), சுஜீத் பிரியந்த (வயது 41), ஜனுசாந்த் (வயது–35), பிரதீப் குமார (வயது 26) ஆகியோரே கரை யொதுங்கியவர்கள் ஆவர். (ஒ–109–108)

# செய்திகள்

## ஜனாதிபதியின் சுவரொட்டியால் பெரும் சர்ச்சை

யாழ்ப்பாணம், நவ. 29
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர் ஒருவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கு ஆதரவான சுவரொட்டிகள் ஒட்டியமை தெற்கில் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.
புத்தளத்தில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.
வீதி அபிவிருத்தி அதிகார சபையினால், ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர், சுவரொட்டிகளை ஒட்டும்போது, செய்தியாளர் ஒருவர் அதனை வீடியோ எடுத்துள்ளார்.
குறித்த ஊழியர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆடையை அணிந்து கொண்டே சுவரொட்டிகளை ஒட்டியுள்ளார்.
இதனை வீடியோ எடுத்த செய்தியாளரிடம், மேலதிகாரிகளின் பணிப்புக்கு அமையவே இதனைச் செய்வதாக அந்த ஊழியர் குறிப்பிட்டுள்ளார். இதனைச் செய்யாவிடின் தனது வேலைக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும் குறித்த ஊழியர் தெரிவித்துள்ளார். இதனை கொழும்பிலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி வியாழன் இரவு ஒளிபரப்பியிருந்தது.
இது கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. (த-5)

## ஹைட் பார்க்கில் மக்களை சந்திக்கிறார் மைத்திரிபால



கொழும்பு, நவ, 30
எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் முதலாவது மாபெரும் மக்கள் சந்திப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையில் கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெறவுள்ளது.
இது தொடர்பிலான அறிவித்தல்கள் கொழும்பு நகர் முழுவதிலும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.
இந்த அறிவித்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் முதலாவது மாபெரும் மக்கள் சந்திப்பு எதிர்வரும் 2ஆம் திகதி பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும், இதில் மாதுளுவாவே சோபித தேரர், மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மனோ கணேசன், சரத் பொன்சேகா மற்றும் ஏனைய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உரையாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் ஏகாதிபத்திய ஜனாதிபதி முறை, குடும்ப ஆட்சி, இராணுவ ஆட்சி, பொதுச் சொத்துக்களை சூறையாடுதல் போன்ற பல்வேறு விடயங்கள் இந்த நிகழ்வில் பேசப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-10)

## சொகுசு பஸ்ஸுக்குள் இரண்டு கிலோ கஞ்சா

யாழ்ப்பாணம், நவ 30
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் சொகுசு பஸ்ஸினுள் 2 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக யாழ். தெரிவித்தனர்.
நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் யாழ்.நீதிமன்றத்துக்கு அருகில் பஸ் சென்று கொண்டிருந்தபோது யாழ்.பொலிஸார் பஸ்ஸை இடைமறித்துச் சோதனை நடத்தினர்.
இதன்போது பின் இருக்கையில் மூடப்பட்ட நிலையில் இருந்த 2 கிலோ கஞ்சா மீட்கபபட்டுள்ளது.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்தே இந்தக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. (த-106)

## சரசாலை அம்பாள் ஆலயத்தில் திருடப்பட்டது கவரிங் நகைகளே

தென்மராட்சி, நவ.30
சரசாலை வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்தில் ஆலய மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கவரிங் நகைகளே திருட்டுப் போயுள்ளதாக ஆலய பரிபாலன சபைச் செயலாளர் விஜயகுமார் தெரிவித்தார்.
இது குறித்து அவர் கூறுகையில், ஆலயத்தில் அடியார்களால் நேர்த்திக்காக வழங்கப்படும் தங்க நகைகள் ஏற்றுக்கொள்வதில்லை என அறிவித்துள்ளதால் நேர்த்திக் காணிக்கையாகத் தங்க முலாம் பூசப்பட்ட கவரிங் நகைகளே வழங்கப் படுகின்றன. அவை அம்பாளுக்குச் சாத்திவிட்டு அர்த்த மண்டபத்தில் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்தன. அதையே திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர். பொலிஸ் நிலையத்தில் கவரிங் நகைகளே திருட்டுப் போயுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளோம்-என்றார். (த-9)

## பாவற்குளத்துக்கு அருகில் வசிப்போருக்கு எச்சரிக்கை

வவுனியா, நவ 30
வவுனியா பாவற்குளம் வான் பாயத் தொடங்கியுள்ளதால் நீர் வளத்தைக் கருத்தில் கொண்டு வான் கதவுகள் திறக்கப்படும்.
எனவே குளத்தின் கீழான தாழ் நிலக் குடியிருப்பாளர்களை முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு வவுனியா இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.
இதன்படி, கிறிஸ்தவகுளம், கந்தசாமி நகர், மீடியா பார்ம், மனிக்பார்ம், யுனிற் நான்கு ஆகிய கிராமங்களுக்கே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக, 844குடும்பங்களைச்சேர்ந்த2ஆயிரத்து 865 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 4 இடைத் தங்கல் முகாம்களில் இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. (த)

## ஜனரஞ்சகம்

## ரிலாக்ஸா வாசியுங்க





*இன்றைய பேஸ்புக் தத்துவம்*

நல்லவனாய் இரு.
ஆனால் அதை நிரூபிக்க முயற்சி செய்யாதே
அதைவிட முட்டாள்தனமான விடயம்
எதுவும் இல்லை.



ஒரு மத நல்லிணக்கக் கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொண்டேன். நான் அமர்ந்த இடத்திற்கு பல மத குருமார்கள் வந்தனர்.
இந்து மதகுரு : ஈசன் அருளால் நீ இன்று நடப்பாய்.
எனக்குக் கை, கால் எல்லாம் நன்றாகத்தானே இருக்கின்றது. இவர் ஏன் இப்படிச் சொல்கிறார்?
பாதிரியார்: கர்த்தரின் அருளால் நீ இன்று நடப்பாய்.
எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.
மௌலவி: அல்லாஹ்வின் பெயரால் நீ இன்று நடப்பாய்
நான்: ...?????????????
நல்லா இருக்கின்ற என்னை, நடப்பாய். நடப்பாய் என்று சொன்னதால் கடுப்பாகி விட்டேன். இதற்கு மேல் இங்கு இருக்க முடியாது என்று வீட்டுக்குப் புறப்பட்டேன்.
அங்கே.... அடங் கொய்யால... நிறுத்தியிருந்த என் மோட்டார் சைக்கிளைக் காணவில்லை.

## அசத்தும் நீலிமா ராணி



தெலுங்குப் படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் நீலிமா ராணி. அதன் பின்னர் தமிழுக்கு வந்தார். சின்னத்திரை, சினிமா என்று இரண்டிலுமே மாறி மாறி நடித்து வருகின்றார். தற்போது வாணி ராணி, தாமரை தொடர்களில் நடித்து வருகின்றார்.
இதுவரையில் 25 திரைப்படங்கள், 50 சின்னத்திரைத் தொடர்களிலும் நடித்துள்ளார். ராதிகா சரத்குமாரின் ராடன் நிறுவன தயாரிப்பு சின்னத்திரைத் தொடர்களில் மாத்திரம் தற்போது நடித்து வருகின்றார்.
அதுக்குள் 25 படங்கள், 50 சீரியல்கள் நடித்து முடித்து விட்டேன். இதைத் திரும்பிப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கின்றது. அதில் இரண்டு திரைப்படங்களுக்கு தேசிய விருதும் வாங்கி விட்டேன். ராதிகா சரத்குமார் எனக்கு கடவுள் மாதிரி.
நான் கஷ்டப்படும் ஒவ்வொரு தருணத்திலும் எனக்கு உதவி செய்துள்ளார். வாழ்க்கையில் மிகச் சிறந்த வழிகாட்டியாக அவர் இருந்துள்ளார். நான் ராடன் நிறுவனம் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களின் தொடர்களில் நடிப்பதற்கு நேரம் இல்லை என்றார்.



கட்டுரை

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நிராகரிக்கவும் தயாராகவேண்டும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள முக்கியமான இரு வேட்பாளர்களும் இன்று தமது பரப்புரைகளை ஆரம்பிக்கின்றார்கள். தமது எதிர்கால அரசியல் திட்டங்கள், கொள்கைகள் குறித்த அறிவிப்பை - தேர்தல் விஞ்ஞாபனத்தை - அவர்கள் இன்னமும் விடுக்க வில்லை என்றாலும், இந்தத் தேர்தலில் அவர்களின் முக்கிய பேசு பொருள்களில் ஒன்றாகவேனும் தமிழர் பிரச்சினை - இனப் பிரச்சினை - இருப்பதற்கான அறிகுறி எதுவும் இதுவரையில் வெளிப்பட வில்லை.

மஹிந்த சிந்தனை -3 வெளியிடப்படும்போது இனப் பிரச்சினைக்கான தீர்வு அதில் முக்கிய இடம்பெற்றிருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஏற்கனவே வெளியான பாகம் ஒன்று, பாகம் இரண்டு என்பவற்றிலும் அரசியல் தீர்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், ஜனாதிபதித் தேர்தல் களம் நகர்ந்துகொண்டிருக்கும் போக்கைப் பார்க்கும்போது மைத்திரிபாலவின் தேர்தல் அறிக்கையிலும் அரசியல் தீர்வு ஒரு முக்கிய இடத்தைப் பெறாமலேயே போய்விடக்கூடும் என்ற அச்சம் தோன்றுகின்றது.

மஹிந்தவும் சரி, மைத்திரிபாலவும் சரி சிங்களப் பெரும்பான்மை வாக்குகளின் பின்னாலேயே பயணிக்கப் போகிறார்கள் என்பதற்கான அறிகுறியே இதுவரையில் காட்டப்பட்டிருக்கிறது. சிங்கள-இனவாதமும், நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பும், அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தை நீக்கி 17ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதுமே ஜனாதிபதித் தேர்தல் களத்தில் பேசு பொருளாக இருந்து வருகின்றன. அதற்கு மேல், மஹிந்தவும் மைத்திரியும் ஒருவரை ஒருவர் சாடிக்கொள்வதும் தமது பக்கங்களை நியாயப்படுத்திக் கொள்வதுமாகவே தேர்தல் களம் நகர்கிறது.

தமிழர்களின் பிரச்சினையோ, அரசியல் தீர்வோ, தமிழர்கள் கேட்கும் ஒட்டுமொத்த அரசமைப்பு மாற்றமோ ஜனாதிபதித் தேர்தல் களத்தில் கணக்கிலெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதையும் தாண்டி, இவை பற்றியெல்லாம் பேசுவது தமது தரப்பு வெற்றிகளைப் பாதிக்கக்கூடியது என்றே மஹிந்த தரப்பும் சரி, மைத்திரிபால தரப்பும் சரி கருதிக் கொள்ளும் அபத்தமும்கூடவே நடக்கிறது என்பது வேதனையானது. அது தமிழர்களின் அவலம்.

தெற்கின் இந்த தேர்தல் நிலைப்பாட்டை, அரசியல் யதார்த்தம் அல்லது நியாயம் என்பதாக தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருப்பது எல்லாவற்றையும் விடக்கேடு.

தமிழர்கள் உள்ளடங்கலான சிறுபான்மையினரின் ஆதரவு அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிப்பதற்கு மிக முக்கியம். தனிச் சிங்கள வாக்குகளால் மட்டுமே ஒருவர் ஜனாதிபதியாகிவிட முடியாது என்பதும் நிதர்சனம். அப்படியிருக்கையில் தமது பலத்தின் மீது நம்பிக்கை வைத்து இந்தத் தேர்தலில் அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசமைப்பு என்ற விடயங்களை முக்கிய பேசுபொருளாக மாற்ற தமிழர்கள் ராஜதந்திர ரீதியில் காய்களை நகர்த்த வேண்டும். அவற்றை ஏற்றுக்கொள்ளாத, முக்கியமாகக் கருதாத எந்தவொரு வேட்பாளரையும் தமிழர்கள் மற்றும் சிறுபான்மையினர் அடியோடு நிராகரிப்பதற்கும் தயாராக இருக்க வேண்டும். இரு வேட்பாளர்களும் அதற்கு மறுக்கும் பட்சத்தில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலையே நிராகரிக்கவும் தயாராகவேண்டும்.

# அலரி மாளிகையில் தடல்புடலான விருந்துபசாரங்கள், அரவணைப்புகள்

கந்தவனம் கோணேஸ்வரன்

மூன்றாவதுமுறையும் ஜனாதிபதியாவதற்கு மஹிந்த ராஜபக்ஷ பகீரதப்பிரயத்தனம் செய்து வருகிறார். . அரச ஊழியர்கள், வேறுதுறைசார் உழைப்பாளிகள் ஆகியோரைப் பகுதிபகுதியாக அலரிமாளிகைக்கு அழைத்து அன்புகாட்டுகிறார்.

அமைச்சர்கள், அவர்களை வரவேற்று உரையாற்றுகிறார்கள். அங்கு அவர்களுக்கு ஆற்றப்படும் உரைகளின் பெரும்பகுதி ஜனாதிபதியின் சிறப்பியல்புகள் தொடர்பாகவே அமைகின்றன. அதன்பின் ஜனாதிபதியின் சாதனைகள் பற்றிய விவர ணப்படம் திரையிடப்படுகிறது. பின்னர் அவர்கள் அனைவருடனும் ஜனாதிபதி தனித்தனியாக உரையாடுகிறார்.

அது ஒரு ஜனநாயகத்தின் முன்னேற்றகரமான அம்சம்தான். நல்லாட்சி முறைமையின் சிறப்புத்தான். ஆனால், தேர்தல்காலங்களில் பரப்புரை உத்திகளாக இது பயன்படுகிறதே.

மஹிந்த ராஜபக்ஷ இந்தப் பதவிப் போரில் நிச்சயம் வென்றாகவேண்டும் என்ற நிலையிலிருக்கிறார். வெற்றிமீதான நம்பிக்கையும் மக்களின் வாக்கு ஆதரவைப் பெற அவர்களை வளைத்துப் போட்டுவிடலாம் என்ற சிந்தனையும் அவருக்கு.

இந்தப் பதவிப்போரில் ஒருவேளை ஜனாதிபதி தோற்கடிக்கப்படுவாராயின் இலங்கை வரலாற்றில் மக்களால் தோற்கடிக்கப்பட்ட முதலாவது ஜனாதிபதியாக மஹிந்தவே இருப்பார். எனவே எப்பாடுபட்டாலும் பதவியை இன்னுமொரு முறை உறுதிசெய்து கொள்வதற்காக தமது அதிகாரசக்தியையும் அரசவளத்தையும் அவர் உச்ச அளவில் பயன்படுத்தவே முயல்வார் என்பது நிச்சயம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிப்பு என்பது ஜனாதிபதியை மட்டும் சார்ந்தவிடயம் அல்ல. அதற்கேதுவாக அரசமைப்பில் திருத்தங்கள் செய்யப்படல்வேண்டும். அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் நாடாளுமன்றத்தில் கிடைக்கவேண்டும். தேவைப்படின், பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்புக்கூட நடத்தவேண்டி வரலாம் என்று ஜனாதிபதி மஹிந்த கூறியிருக்கிறார். இது முற்றிலும் உண்மையான கூற்றுத்தான். தமது சொந்த இலாபத்துக்காக இவ்வளவு நடைமுறைகளையும் கையாண்டுதான் அரசமைப்புக்கான 18ஆவது திருத்தத்தை மஹிந்த கொண்டு வந்தார் என்பதை மக்கள் மறந்துவிட முடியாது.

எனவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறுவது போல ஜனாதிபதி மனமறிந்து பொய்யுரைக்க முனைகிறார் என்றே கொள்ளவேண்டி இருக்கிறது. மீண்டும் விடுதலைப் புலிகள் தலையெடுக்க முனைவதாக சிங்கள மக்களுக்குப் பயம்காட்டி வருகிறார்.

இதேவேளை,நோர்வேநாட்டின் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப்புலிகளுக்குப் பணம், பொருள் என்பவற்றை வழங்கினார் எனவும் அதுபற்றிப் போதிய ஆதாரங்கள் தம்மிடம் இருக்கின்றனவென்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறிய வார்த்தைகள் எரிக் சொல்ஹெய்மைக் கோபமடையச் செய்திருக்கின்றன. தம்மீதான ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு சொல்ஹெய்ம் சூடாகவே உடனடிப் பதில் வழங்கியிருக்கிறார். புலிகளை வழிக்குக் கொண்டு வரும் முயற்சியாக நட்புறவுடன் செய்யப்பட்டவை அவை. இது ஒரு வழக்கமான நடை முறை. இதில் மறைப்பதற்கு ஏதுமில்லை என்று தெளிவாகவே பதில் கூறியிருக்கிறார். தாம் தோற்றுப்போய் விடலாம் என்ற அச்சம் ஜனாதி பதியை ஆட்கொண்டிருப்பதால் ஏற்படுகின்ற விளைவுகளே இவை.

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தே தீருவோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டுப் புறப்பட்ட நீதியான சமூகத்துக்கான இயக்கத்தின் தலைவர் மாதுலுவாவே சோபிததேரர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய பின்னர் அரசியல் மௌனியாகிவிட்டார். தமது எதிர்காலம் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டதுறவிக்கு தொடர்ந்து பேசுவதற்கு நியாயங்கள் எதுவும் இல்லாமல்கூடப் போயிருக்கலாம்.

எனினும், ஜாதிகஹெல உறுமயகட்சி எவரும் எதிர்பாராத விதமாக அரசிலிருந்து வெளியேறியிருக்கிறது. இன்றைய அரசியல் நிலைமைகளுடன் ஒப்பிடும்போது இது ஒரு துணிச்சலான முடிவுதான். அந்தக் கட்சியின் சார்பாக அரசில் அமைச்சர் பதவிகளை வகித்த இரு அமைச்சர்களும்கூடத் தமது பதவிகளைத் துறந்துள்ளனர். இந்த வெளியேற்றம் மஹிந்தவுக்கு கிடைக்கக் கூடிய வாக்குகளிற் பெருமளவானவற்றைத் தடுத்துநிறுத்த முடியா விட்டாலும் அரசியல் பார்வையில் மஹிந்தவுக்கு பெருந் தாக்கத்தை உருவாக்கும் வல்லமை கொண்டது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் பௌத்த மதகுருமார் அரசியலில் நேரடியாகத் தலையிட்டு, நாட்டு மக்களை ஒன்றுகூட்டி, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்திய வேளையில் அவர்களை ஊக்குவித்தவர்கள், அவற்றைப் பொறுத்துக்கொண்டவர்கள் தற்போது அரசுக்கு எதிராக அவர்கள் செயற்பட முனைகையில் அவர்களைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். அண்மையில் தேரர்கள் குறித்து பிரதமர் ஜயரட்ன வெளியிட்ட கண்டனக் கருத்து இதற்கோர் உதாரணம்.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்னதேரர், மாதுலுவாவே சோபித தேரரைப் போல் நடந்துகொள்ள முனையவில்லை. ஜனாதிபதியுடன் கொள்கை அடிப்படையில் மோதிய பின்னர்தான் தமது முடிவை துணிச்சலுடன் எடுத்திருக்கிறார். தமது கட்சியின் கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்க மறுத்ததாலேயே தாம் அரசிலிருந்து வெளியேறியதாக அவர் தெரி வித்துள்ளார்.

தனிமனிதனின் கையிலோ அல்லது அவர்தம் குடும்பத்தினரின் ஆதிக்கத்திலோ ஒரு நாடு நீண்டகாலத்துக்கு இருப்பதை நிதானபுத்தி படைத்த எந்தப் பிரசையும் விரும்பமாட்டான். இன்றைய அரசதரப்பு முன்னெடுப்புகள் மிகப் பெரிய ஜனநாயக மறுப்பாக முடியப்போகிறது என்ற அச்சம் பரவலாக எழுந்துள்ளது. தேர்தல் பரப்புரைகளின்போது இத்தகைய நியாயமான அச்சங்கள் மக்கள் மனதில் பதிய வைக்கப்படுமானால் மஹிந்தவுக்கு எதிரான வாக்குகளாக அவை மாற்றமடைய நிச்சயம் இடமுண்டு.

மஹிந்த பிரமாண்டமானவர் என்பது எவ்வளவு உண்மையோ, அவர் எவராலும் வீழ்த்த முடியாதவர் அல்லர் என்பதும் அதேயளவு உண்மையாகும். இருப்பினும், வியூகங்கள் சரியாக வகுக்கப்பட்டு கவனமாகக் கையாளப்பட்டால் மட்டுமே எதிரணியினரால் மஹிந்தவின் பலத்தைக் குறைக்கவோ அல்லது தோற்கடிக்கவோ முடியும்.

தமிழர்கள் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஜனநாயக மறுப்புகளுக்குப் பழக்கப்பட்டுப் போனவர்கள். ஆகவே, எவர் ஜனாதிபதியாக வந்தாலும் அவர்களால் எதிர்நீச்சல் போடமுடியும். ஆனால், சிங்கள மக்கள் அப்படியன்று. மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக வருவாரானால் ஜனநாயகச் சிதைவுகளையே சிங்கள மக்கள் அனுபவிக்கப்போகிறார்கள். இப்போதிருந்தே திட்டமிட்டால்தான் நாட்டை தனிமனித ஆதிக்கத்திலிருந்து மீட்க முடியும் என்பதைச் சிங்கள மக்கள் புரிந்து கொண்டால் நல்லது.

# விளம்பரங்கள்

# விற்பனைக்கு

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 946 2841 (54488)(5.6.3)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
இரண்டு மாதங்கள் நிரம்பிய உயர்ந் தரக ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தடுப்பூசி போடப் பட்டுள்ளது
(53532)(12.3.6) தொடர்பு: 077 755 6244

### வீடு காணி விற்பனைக்கு
உரும்பிராய் வடக்கில் காணியும், வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 284 0537 (54474)(5.6.3)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
நல்லநிலையில் ஒருகைப் பாவனையில் உள்ளCC 49. TVS.CHAMP மோட்டார் சைக்கிள்விற்பனைக்குண்டு. Petrol 50 kmஇற்கு மேல் வேலைசெய்யும்.
(41566)(12.3) தொடர்பு: 077 978 9752

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
மிகவும் நல்ல நிலையில் உள்ள புதிதாக பெயின்ட் மற்றும் உதிரிப்பாகங்கள் உடைய CBR 250CC JAPAN MOTOR BIKE விற்பனைக்குண்டு.
குறைந்த Milage 340,000/=
(54473) (5.3) தொடர்பு : 077 489 6046

### கட்டடம் விற்பனைக்கு
யாழ்.பலாலி வீதி, திருநெல்வேலியில் புதிதாகக் கட்டப்பட்ட 1500 சதுர அடி கொண்ட 3 மாடிக் கட்டடம் விற்பனைக்குண்டு. Parking வசதிகளும் உண்டு. வாடகைக்கும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 334 4071 (சி/18110)(4.6.3)

### விற்பனைக்கு
இருசக்கரக் கதிரை சில்வர் (Wheel Chair)புதியது, சிமென்ஸ் உயர்ரக இயர்போன் புதியது மலிவு விலையில் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 324 9100 (54487)(5.6.3)

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், நல்லூர், மூத்த விநாயகர் வீதியில் ஒரு பரப்பு 4.50குழி விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
(54489)(5.6.3) தொடர்பு: 077 836 7479

### வீடு விற்பனைக்கு
வேலணை மேற்கில் வீடு விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.
(54456)(12.3) தொடர்பு: 077 620 7141

### TV கள் மலிவு விற்பனைக்கு
Samsung LED 32"
38, 000/=
Samsung LED 24"
29, 000/=
Christmas Offer
With 1 year Warranty
**Market Price**
~~66 000~~ - 38 000/=
~~41 000~~ - 29 000/=
**Contact num- 077 746 7538**
**No-59, Nalliahs Store,**
**Old Park Rd, Jaffna.**
(54502) (4.6.3)

# வேலைவாய்ப்பு

### தேவை
யாழ்.நகரை அண்மித்த பகுதியில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு கணக்கு எழுதுநர், சமையல் உதவியாள் தேவை.
(54493) (4.6.3) தொடர்பு: 075 242 1936

### தேவை
பணவசூலிப்பாளர், வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 0777 722 215
சிவா பிறதேர்ஸ்,கொக்கோகோலா
(54504)(5.6.3) 205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### வீட்டு வேலையாள்கள் தேவை
கொழும்பில் உள்ள எமது வீட்டுக்கு சமையல் உட்பட சகல வேலைகளும் செய்யக்கூடிய ஆண்,பெண் வீட்டு வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 077 089 0306 (54476)(5.6.3)

### பணியாளர்கள் தேவை
பெரிய கடை வீதியிலுள்ள பிரபல ஆடை விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக் குட்பட்ட வர்கள் விரும்பத்தக்கது. சம்பளத்துடன் கொடுப்பனவும் உண்டு.
தொடர்பு: 071 284 2630, 021 492 7002 (41546)(4.6.3)

### Vacancy
கணினியறிவுள்ள Receptionist தேவை.
தொடர்பு:Agoysoft (Pvt) Ltd
077 430 8010 20, K.K.S Road Kokuvil.
(54496) (4.6.3)

### வேலைவாய்ப்பு
Nick Advertaising International புதிதாக ஆரம்பிக்கவுள்ள கிளைகளான யாழ்ப்பாணம், நெல்லியடி, திருகோணமலை, மூதூர் ஆகிய கிளைகளுக்கு வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தகைமை O/L, A/L. எதிர்பார்க்கப்படுகிறது. நேர்முகப் பரீட்சை.
இல.175, முதலாம் குறுக்குத்தெரு,
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 354 8006, 075 674 1731
(54454) (4.6.3)

### பெண் வரவேற்பாளர்
எமது நிறுவனத்தின் மேற்படி பதவி நிலைக்கான நேர்முகத்தேர்வு தற்போது நடைபெறுகிறது. 25 வயதிற்குட்பட்ட நல்ல தொடர்பாடல் திறனும், ஆளு மையும் உள்ள பெண்கள் நேரில் வரவும். (05.12.2014) வரை
நொலேட்ஜ் யூனிவேர்ஸ்
No.626, 1/1, K.K.S.Rd, Jaffna.
(சிரமம)(12.3) 021 320 8342/077 730 2882

# வாடகைக்கு

### வீடு வாடகைக்கு
யாழ்.கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 55(153) பலாலி வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. காரியாலயம், கல்வி நிறுவனம், களஞ்சியம் ஆகியவற்றுக் கும் உகந்தது.
(சி/18111)(4.6.3) தொடர்பு: 077 755 8340

### வீடு வாடகைக்குண்டு
நாவற்குழி, ஏ9 வீதியில், சங்கென் நிறுவனத் திற்கு அருகில் இரண்டு அறை, ஹோல், சமையல்அறை, குளியலறை, மலசலகூடம் அடங்கிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 771 1071 (41599)(4.6.3)

### வாடகைக்கு வீடு தேவை
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 0070209 (544499)(5.6.3)

### அறைகள் வாடகைக்கு
ஸ்ரான்லி வீதியில் அறைகள் வாடகைக்கு. பெண்களுக்கு மட்டும்.
தொடர்பு: 0777 585 412 /075 670 0680
(54463)(5.3)

### வாடகைக்கு
அறைகள் வாடகைக்கு
வெள்ளவத்தையில்
**Hotel Villa City**
**422, Galle Road, Colombo-06**
தொடர்பு: 072 255 2222 (சி/18102)(4.6.3)

### வீடு வாடகைக்கு
நல்லூர் பகுதியில் இரு குளியலறைகள் உட்பட நான்கு அறைகள் கொண்ட சகல வசதிகளுமுடைய வீடு சிறிய குடும்பத்திற்கு /பெண்பிள்ளைகளுக்கு வாடகைக்குண்டு.
தொடர்பு: 071 233 1684 (54506)(5.6.3)

# ஏனையவை

### இணையத் திருமண சேவை
www.Arunthathee.com 31.12.2014 வரை இலவசமாகப் பதியுங்கள். (தரகுப்பணமோ வேறு மறைமுக கட்டணங்களோ இல்லை)
(54495) (4.6.3) தொடர்பு: 077 716 4524

### செல்லா சினிமா யாழ்ப்பாணம்

விஜய், சமந்தா
நடிப்பில்
**கத்தி**
(தினசரி 4 காட்சிகள்)
10.30,2.30,6.30, 9.30
எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்
077 326 6949

### கிரவுன் டயர்
டயர் விற்பனையில் என்றும் முன்னணியில்

இலங்கையில் மிக குறைந்த விலையில்
அதி கூடிய உத்தரவாதம்
KM 40,000 ( Gofoam )
டயர்
உலகின் மிக சிறந்த டயர்
JCB தூக்கி டயர்
டயர் விலை குறைக்கப்பட்டுள்ளது

நீங்கள் இருக்கு இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்
கிரவுன் டயர்
சுகததாச நீச்சல் தடாகம் அருகில்
**077 3134060, 011 2344524**

CEYLON THEATRES
**இப்பொழுது திரையில்**
**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
(Opposite Jaffna Teaching Hospital)


**Platinum** 10.30am, 2.30pm, 6.30pm


**Silver** 10.15am, 2.15pm, 6.15pm


**Bronze** 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

### இலவச சேவிஸ்
புதிய பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஓட்டோ கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு எம்மிடத்தில் இலவச சேவிஸ் செய்து கொடுக் கப்படும்.
இடம் : ஸ்ரீநிதி ஸ்ரீ நகன் லேக்சோப் அன் சேவிஸ்
241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8076

### வாகனம் குத்தகைக்கு அல்லது நீண்ட கால வாடகைக்குத் தேவை
எமது விநியோகத் தேவைக்கு (வடி வாகனம், Super Ace ரக Full Body)வாகனம் குத்தகைக் குத் தேவை. நீண்ட கால அடிப்படையில் தர விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0777 784 314

### ALTO CAR தேவை
நல்ல நிலையிலுள்ள MARUTI ALTO CAR மாதாந்த (6 -12) வாடகைக்கோ அல்லது விலைக்கோ உடன் தேவை.
தொடர்பு:- 0773 62 6230

### விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை

★ பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
★ முக சத்திர சிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- ★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ★ ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- ★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges,Implants)
- ★ வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
- ★ நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- ★ பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

# கல்வி

### Personal Class /Home Visit
A/L கணக்கீடு மாணவர்களுக்கு வீட்டுக்கு வந்து மாணவர்களின் வசதியான நேரங்களில் வகுப்பு எடுக்கப்படும்.
(54471)(5.3) தொடர்பு:075 409 9968

### டொச் / பிரெஞ் வகுப்புகள்
தூதரகப் பரீட்சைக்கான வகுப்புகள்
(54101)(12.3) SUN BRITISH - VAVUNIYA
024 222 6649 / 077 971 3221

### பயிற்சி வகுப்புக்கள்
Maathu Beauty Clinic and Academy யில் நடத் தப்படும் புதிய வகுப்புக்கள் ஆரம்பம். Diploma in Beauty Therapy, Diploma in Hair Dressing, Diploma in Bridal Makeup மற்றும் Mabendy, Nailart, Saree rapping, Hair Style அத்துடன் நீங்களாகவே உங்களை ஒரு வைபவத் திற்குத் தயார்ப்படுத்தல் மற்றும் உங்களை நீங்களே எவ்வாறு அழகாகப் பராமரிப்பது என்பன தொடர்பாக பகுதியாகவும் கற்றுக் கொள்ளலாம்.
(5402)(12.3) தொடர்பு: 077 787 1702

# மணமக்கள்

### மணமகன் தேவை
1988, 8இல் செவ்வாய், பாவம் 64, ரோகினி, யாழ்.பிறப்பிடம் தற்போது வவுனியா வசிப் பிடம், இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை.
(54106)(12.3) தொடர்பு: 077 491 7238

### மணமகள் தேவை
யாழ்.கிறிஸ்தவம்(R.C)
1984,சொந்தத் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. ஜாதகக்குறிப்புக்கள் பார்க்கப்படமாட்டாது.
தொடர்பு: 075 042 7365 (54481)(5.6.3)

### மணமகள் தேவை
கிறிஸ்தவம் ஆண் 12.06.1972 இல் பிறந்த மணமகனுக்கு 30 வயதில் இருந்து 36 வயதிற்கு உட்பட்ட படித்த அழகிய சிவந்த பெண் தேவை. கிறிஸ் தவம் அல்லாதவர்களும் விண்ணப்பிக் கலாம். சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
தொடர்பு: சு.சந்திரசீலன்
பலாலி வீதி, கோண்டாவில்.
தொ.பே.: 077 808 5286
வி.ச.இராமலிங்கர்
மயிலணி, சுன்னாகம்.
077 466 5316
(54477)(5.6.3)

# செய்திகள் / விளம்பரங்கள்



யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது காரில் பயணித்தவர் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினார். நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.(த–14)

## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மேலும் ஒரு சர்வதேச நிபுணர்

யாழ்ப்பாணம், நவ. 30

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க மேலும் ஒரு சர்வதேச நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே 5 பேர் உள்ள நிலையிலேயே புதியவர் ஒருவர் ஜனா திபதியினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஜப்பானைச் சேர்ந்த மொட்டு நொகுசி புதிய ஆலோச கராக கடந்த 26 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விடயப் பரப்பு மாற்றியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க சர்வதேச நிபுணர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக மூன்று ஆணையாளர்களைக் கொண்ட ஆணைக்குழு கடந்த 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நியமிக்கப்பட்டிருந்தது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் இலங்கையின் இறுதிக் கட்டப் போர் தொடர்பான சர்வதேச விசாரணை ஆரம்பமானது. அதே நேரத்தில், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் விடயப் பரப்புக்கள் ஜனாதிபதியினால் மாற்றியமைக்கப்பட்டன. இறு திக் கட்டப் போரில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பிலும், உள் நாட்டு பொறிமுறையினூடாக விசாரணை மேற்கொள்ளும் வகையில் அது மாற்றப்பட்டது.

மேலும் புதிய விடயப் பரப்பினூடாக விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க மூவர் கொண்ட நிபுணர் குழு முதலில் நியமிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேலும் இருவர் நியமிக்கப்பட்டனர். தற்போது புதிதாக ஒருவரை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

(த–5)

## கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் மீட்பு

யாழ்ப்பாணம்.நவ.30

கடலில் தத்தளித்த நிலையில் மீட்கப்பட்ட இந்திய மீனவர்கள் இன்னும் 3 தினங்களில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பதில் துணைத் தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க வந்த 3 மீனவர்கள் இரண்டு தினங்களாக கரை திரும்பாத நிலையில் உறவினர்கள் கடல் வளத்துறை அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்திருந்தனர். எனினும் மீனவர்கள் படகு பழுதடைந்தடைந்தமையால் காற்றுக்குள் அகப்பட்டு இரண்டு தினங்களாகக் கடலி லேயே இருந்துள்ளனர்.

இதன்போது இலங்கைக் கடற்படையினர் மீனவர்களையும் படகையும் மீட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸாரினால் மீனவர்கள் இந்தியத் துணைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இது தொடர்பில் பதில் துணைத் தூதுவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

மீனவர்களின் படகு பழுதடைந்துள்ளதால் அதனைத் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் மீனவர்கள் இரு நாள்கள் கடலுக்குள் இருந்தமையால் உடல் நலம் பாதிப்புற்று வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டு துணைத் தூதரகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் இரு தினங்களில் இவர்கள் கடல் வழியாக அவர்களது இடத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர்–என்றார்.

(த–14–109–108)

### இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயிலின் முன்னாள் நிர்வாகசபைத் தலைவர்

**துரையப்பா கனகசபை**

அவர்கள் 26.11.2014இல் மறைந்ததையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடைகிறோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் எமது கவலைகளையும் பகிர்ந்து கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அத்தியடி பிள்ளையாரை வேண்டிநிற்கின்றோம்.

நிர்வாக சபை,

(சி17921) (12.3.6) **யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில்.**

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னப்பு கனகரத்தினம்

(ஐயாத்துரை) - புங்குடுதீவு - 12

(முன்னாள் தலைவர் - புங்குடுதீவு கிழக்கு, தல்லையபற்று அருள்மிகு ஸ்ரீ சங்கரமூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தானம், பிரபல வர்த்தகர் - மத்துகம)

திதி: 30.11.2014 - ஞாயிற்றுக்கிழமை

மலர்வு 18.11.1929

உதிர்வு 21.11.2012

இன்றைய தினம் (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை எமது அன்புத் தந்தையின் ஞாபகார்த்தமாக புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலயத்தில் விசேட பூசை ஆராதனைகளும் அன்னதான வைபவமும் இடம்பெறும்.

அனைவரும் கலந்து கொள்க.

புங்குடுதீவு - 12. (54492)(12.3) திருமதி ஜெயமலர் சோமஸ்கந்தராஜா (மகள் - சுவிஸ்)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருப்பாலசிங்கம் துவாகரன் (துவா)**

தோற்றம் 06 ★ 06 ★ 1990



மறைவு 11 ★ 12 ★ 2013

மகனாய் வந்துதித்த மாம்பழமே- எமக்கு
வகையாய் பணிபுரிந்த தேனமுதே
தொகையாய் உன் நினைவு வாட்டுதிங்கே.
தூக்கம் கெடும் போது கொல்கிறது உன் நினைவு.
தூங்கி எழும்போது கனக்கிறது எம் இதயம்
கட்டிய கோட்டை கற்பனையாகி விட்டதே.
நீங்காத நினைவு தந்து நீண்ட தூரம் சென்றனையோ
வாழ்ந்த காலம் தன்னை வசந்த காலமாக்கினாயே
காலன் ஏன் உன்னை கண்வைத்தான்.
மருத்துவமே இன்னும் கண்டறியாத நோய் தன்னை
உன் சரீரத்துக்கு ஏன் கொடுத்தான்
உன்னைப்போல் ஒரு பிள்ளை யாருக்கும் கிடைத்ததில்லை.
என்னைப் போல் பாவி இங்கு யாரும் இருந்தது இல்லை.
என்ன சொல்லி ஆறுவேன் இனி எவர் சொல்லித் தேறுவேன்.
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம் எங்கள்
அன்பின் உறைவிடமே மீண்டும் நீ எம்மடியில்
வர உனை பூஜித்துக் காத்திருக்கும்

(54108) **குடும்பத்தினர்.**

### ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்



26.11.2014 சதுர்த்தி தினத்தில் அமரத்துவமடைந்த அத்தியடி பிள்ளையார் கோயிலின் முன்னாள் நிர்வாகசபையின் சிறந்த தலைவராகவும், ஆலய வளர்ச்சிக்கு முழுமூச்சாக செயற்பட்டவரும் மக்களின் அதிக நன்மதிப்பைப் பெற்றவரும், சைவ சமய ஆசாரசீலருமான

**துரையப்பா கனகசபை**

அவர்களின் ஆத்மா விநாயகர் பாதகமலத்தில் சாந்தியடைய பிரார்த்திக்கிறோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள் மற்றும்
மக்கள் மருமக்கள் குடும்பத்தினர்,
பிள்ளையார் கோயில் அத்தியடி, யாழ்ப்பாணம்.
(54494) (12.3.6)

### 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சுப்பையா தட்சணாமூர்த்தி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மண்ணில் 01.08.1933

விண்ணில் 07.12.2008

அன்புத் தெய்வம் அப்பாவே!
மறைந்தும் மறையாத எங்கள் குடும்ப
விளக்கு நீங்கள்
ஆறு ஆண்டுகள் சென்றால் என்ன
ஓராயிரம் ஆண்டுகள் சென்றால் என்ன
உங்கள் அன்பும் பாசமும் எம்மை விட்டு நீங்காது
உங்கள் நினைவுகள் என்றும் எம்
நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்

என்றும் தங்கள் நினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**
**இணுவில்.**

(51443) (46.3)

# குருதி இன்றி அசையாது உயிர்



உயிர் வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள் எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமானது குருதி. ஓர் உயிர் கலங்கள், இழையங்களால் ஆன ஓர் அமைப்பு. இவை ஒவ்வொன்றுக்கும் தேவையான ஒட்சிசன், விற்றமின்கள், கனியுப்புகள் மற்றும்போசணைக்கூறுகள் அனைத்தையும் எடுத்துச் செல்வதில் அல்லது கடத்துவதில் கருவியாக அமைவது இந்தக் குருதியாகும்.
குருதியானது, திரவவிழையம், கலங்களைக் கொண்ட ஒரு பாயமாகும். திரவவிழையமானது, போசணைப் பதார்த்தங்களை உள்ளடக்கியது. இவற்றின் மூலம் தான் மனித உடலில் அமைந்திருக்கும் உடல் இழையங்களுக்கு தேவையான விற்றமின்கள், கனியுப்புகள் மற்றும் போசணைப் பதார்த்தங்கள் விநியோகிக்கப்படுகின்றன. நாம் உண்ணும் உணவுப் பதார்த்தங்கள் சமிபாட்டுத் தொகுதியால் அகத்துறிஞ்சப்பட்டு குருதியில் சேர்க்கப்படுகின்றது.
இவ்வாறு குருதியில் சேரும் போசணைப் பதார்த்தங்கள் தான் குருதியினால் எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.
குருதியின் அடுத்த கூறாக குருதிக்கலங்கள் காணப்படுகின்றது. இது செங்குருதிக்கலம், வெண்குருதிக்கலம், சிறு தட்டு என மூன்று வகையான கலங்களை உள்ளடக்கியது. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான தொழிற்பாடுகளை ஆற்றுகின்றன. அத்துடன் வேறுபட்ட வாழ்க்கைக் காலத்தையும் கொண்டுள்ளது.
செங்குருதிக்கலம் உடல் தொழிற்பாட்டுக்கு தேவையான ஈமோகுளோபினை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஈமோகுளோபினின் வீதத்தைத் தீர்மானிப்பது இந்தச் செங் குருதிக் கலங்களாகும். இதன் உற்பத்தி குறைவடையும் போது ஈமோகுளோபினின் வீதமும் குறைவடையும். இதனால் குருதிச் சோகை போன்ற நோய்கள் வரும். உணவு மற்றும் மருந்துகள் மூலம் ஈமோகுளோபின் அதிகரிக்கவைக்கமுடியாவிடத்து இவற்றை நிவர்த்தி செய்வதற்கு அல்லது சிகிச்சை அளிப்பதற்கு தன்னார்வ குருதிக் கொடையாளர்களின் மூலம் பெறப்பட்ட குருதி, பரிசோதனைகளின் பின்னர் இவ்வாறான நோயாளர்களுக்கு குருதி மாற்றீடு செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இது குழந்தைகள் முதல் வளர்த்தவர்கள் வரை செய்யப்படுகின்றது. குருதிச் சோகை ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் சிகிச்சை அழிப்பதற்கு குருதியே தேவைப்படுகின்றது. இது இரத்த வங்கியில் போதியளவில் சேமிப்பில் இருந்தால் தான் இவ்வாறான நோயாளர்களுக்கு சிகிச்சை அழிப்பதற்கு இலகுவாக இருக்கும்.
அடுத்து வெண்குழியமானது நோய்க் கிருமிகளுக்கெதிரான போராடும் கலமாகும். உடலுக்கு தேவையான எதிர்ப்புச் சக்தியை வழங்கும் தொழிலை செய்கின்றது. உதாரணமாக எமக்கு தடிமன் அல்லது பிடிசுரம் ஏற்படுகின்ற போது எந்த விதமான மருந்துகளும் உள்ளெடுக்காமல் தானாகவே குணமடைகின்றது. இது ஒரு வகையான வைரஸ் கிருமியால் ஏற்படுகின்ற நோயாகும். வைரஸ்ுக்கு பொதுவாக மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இவ்வாறான நோய்கள் ஏற்படும் போது எமது உடலிலுள்ள எதிர்ப்புச் சக்தி காரணமாகவே குணமடைகின்றது.
அடுத்து குருதியின் முக்கிய கலமாக குருதிச் சிறுதட்டு காணப்படுகின்றது. இதன் வாழ்க்கைக் காலம் 5 நாள்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவை கருவற்ற சிறிய தட்டுருவான கலங்கள் ஆகும்.
எமக்கு விபத்துகள் மூலம் காயம் ஏற்படுகின்ற போது காயத்தின் ஊடாக தொடர்ச்சியாக குருதி வெளியேறுவதை தடுக்கின்ற வேலையை இந்தச் சிறுதட்டு செய்கின்றது. காயம் ஏற்பட்ட பகுதியில் பைபிரினோஜன் என்ற புரதத்தை கொண்டு பைபிரின் என்ற வலையை உருவாக்கி தொடர்ச்சியான குருதிக் கலங்களின் வெளியேற்றத்தை ஒரு வலையின் தொழிற்பாட்டின் மூலம் தடைசெய்கின்றது.
இது குருதியில் அண்ணளவாக 150,000–450,000 எண்ணிக்கையில் காணப்படுகின்றது. இதன் எண்ணிக்கை பல காரணங்களினால் குறைவடைகின்றது. உதாரணமாக டெங்குக் காய்ச்சல் ஏற்படுகின்ற போது சிறு தட்டுகளின் எண்ணிக்கை குறைவடைய வாய்ப்புள்ளது. டெங்கு ஒரு வகை வைரஸினால் ஏற்படுகின்ற ஒரு நோயாகும். இதற்கும் இதுவரை மருந்து கண்டுபிடிக்கவில்லை. இதற்கும் சிகிச்சை அழிப்பதற்கு குருதி இன்றியமையாததாகும். அதாவது டெங்கு தாக்கிய ஒருவரது சிறுதட்டு, குருதிப் பரிசோதனையின் மூலம் அறியப்பட்டு அசாதாரண நிலைமையை அடையும் போது வைத்திய நிபுணரின் அறுவுறுத்தலுக்கு ஏற்ப தன்னார்வ குருதிக் கொடையாளியின் குருதி சிறுதட்டு பெறப்பட்டு குறிப்பிட்ட நோயாளருக்கு வெளியிலிருந்து சிறுதட்டு ஏற்றப்படும் விதமான சிகிச்சை முறை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. சிறுதட்டு இன்னும் பல காரணங்களினாலும் குருதியில் குறைவடைவதற்கு வாய்ப்புள்ளது. அதாவது புற்று நோயாளர்களுக்கும் இவ்வாறான நிலை ஏற்படுகின்றது. அவர்களுக்கும் சிறுதட்டு குருதிக் கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்டு வழங்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றது. இவ்வாறு குருதிக் கொடையாளர்களிடமிருந்து சிறுதட்டு பெறப்படும் பொறிமுறையானது Apheresis என அழைக்கப்படுகின்றது. இதன் பொறிமுறையினூடாக 13 இற்கு மேற்பட்ட குருதியின் கூறுகளை பிரித்தெடுத்து நோயாளர்களுக்கு வழங்கலாம். யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை இரத்த வங்கியில் சிறுதட்டு குருதிக் கொடையாளர்களிடமிருந்து பிரித்தெடுக்கும் நடைமுறையும், நோயாளர்களும் Plasma pheresis செய்யும் பொறிமுறை மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் தேசிய குருதி மற்றும் பிரயோக சேவை நிலையத்தில் ஏனைய பொறிமுறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் இரத்த வங்கியில் 100 இற்கு மேற்பட்ட குருதிக் கொடையாளர்களிடமிருந்து 250 தடவை Apheresis மூலம் குருதிச் சிறுதட்டு பெறப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு குருதிச் சிறுதட்டை வழங்கியுள்ளோம். தொடர்ந்து வழங்கி வருகின்றோம். இந்த பொறிமுறைக்காக பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் பை பெறுமதி கூடியது. அண்ணளவாக ஒரு தடவை Apheresis செய்ய ரூபா 25,000 செலவாகும் என கணிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு தியாகம் நிறைந்த குருதிக் கொடையாளர்களின் ஒத்துழைப்பு முக்கியமானது.
அவர்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் இதற்கான சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். இதை எவரும் உணர்ந்து கொள்வது இல்லை. இந்தக் காலத்தில் சாதாரணமாக இரத்ததானம் செய்வதற்கே அச்சப்படும். சிறுதட்டை வழங்குவதற்கு முன்வருகின்ற குருதிக் கொடையாளர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். ஒரு பொறிமுறையை செய்து முடிக்க கிட்டத்தட்ட 72 நிமிடங்கள் குறிப்பிட்ட குருதிக் கொடையாளி Apheresis இயந்திரத்துடன் நேரத்தைக் கழிக்க வேண்டியுள்ளது. இது எவருக்கும் தெரிவதில்லை. ஆகவே இவ்வாறானவர்களை நாம் மதிக்கும் போது தான் மேலும் பல குருதிக் கொடையாளர்களை உருவாக்கி இவ்வாறான மருத்துவ சேவையை மக்களுக்கு வழங்க முடியும் இவற்றை வாசிக்கின்ற போது குருதியின்றி அசையாது உயிர் என்ற உணர்வு எமக்கு ஏற்படுகின்றதல்லவா?

த.ரவினதாஸ்,
*பொது சுகாதார பரிசோதகர்*
*பிராந்திய இரத்த நிலையம்*
*போதனா வைத்தியசாலை*
*யாழ்ப்பாணம்.*

## நீரிழிவு நோயாளியின் உடல் மெலிவதற்கும் அதிகரித்த பசிக்குமான காரணங்கள்

கேள்வி :– நான் ஒரு நீரிழிவு நோயாளி. நான் போதியளவு உணவு உள்ளெடுத்த போதும். உடல் மெலிவும் அடிக்கடி பசியும் உண்டாகின்றது. இதற்கான காரணங்களைக் கூறுவீர்களா?

காந்தன் –

பதில்:– உடல்களுக்குள் சுரக்கப்படும் அறிவுக்கு எட்டிய பல ஹர்மோன்களில் இன்சுலினும் ஒன்று. இது சதையினால் சுரக்கப்படுகிறது. இதன் பணிகள் பல.

1. குருதியில் வெல்ல மட்டத்தைக் கட்டுப்படுத்தல்
2. உடல் வளர்ச்சியைப் பேணுதல், இழையங்களின் வளர்ச்சியைப் பேணுதல், கவனித்தல்.
3. மாப்பொருளைச் சேமித்து வைத்தல்.
4. புரதச் சத்தையும், கொழுப்புச் சத்தையும் உருவாக்க உதவுதல்.
5. குருதியில் உள்ள குளுக்கோசை சக்திக்காக பயன்படுத்துவதை அதிகரித்தல் இவை போன்ற பல பணிகளுக்கு இன்சுலின் உதவுகின்றது.

எனினும் உங்களுக்கு குருதியில் வெல்ல மட்டம் கூடிய நிலையில் இருந்தாலும். இன்சுலின் சுரப்புக் குறைவு, ஆற்றல் இன்மை ஆற்றலில் வீரியக் குறைவினால் கலங்களுக்குள், இழையங்களுக்குள் குளுக்கோஸ் நுழைய முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் உடலுக்குத் தேவையான சக்தியை எமது உடலில் சேமித்து வைத்திருக்கும் கொழுப்பில் இருந்து பெற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் கொழுப்புக் கரைகிறது. உடல் மெலிகிறது.
மேலும் குருதியில் அதிகளவு குளுக்கோஸ் இருக்கும் போது அவை சிறுநீர் வழியாக வெளியேறும், இதன்போது உடலிலுள்ள நீர்ச்சத்தும் சிறுநீருடன் வெளியேறுகிறது. உடல் மெலிவு ஏற்படுகிறது.
எமது உடலில் இன்சுலின் பற்றாக்குறையினால் கலங்கள், இழையங்கள் வளர்ச்சியை கவனிக்க முடியாமை, மாப்பொருளைச் சேமித்து வைக்க முடியாமை, புதிதாக கொழுப்பு புரதச்சத்துக்களை உருவாக்க முடியாமை போன்றவற்றாலும் உடல் மெலிவடைகிறது. நீரிழிவு நோயின் பாதிப்பு அதிகமாக உள்ள போது உடலுக்கு வேண்டிய குளுக்கோஸ், புரதச் சத்துக்கள், சிறுநீருடன் வெளியேறுகின்றன. இதனாலும் உடல் மெலிந்து எடை குறைகின்றது.
நீரிழிவு நோயாளிகளுக்கு குருதியில் அதிகளவு குளுக்கோஸ் இருந்தாலும் அதனால் அவர்களுக்கு பலன் இல்லை, இன்சுலின் சுரப்புக் குறைவு, அதன் ஆற்றலில் வீரியக் குறைவினால் இக் குளுக்கோஸ் கலங்களுக்குள், இழையங்களுக்குள் செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது இதனால் கலங்களும் இழையங்களும் தங்களுக்கு உணவு தேவை என்ற செய்தியை மூளைக்கு அடிக்கடி அனுப்புகின்றன. உடனே மூளை பசியைத் தூண்டும் செயற்பாட்டைச் செய்கிறது. இதனால் அவர்களுக்கு அடிக்கடி பசி உண்டாகிறது.
எனவே நீரிழிவு நோயாளியின் எல்லாச் சிக்கல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணி குருதியிலுள்ள குளுக்கோசின் அளவே. எனவே குருதியில் குளுக்கோசின் நிலைகளை சராசரி அளவுக்கு எவ்வளவு நெருக்கமாக வைத்திருக்க முடியுமோ அந்த அளவுக்கு நெருக்கமாக வைத்திருப்பதற்கு முயற்சியுங்கள்.

எஸ். சுதாகரன்,
*தாதிய உத்தியோகத்தர்,*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.*

# ஜோதிடம்

# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 02.11.2014 - 2017



### 27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

## கடகம்



*கடகராசி நேயர்களே!*

கடக ராசிக்காரர்களுக்கு பெரியோர்கள் மீது மரியாதையும், சாந்தமும் சகிப்புத் தன்மையும் கடவுள் பக்தியும் அதிகம் இருக்கும். நடுத்தர உயரம் கொண்ட இவர்கள் சிறுவயதில் ஒல்லியாக இருந்தாலும் வயது ஏற ஏற உடல் பெருத்து உருண்டு திரண்ட அங்க அமைப்புக்களுடன் குண்டாகக் காணப்படுவார்கள். இவர்களுக்கு கூர்மையான மூக்கும் உயர்ந்த நாசியும், அழகான உதடுகளும் அழகான வில் போன்ற புருவங்களும் அமைந்திருக்கும். பேச்சில் உறுதியிருந்தாலும் மெல்லிய குரலில்தான் பேசுவார்கள். பார்வையில் ஓர் அழகு இருக்கும். நல்ல ஞாபகசக்தியும் அறிவாற்றலும் பெற்றிருப்பர். கடக ராசியில் பிறந்தவர்கள் வாழ்வில் உயர்ந்த லட்சியங்களைக் கொண்டவர்கள். சுறுசுறுப்பாகச் செயல்பட்டு எதையும் திறமையுடன் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். எல்லோரிடத்திலும் சுமுகமாகப் பழகி எதையும் எளிதில் கிரகித்துக் கொள்வார்கள். எந்த ஒரு காரியத்திலும் தீர ஆலோசித்து செயல்படும் இவர்கள் துணிந்த பின் துயரம் இல்லை என்ற சொல்லுக்கேற்ப நண்டு பிடிபோட்டு செய்து முடிப்பார்கள். இரக்க குணமும் எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவராகவும் இருந்தாலும் எதையும் முன் கூட்டியே அறிந்து செயல்படுவார்கள். ஜல ராசிகள் என்பதால் கற்பனைத் திறன் அதிகமாயிருக்கும். நல்ல ஞாபக சக்தியும் உண்டு. இவர் களிடம் பழகுவது கடினம் என்றாலும் பழகியபின் பிரிய முடியாது. தன்னை நம்பியவர்களுக்கு எல்லாவித உதவிகளும் செய்வார்கள். இதனால் அடிக்கடி ஏமாந்து போவதும் உண்டு. பிடிவாத குணம் கொண்டவர்கள். என்னதான் தியாக மனப்பான்மை இருந்தாலும் வாக்களித்தவர்களையும் சொன்னதைச் செய்ய மறந்தவர்களையும் வற்புறுத்தித் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வார்கள். கள்ளங்கபடம் இன்றி வெளிப்படையாகப் பேசும் வெகுளித்தனம் உள்ளவர்கள் என்பதனால் இவர்களால் பிறருக்கு எந்தவித இடையூறும் ஏற்படாது. பிறர் விருப்பத்துக்கு மதிப்பு கொடுக்காமல் தங்களுடைய கருத்துகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவதால் பலரின் வெறுப்புக்கு ஆளாகிவிடுவார்கள்.

கடந்த இரண்டரை வருட காலமாக உமது ராசிக்கு 4இல் அஷ்டமத்து சனி என சஞ்சரித்த சனி 02.11.2014இல் உமது ராசிக்கு பூர்வ புண்ய ஸ்தானமான 5இல் வந்துள்ளார். அவர் 27.01.2017 வரை அங்கு சஞ்சரிப்பார். கடக சின்ன ராசியின் சனி மிகக் கெடுதி செய்வார் என்பது ஆன்றோர் வாக்கு. 4இல் இருந்தபோது அனுபவித்த துன்பங்களில் இருந்து சற்றே விடுபட இடமுண்டு. கருவுற்ற தாய்மார்கள் உடல் நலனைப் பேணுவதில் கூடுதல் கவனம் எடுக்கவேண்டும். உயர் கல்விக்குத் தயாராகும் மாணவர்கள் கவனச் சிதறலின்றி படிப்பது அவசியம். மருத்துவம், பொறியியல், வானிலை ஆய்வு போன்றவை பயில்வோர் நலமெய்துவர்.

சனி பகவானின் 3,7,10 பார்வையினால் உமது ராசிக்கு 7,11,2 ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார். சனி பகவான் உமது ராசிக்கு 7ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் திருமணத் தடை அகலும். ஜென்மராசியில் குரு சஞ்சாரம் செய்வதால் தீமைகளை விரட்டி நன்மையை அழிப்பார். பிரிந்து வாழும் தம்பதிகள் இணைந்து வாழ இடமுண்டு. சிலர் உயர் ஜாதிப் பெண்ணைக் காதல் திருமணம் செய்ய இடமுண்டு. தந்தை மூலம் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். வெளிநாடுகளுக்குச் செல்ல இடமுண்டு. சனி பகவான் உமது ராசிக்கு 11ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலர் காதல் திருமணம் புரிவர். சிறிய தந்தை வழியிலும் மூத்த சகோதரர் வழியிலும் முன்னேற்றம் கிட்டும். பூர்விகத் தொழிலை ஏற்று நடத்த இடமுண்டு. வரவேண்டிய பாக்கிகள் வந்துசேரும். விவாகரத்துப் பெற்றவர்கள் மறுமணம் புரிவர். புத்திரபாக்கியம் கிட்டும்.

சனி பகவான் உமது ராசிக்கு 2ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் வாக்கினால் சீவியம் புரிவோர் மேன்மை அடைவர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | | 8 | | 1 | 7 | | |
| 1 | | 5 | | | | 4 | | |
| 2 | 7 | 3 | 9 | | | | | |
| 8 | | | 2 | 4 | | 6 | | |
| | | 2 | | 9 | | 3 | | |
| | | 1 | | 3 | 7 | | | 8 |
| | | | | | 9 | 5 | 6 | 1 |
| | | 7 | | | | 9 | | 4 |
| | | 4 | 3 | | 6 | | 7 | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 6 | 7 | 4 | 3 | 2 | 9 | 5 |
| 7 | 2 | 9 | 8 | 1 | 5 | 6 | 4 | 3 |
| 3 | 4 | 5 | 2 | 6 | 9 | 8 | 7 | 1 |
| 8 | 1 | 2 | 5 | 9 | 4 | 7 | 3 | 6 |
| 6 | 5 | 4 | 3 | 8 | 7 | 1 | 2 | 9 |
| 9 | 3 | 7 | 1 | 2 | 6 | 4 | 5 | 8 |
| 2 | 7 | 1 | 9 | 3 | 8 | 5 | 6 | 4 |
| 5 | 6 | 3 | 4 | 7 | 1 | 9 | 8 | 2 |
| 4 | 9 | 8 | 6 | 5 | 2 | 3 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதி கள், உப்சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய உங்கள் ராசி

**கார்த்திகை-15 திங்கட்கிழமை | 01.12.2014**

திதி: தசமி மு.இ.11.56 வரை | சுபநேரம்:12.14-01.44 வரை
நட்சத்திரம்: உத்திரட்டாதி பி.இ.02.29 | இராகுகாலம்: 07.44-09.14 வரை

**மேடம்**: கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள். பழைய உறவினர், நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**இடபம்**: சகோதர வகையில் இருந்த மனவருத்தம் நீங்கும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்**: அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

**கடகம்**: எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை வரும். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். எதிலும் அவசரப்பட வேண்டாம்.

**சிங்கம்**: உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை நம்பி சில முக்கிய பொறுப்பை ஒப்படைப்பார்.

**கன்னி**: உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**துலாம்**: எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங் களை மாற்றிக் கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**தனுசு**: புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். கோபம் குறையும். பழைய சிக்கல்களைத் தீர்ப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மகரம்**: உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**கும்பம்**: திடீர் பயணங்கள் இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் பொறுமையுடன் செயற்படப் பாருங்கள்.

**மீனம்**: எதிர்பார்த்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். வெளியூர் பயணங்களால் புதிய அனுபவம் உண்டாகும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள்.

## முன் பள்ளி ஆசிரியர் தேவை

லோட்டஸ் கெல்ப் ஆங்கில முன்பள்ளியில் உங்கள் மழலைச் செல்வங்களை இணைத்து அவர்களின் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்.

* ஒரு வருடத்திற்கு ரூ 3, 500/= மட்டுமே
* தரம் 3-10 வரையான இலவச ஆங்கில வகுப்புகள் நடைபெறுகின்றன.
* மேற்கண்ட ஆங்கில முன்பள்ளிக்கு Diploma Montessori பயிலுகின்ற அல்லது முடித்த ஆசிரியர் (02) இருவர் தேவை.

தொடர்பு:077 600 0367, 077 367 9407

(41548)(4.6.3)

## கல்வி ஆண்டு 2015இற்கான புதிய வகுப்புக்கள்

**தரம் 01 முதல் O/L வரை.**

**டிசம்பர் 6 இல் ஆரம்பம்.**

(சி18046)
(12.3)

*The Express Institute*
Irupalai Junction Kopay

## விற்பனைக்கு

புதிய வடிவமைப்பில் மாபிள் பதித்த (4) நான்கு அறைகளைக்கொண்ட இணைந்த குளியல் அறையுடன் வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.

புங்கன்குளம் வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 321 2019
(சி/17916) (4.6.3)

## தொழில்நுட்பவியலாளர்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு டிஷ் அன்ரனா பிற்றிங்க்ஸ் செய்யத் தெரிந்த Technicians Helper, Salesman மற்றும் Receiver Repairing செய்யத் தெரிந்த Technicians தேவை. திறமைக்குத் தகுந்த சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும். தங்குமிடம், உணவு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

Kumar - **077 7710 785**

(54480)
(12.3.6)

## தரம் 6 இற்கான அனுமதிகள்

**புதிய கல்வி ஆண்டில் தரம் 06 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

**டிசம்பர் 6 இல் ஆரம்பம்.**

(சி18047)
(12.3)

*The Express Institute*
Irupalai Junction Kopay

# விளம்பரங்கள்

## ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும்

இளவாலை, நவ. 30

மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலையின் ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு பாடசாலை அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் இடம்பெறும். பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட்சகோதரி அ.றெஜினாவும் கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் சு. செல்வகுமாரியும் கலந்து கொள்வார்கள். ஆசியுரையை மாரீசன்கூடல் பங்குத்தந்தை யே.அ.அருள்தாசன் நிகழ்த்துவார். (ஒ-ரி)

## பாவித்த வாகனங்கள் விற்பனை

| வாகனத்தின் வகை | எண்ணிக்கை | வாகன உற்பத்தியும் வகையும் |
|---|---|---|
| உழவு இயந்திரம் | 1 | மகேந்திரா புதியது WPRA0378 |
| உழவு இயந்திரம் | 1 | மகேந்திரா புதியது EPRA3598 |
| உழவு இயந்திரம் | 1 | மகேந்திரா புதியது EPJX2825 |
| உழவு இயந்திர இழுவைப்பெட்டி | 1 | மகேந்திரா புதியது WPRV0226 |
| உழவு இயந்திர இழுவைப்பெட்டி | 1 | மகேந்திரா புதியது ERRV1988 |
| உழவு இயந்திர இழுவைப்பெட்டி | 1 | மகேந்திரா புதியது EPJY6614 |
| மோட்டார் சைக்கிள் | 1 | ஹீரோ ஹொண்டா EPJY2651 |
| மோட்டார் சைக்கிள் | 1 | RM100 Waves WPXM3953 |
| மோட்டார் சைக்கிள் | 1 | RM100 Waves WPXM3947 |

வாகனங்களை 01/12/2014 ஆம் திகதி தொடக்கம் 05/12/2014 ஆம் திகதி வரை மு.ப 10.00 இல் இருந்து பி.ப 15.00 வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பார்வையிடலாம். இக்காலப்பகுதியில் கேள்விப்பத்திரங்களை ஒவ்வொரு வாகனத்திற்கும் மீளப்பெறமுடியாத ரூ.1500.00 இனை செலுத்தி (மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு ரூ.500.00) பெறமுடியும். முறையாக பூரணப்படுத்திய விலை மனுக்கோரல் பத்திரங்கள் கடித உறயில் இட்டு மூடியவாறு குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள கேள்விப்பெட்டியில் வைப்பிடவோ அல்லது பதிவுத்தபாலில் 05/12/2014 பி.ப 15.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்படவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வாகனத்தின் பதிவு இலக்கம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒக்ஸ்பாம் ஆனது எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்வதற்கும், நிராகரிப்பதற்கும் உயர்ந்த பெறுமதியைகொண்டதும் தெரிவுசெய்யப்பட்டதுமான விலைமனுப்பத்திரத்தை சமர்ப்பித்த நபருடன் மட்டுமே தொடர்புகொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மனுதாரர் 3 வேலை நாள்களிற்குள் முழுத்தொகையையும் செலுத்தி உரிய ஆவணங்களுடன் எடுத்துச்சென்று புதிய உரிமையாளரின் பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

ஒக்ஸ்பாம் (வடக்கு அலுவலகம்)
கேள்வி சபை
இல. 45/10,யாழ் வீதி, வவுனியா.

(54489)
(12.3.6)

## Holy Cross School of Health Science

### வயோதிபரை பராமரிக்கும் தாதிய பயிற்சி நெறி

பயிற்சி நெறிக்காலம்: 9 மாதங்கள்
பயிற்சி நேர வகுப்புக்கள்:. சனி, ஞாயிறு
(மாதங்களில் இரு

**விண்ணப்பமுடிவுதிகதி: 10.12.2014**

க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை இல.767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு சுயவிலாச மிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்.

தொ.பே இல.021 300 1102

(54414) (4.6.3)

## வேலைவாய்ப்புடன் கூடிய அழகியல் கல்வி பயிற்சி பட்டறை

**சிற்றி அன் கில்ஸ் (City and Guilds) அங்கீகாரம் பெற்ற அழகுகலை அக்கடமியில் தொழில் அங்கீகரத்துடன் இலவச பயிற்சி வகுப்புக்கள் கொழும்பில் நடத்தப்பட உள்ளன.**

பயிற்சிக் காலம் 6 மாதம். பயிற்சிக் காலத்தில் தங்குமிட வசதிகளுடன் உணவு, ஊக்குவிப்பு தொகைகளும் வழங்கப் படும். திறமைகளுக்கு City and Guilds தேர்ச்சி பெறுவதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

**நேர்முகப்பரீட்சை டிசெம்பர் முதலாம் , 2ஆம் திகதி (திங்கள், செவ்வாய்)**

**நேரம்:** 3.00 P.m

**இடம்:** யாழ்பாடி, இல.51, அம்மன்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 048 8322, 077 736 0353 (41584) (4.6.3)

## திருமுருகன் கொம் நெற் இன் சிறப்பு அனுசரணையுடன்...

### "Vijay Super Singers Musical Show"

### சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி

தென்னிந்திய விஜய் தொலைக்காட்சியின் கலைஞர்களான திவாகர், சோனியா, அழகேசன், மற்றும் ஸ்ரீநிசா கலந்து சிறப்பிக்கும் மாபெரும் சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி .

இடம் :யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி உள்ளரங்கில்

காலம் 06.12.2014 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு




ரிக்கட் கிடைக்கும் இடங்கள்: **திருமுருகன் கொம் நெற்**

* 271A, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
* 64, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
* பிரதான வீதி, சங்கானை.
* 50, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
* கடற்கரை வீதி, குருநகர்.
* பிரதான வீதி, பருத்தித்துறை
* 18, பிரதான வீதி, நெல்லியடி.
* வேம்படி றோட், பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை.

(C 18114)(5.6.3)

# விளம்பரங்கள்

## மரண அறிவித்தல்கள்



### கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்
(இளைப்பாறிய OA வவுனியா கச்சேரி)

காரைநகர் ஆலடியைப் பிறப் பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தில்லையம்பலம் 25.11.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான வைத்திலிங்கம் - அமுதவள்ளி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகாம்பிகையின் (சிவமணி) அன்புக் கணவரும், தில்லைநாயகி (ஆசிரியர்- மல்லாகம் மகாவித்தியாலயம்), கணபதி (நோர்வே), தில்லைராணி (கனடா), தில்லைநாதன் (கனடா), தில்லைரூபி (காரைநகர்), தில்லைவதனா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முத்தமிழ்ச்செல்வன் (யாழ்ப்பாணம்), சிவராணி (நோர்வே),யோகராஜா (கனடா), சுகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமனும், தீர்த்தன், பிறிந்தா, பிரதாஜினி (யாழ்ப்பாணம்), பவித்ரா, அஸ்வின், (நோர்வே), செந்தூரா, மதுரா, ஜெயன்திரா (கனடா), மயூரா (கனடா) ஆகியோரின் பாசமிகு அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பையா, இரத்தினம், பாக்கியம், இலட்சுமி, பராசக்தி, ஆறுமுக சாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2014) ஞாயிற்றுக் கிழமை காலை7.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்,
மற்றும் உற்றார், உறவினர்.

ஆலடி, காரைநகர்,
077 270 2094, 021 221 1425
(41542) (45.3)



### Cmde (L) (Retired) நடராஜா குருபரன்
Bsc (Eng) (Moratuwa) MEng (Moratuwa) MBA (Moratuwa)
(ஓய்வுபெற்ற கொமொடோர் - இலங்கை கடற்படை)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Cmde (L) (Retired) நடராஜா குருபரன் 26.11.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - லீலா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபை - புவனா தம்பதியரின் அன்பு மருமகனும், பாமினியின் அன்புக் கணவரும், கிருஷாந்தி, மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரகுவின் அன்பு மைத்துனரும், கார்த்திகா, கார்த்திகேயன், உஷா, வைத்தியகுமார், நிர்மலா, கல்யாணி, ராதா, அமிழ்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

TP: 0112 710 313 (கி18112) (12.3.6)

## மரண அறிவித்தல்கள்



### நடராசா தியாகலிங்கம் (லிங்கன்)

வவுனியா, குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட N-GACDO (வவுனியா) நிறுவனத்தின் முன்னாள் தொழில் நுட்ப உத்தியோகத்தரும் MAGA (மன்னார்) கட்டுமான நிறுவனத்தின் தற்போதைய தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பணிபுரியும் நடராசா தியாகலிங்கம் (லிங்கன்) 27.11.2014 அன்று அகால மரணமானார்.

அன்னார் நடராசா- லட்சுமியின் கனிஷ்ட புதல்வனும், பாலச்சந்திரன் (France), பாலரஞ்சினி(France), பாலகுமாரி(Canada), பாலமோகன் (France), பாலரூபன் (France) ஆகியோரின் அன்புத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2014) திங்கட் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். 024 222 1256
(54107)(4.3.6)



### திருமதி ஞானமலர் மனுவேற்பிள்ளை

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், பண்டத் தரிப்பை வசிப்பிடமாகவும் தற்போது மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானமலர் மனுவேற்பிள்ளை கடந்த (27.11.2014) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி மிக்கேல்ப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மனுவேற்பிள்ளையின் (KLA பண்டத்தரிப்பு) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி KL அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானப் பிரகாசம் (துரை) மற்றும் பொன்ராசு, பொன்மணி, பொன்மலர், தவம் (நோர்வே), குணம் (ஜேர்மனி), காலஞ்சென்ற குலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரன், ஜெயம் (டென்மார்க்), குலம் (ஓய்வு பெற்ற முகாமையாளர் HNB), றோஸ்விந்தா, புஸ்பா, வசந்தா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான பாலுக்குட்டி, யோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மரியநாயகி, ரஞ்சினி, ரதி, பஸ்ரியாம்பிள்ளை (Lawyer), Dr. வீரசிங்கம் (அமலன் வைத்தியசாலை), கிளிமெற் நேரியோ (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், ஷாமினி (ஜேர்மனி), பிரியங்கா (SLT), பிளசட்மேரி, டானியல் (kist), சாமுவேல் (LB Finance), நிஷான், லூட்வி, சிந்தியா (டென்மார்க்), ஜெனன்ரன் (லண்டன்), டெஷான் (NDB), டினுஷா, சாம் (BOC), கிறேஸ் (BOC), மேரி லிதியா (தேனு), டினோ, லரிசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும், நிருஷன், ஷைலி, நேற்ரா, யோசுவா, தியோரா, நற்றலின், அல்வின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01/12/2014) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அமலன் வைத்தியசாலை,
உடுவில் வீதி,
மானிப்பாய். (41591)

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 077 738 4820
077 320 6578, 021 225 5099



### நவரெத்தினசுந்தரி வைரமுத்து

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரெத்தினசுந்தரி வைரமுத்து 28.11.2014 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்துவின் அன்பு மனைவியும், பிரபாகர், காலஞ்சென்ற ஞானசேகரர் (சுவிஸ்) மற்றும் பாஸ்கர் (கனடா), சுதாகர் (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்-வேலணை), காலஞ்சென்ற சிவலோஜினி மற்றும் ஜெயகரன், சத்தியவான் (கனடா), காலஞ்சென்ற சஞ்ஜீவன் மற்றும் நவநீதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சூரியபிரகாசநிதி, நவஜோதி(கனடா), தர்சினி, சுஜீபன், தவப்பிரியா, சுயாழினி ஆகியோரின் மாமியாரும், பிரதீபா, மயூசிகா, கம்சிகா, தினேஸ்காந், வினுஸ்காந், லிக்ஷிகா, குகலோஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.
(54486)(4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்



### பெஞ்சமீன் மேரிதிரேசா

இல.96 பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மேரிதிரேசா பெஞ்சமீன் நேற்று (29.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். (54490) (10.6.3)
96, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.



### சின்னத்துரை திருச்செல்வம்

தாவடி வடக்கு, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை திருச்செல்வம் (26.11.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சொர்ணம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நல்லையா மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், சுதர்சன் (லண்டன்), றஜித்தா (லண்டன்), முகுந்தன், ராகவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனித்தா (லண்டன்), ரமேஷ்குமார் (லண்டன்), தர்மினி ஆகியோரின மாமனும், லண்டனில் வசிக்கும் அஞ்சனா,பிரணவராம், பிரதிப்ராம், அபிராம், அக்ஷயா, அஷ்விகா மற்றும் ஆருத்திரா (இலங்கை) ஆகியோரின் பேரனும், புவனேஸ்வரி, புஸ்பலீலா, தவமணி, வனிதாமணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ராமச்சந்திரன் மற்றும் சொர்ணலிங்கம், இரஞ்சன், காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் சிவானந்தம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். (54491) (45.6.3)
ஆசாரி வீதி, காளிகோயிலடி,
தாவடி வடக்கு,



Unilever
புதிய
Fair & Lovely
OUR BEST FORMULA
Fair & Lovely
எமது அதி சிறந்த கலவை
டிரீட்மென்ட்டுக்கு சமமான பிரகாசமான தோற்றம்.
பிரகாசமான தோற்றத்தினைப் பெற்றுக்கொள்ள, நீங்களும் டிரை பண்ணுங்கள்.
முன்னர்
பின்னர்
விலை ரூ. 40/- இலிருந்து
*ஆக்கபூர்வமான காட்சியமைப்பு. அழகுத்துறை சிகிச்சையைக் குறிக்கின்றது. மருத்துவ/சருமத்தைத் துளைத்து மேற்கொள்ளும் சிகிச்சை போன்றதல்ல.
0112 629 629
அழையுங்கள்




Johnson's baby®
hugs & happy times
100 குழந்தைகளுக்கு 100 தங்கப் பஞ்சாயுத பென்டன்கள்
3 அதிர்ஷ்ட குடும்பங்களுக்கு சிங்கப்பூரிலுள்ள யுனிவர்சல் ஸ்டூடியோவை கண்டுகளிக்கும் வாய்ப்பு
இவ்வாய்ப்புகளை வென்றிட இரண்டு ஜொன்சன்ஸ் பேபி சோப் உறைகளுடன் "ஒரு தாயாக நீங்கள் பெற்ற அனுபவங்களையும்" எமக்கு எழுதி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி த.பெ.இல. 352, கொழும்பு 02.
நிபந்தனைகள்:
• ஒரு குடும்பத்தில் தாய், தந்தை மற்றும் 5 வயதுக்குட்பட்ட இரு குழந்தைகள் அடங்குவர்.
• தகுதிபெற்ற அனைத்து விண்ணப்பங்களும் 2015 பெப்ரவரி மாதம் நடைபெறும் மாபெரும் இறுதிச்சீட்டிழுப்பிற்கு உட்படுத்தப்படும்.
• ஜொன்சன் அண் ஜொன்சன் ஸ்ரீலங்கா நிறுவனத்தினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.
• இச்சலுகை 2014 நவம்பர் 10ம் திகதி முதல் 2015 ஜனவரி 31ம் திகதி வரை செல்லுபடியாகும்.
Johnson's baby®
உலகம் பேசும் அன்பின் தாய்மொழி

# விளம்பரங்கள்




YAMAHA
Revs Your Heart
கண்ணைக் கவரும் தோற்றம் / சிறந்த எரிபொருள் சிக்கனம்
செலுத்துவதற்குச் சுலபமானது / அனைவருக்கும் வசதியான விலை
உதிரிப் பாகங்கள் நாடெங்கும் கிடைக்கும்
RAY
YAMAHA
பூரிப்பான நல்லுணர்வு உங்களுக்கும் எனக்கும்
ரூ. 211,000/-
அசோஷியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
107, டீ.எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08.
www.yamahaworld.lk
மின்னஞ்சல்: yamaha@amwltd.com
யமஹாவின் புதிய விற்பனை முகவராகுவதற்கு அழையுங்கள் சுசில் - 077 304 7353 | ரங்க - 077 296 7063
துரித அழைப்பு: 0117 609 609 | 0112 680 840-2




Hero
ஸ்ப்ளெண்டர் ஐ ஸ்மார்ட் ஒரு மிடுக்கான தெரிவு
i3s Technology
splendor
iSmart
It's Smart Thinking
STOPS STARTS SAVES
GREEN EFFICIENCY
5 WARRANTY
*Warranty for a period of 5 years or 70,000 kms from the date of purchase, whichever is earlier. Conditions apply.
வசதியான பவர் ஸ்டார்ட்
கவர்ச்சிகரமான வடிவமைப்பு
சிறந்த எரிபொருள் சிக்கனத்துடன் கூடிய APDV என்ஜின்
கருப்பு எலோய் வீல்
ஹீரோ இலங்கையில் அறிமுகப்படுத்தும் i3s தொழில்நுட்பத்துடன் கூடிய முதலாவது உந்துருளி. புதிய ஸ்ப்ளெண்டர் ஐ ஸ்மார்ட் தொழில்நுட்பமானது வண்டியை நீங்கள் வெகு நேரம் ஸ்டார்ட்டுடன் ஓடாது நிறுத்திவைக்கப்பட்டிருக்கும். சமயங்களில் தன்னியக்கமாய் ஸ்டார்ட் நிறுத்தப்படும். மேலும் நீங்கள் க்லச்சை அழுத்தியவுடன் மீண்டும் வண்டி உயிர் பெற்று ஓடத்தயாராகும். தயாராகுவோம்! ஹீரோவின் புதிய மிடுக்கான தொழில்நுட்பத்தைக்கொண்டு எரிபொருளை சேமிப்போம். சூழலை பாதுகாப்போம்.
i3s
ரூ. 194,990
*நிபந்தனைகளுக்குட்பட்டது
☎: 011 5777000
மேலதிக ஸ்மார்ட் விபரங்களுக்கு அருகிலுள்ள அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.
Abans

# விளம்பரங்கள்

## குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் குறித்து நடைபெற்ற கலந்துரையாடல்

வரணி, நவ. 30

வரணி, கரம்பைக்குறிச்சி மேற்கில் குழாய்மூலம் குடிதண்ணீர் வழங் கும் திட்டம் தொடர்பில் வேள்ட்விசன் நிறுவன பிரதிநிதிகளுக்கும் பிரதேச மக்களுக்கும் இடையில் கலந்துரை யாடல் ஒன்று இடம் பெற்றது. குறித்த நிறுவ னத்தின் இரு பிரதிநிதிகள் இந்தத்திட்டம் தொடர்பான விதிமுறைகள், நடை முறைகள் தொடர்பில் பொது மக்களுக்கு இதன் போது தெளிவுபடுத்தினர்.

> வேள்ட்விசன் நிறுவனம் தென்மராட்சிப் பிரதேசத்தில் குறித்த பிரதேசம் உட்பட நாவற்காடு, தனங்களப்பு, மட்டுவில், சரசாலை போன்ற பிரதே சங்களிலும் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த உள்ளதாக கூறப்பட்டது.

வரணி, இயற்றாலைப் பிரதேசத்தில் தற்போது இந்தத்திட்டம் தொடர்பில் ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேள்ட்விசன் நிறுவனம் தென்மராட்சிப் பிரதே சத்தில் குறித்த பிரதேசம் உட்பட நாவற்காடு, தனங்களப்பு, மட்டுவில், சரசாலை போன்ற பிரதே சங்களிலும் இந்தத்திட்டத்தைச் செயற்படுத்த உள்ளதாக கூறப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் கரம்பைக்குறிச்சி மேற்கு பொது மண்டபத்தில் கடந்த 20 ஆம் திகதி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-122)



விரையுங்கள் !
இம்முறை நத்தாருக்கு இல்லங்களை அலங்கரிக்க
லங்காடைல்ஸ் வழங்கும் 15% இலிருந்து விலைக்கழிவுகள்
சகல லங்காடைல்ஸ் காட்சியறைகளிலும் நாடெங்குமுள்ள விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.
LANKATILES
கலைநயமான வாழ்க்கை
இச்சலுகை கையிருப்பிலுள்ள வரை மட்டுமே.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

கட்டினேன் வீடொன்றை நானும் மாடியில் மேல் வீட்டின் கட்டிய அப்பா எனது
மேல்நோக்கிச் செல்லும் கதை



CN STEEL
நம்பிக்கைமிகு எதிர்காலத்தின் சக்தி
பல தலைமுறைகள் வரை நீடிக்கும் வகையில் நிர்மாணிக்கும் கட்டிடங்களுக்கு CN ஸ்டீல் பயன்படுத்துதல் என்பது மிகச் சரியான தீர்மானமாக இருப்பதற்கான காரணங்கள் இவையே...
✓ இறக்குமதி செய்யப்பட்ட தூய இரும்பு Billet மட்டுமே கொண்டு தயாரிக்கப்படுவதால்
✓ ஜேர்மனிய தேர்மெக்ஸ் தொழில்நுட்பத்தில் உற்பத்தியாவதால்
✓ ISO 9001-2008, SLS, RB 500 தரச்சான்றிதழ் பெற்றதால்
✓ நீடித்துழைக்கும் நம்பகத் தன்மைக்கான சான்றென்பதால்
✓ உயர் சக்தி மற்றும் நீடித்த பாவனைக்குரியதென்பதால்
மெட்ரிக் தொன் ஒன்றின் அதிகபட்ச உற்பத்தி விலை: ரு. 125,500.00 + வரி
SLS 375
ISO 9001:2008 SGS
UKAS
நிகரற்ற நம்பிக்கை
கொன்ஃபெப் ஸ்டீல் (தனியார்) நிறுவனம்
மேல் மாகாணம் : 0776 465 442 | நாடெங்கிலும் : 0777 872 315
மின்னஞ்சல் : confabw@sitnet.lk

## University Colleges are Ready...

# Enroll Yourself at a University College

- University Colleges are under University of Vocational Technology (UNIVOTEC)
- National Vocational Qualification (NVQ) level 5 Diploma and level 6 Higher Diploma in Technology
- Five University Colleges at Kuliyapitiya, Ratmalana, Anuradhapura, Matara and Jaffna
- Full time courses - English Medium
- Facilities for ICT and English language
- Limited students per course

***Candidates should have NVQ level 4 certificate in relevant occupation or GCE A/L pass in relevant stream and age below 29 years as at 31.12.2014.***

### University College - Entry Qualifications for Diploma Courses

| No: | Course Name | Relevant NVQ Level 04 Certificate | GCE A/L Qualification |
|---|---|---|---|
| 1 | Hospitality Management | Cook, Room Attendant, Waiter/Steward, Tour Guide | Science, Art, Commerce or Technology |
| 2 | Event Management | Information & Communication Technology Technician, Secreatary (Secretarial Practice) | Science, Art, Commerce or Technology |
| 3 | Travel & Tour Management | Tour Guide, Cook, Room Attendant, Waiter/Steward | Science, Art, Commerce or Technology |
| 4 | Fashion Design Technology | Patteren Maker, Tailor | Science, Art, Commerce or Technology |
| 5 | Television Program Production Technology | Gaffer, Telecommunication Technician, Video Editer/Assisstant Editor, Photographer, Computer Graphic Designer | Science, Art, Commerce or Technology |
| 6 | Television Post - Production Technology | Gaffer, Telecommunication Technician, Video Editer/Assisstant Editor, Photographer, Computer Graphic Designer | Science, Art, Commerce or Technology |
| 7 | Cosmetology (Beauty Culture) | Beautician and Hair Dresser | Science, Art, Commerce or Technology |
| 8 | Maritime and Logistics Management | Wharf Clerk, Information & Communication Technology Technician | Science, Art, Commerce or Technology |
| 9 | Drafting Technology | Construction site Supervisor, Draught person | Science, Art, Commerce or Technology |
| 10 | Post Harvest Technology | Fruit and Vegetable Processor | Science (Bio) or Technology (BST) |
| 11 | Aquaculture and Aquatic Resources Management | Aquaculture Technician | Science (Bio) or Technology (BST) |
| 12 | Food Technology | Baker, Cook, Fruit and Vegetable Processor | Science (Bio) or Technology (BST) |
| 13 | Building Services Technology | Electrician, Ref. and AC Mechanic, Construction site Supervisor, Building Services Technician, Plumber, Elevator Technician | Science (Maths) or Technology (ET) |
| 14 | Electrical Technology | Electrician, Household electrical appliance repairer, Industrial Electronic craftsman | Science (Maths) or Technology (ET) |
| 15 | Electronic Technology | Electrician, Industrial electronic craftsmen, Radio, TV & Allied equipment Repairer | Science (Maths) or Technology (ET) |
| 16 | Mechatronics Technology | Mechatronics technician, Electrician, Pneumatic Operator, Machinist, Industrial Electronic craftsman | Science (Maths) or Technology (ET) |
| 17 | Construction Technology | Construction craftsman (Mason), Construction craftsman (Plumber), Draught person, Construction Site Supervisor, Wood Craftsman (Building/Furniture), Aluminium Fabricator | Science (Maths) or Technology (ET) |
| 18 | Refrigeration & Air Conditioning Technology | Refrigeration & Air Condition Mechanic, Auto Mobile Air Condition Mechanic, Electrician | Science (Maths) or Technology (ET) |
| 19 | Production Technology | Machinist, Welder, Tool and die maker, Fabricator (Metal) | Science (Maths) or Technology (ET) |
| 20 | Telecommunication Technology | Telecommunication Technician, Industrial Electronic Craftsman | Science (Maths) or Technology (ET) |
| 21 | Farm Machinery Technology | Automobile Mechanic, Three weeler Mechanic and Motor Cycle Mechanic, Field Assistant (Agriculture), Agricultural Equipment Mechanic | Science (Maths) or Technology (ET) |
| 22 | Automobile Technology | Automobile Mechanic, Three weeler Mechanic and Motor Cycle Mechanic, Auto A/C Mechanic, Auto Mobile Electrician, Auto Mobile Tinker, Auto Mobile Painter, Agricultural equipment mechanic | Science (Maths) or Technology (ET) |
| 23 | Quantity Surveying | Assistant Quantity Surveyor, Draugt Person | Science or Technology |
| 24 | Fishing Technology | Outboard Motor Mechanic, Fishing Vessel Skipper, Fish Harvest Technician | Science or Technology |

***Note:** Drafting Technology course award NVQ Level 5 Diploma Only. All the other courses award NVQ Level 6 Higher Diplomas.*

Application form and details could be downloaded from: http://www.youthskillsmin.gov.lk

Duly completed application forms can be submitted online through www.youthskillsmin.gov.lk or post to reach the following address by registered post on or before 26th December 2014.

Please write "Application for University College" on top left hand corner of the envelope.

Program Manager
**Skills Sector Development Program**
**Ministry of Youth Affairs and Skills Development**
No 354/2, Nipunatha Piyasa, Narahenpita
Colombo 05.
Tel: 011 2136500 Ext. 677 / 070 2020207

| Structure of NVQ Level 5 and 6 Diploma | | |
|---|---|---|
| ICT & English Course (Entire Course Duration) | Foundation Course | 6 months |
| | NVQ Level 5 Curriculum | 12 months |
| | NVQ Level 6 Curriculum | 12 months |
| | On the Job Traning in Industry | 6 months |

### Courses for the University Colleges

**University College - Kuliyapitiya**

| | Course |
|---|---|
| 1. | Cosmetology (Beauty Culture) |
| 2. | Construction Technology |
| 3. | Building Services Technology |
| 4. | Auto Mobile Technology |
| 5. | Farm Machinery Technology |
| 6. | Refrigeration and Air Condition Technology |
| 7. | Drafting Technology |
| 8. | Quantity Surveying |
| 9. | Travel and Tour Management |

**University College - Matara**

| | Course |
|---|---|
| 1. | Food Technology |
| 2. | Fishing Technology |
| 3. | Building Services Technology |
| 4. | Hospitality Management |
| 5. | Cosmetology (Beauty Culture) |
| 6. | Auto Mobile Technology |
| 7. | Refrigeration and Air Condition Technology |
| 8. | Travel and Tour Management |
| 9. | Quantity Surveying |
| 10. | Event Managment |

**University College - Ratmalana**

| | Course |
|---|---|
| 1. | Fashion Designing Technology |
| 2. | Television Programme Production Technology |
| 3. | Television Post Production Technology |
| 4. | Cosmetology (Beauty Culture) |
| 5. | Electrical Technology |
| 6. | Maritime and Logistic Management |
| 7. | Event Management |
| 8. | Travel and Tour Management |
| 9. | Food Technology |
| 10. | Telecommunication Technology |

**University College - Jaffna**

| | Course |
|---|---|
| 1. | Production Technology |
| 2. | Mechatronics Technology |
| 3. | Hospitality Management |
| 4. | Food Technology |
| 5. | Farm Machinery Technology |
| 6. | Cosmetology (Beauty Culture) |
| 7. | Building Services Technology |
| 8. | Construction Technology |

**University College - Anuradhapura**

| | Course |
|---|---|
| 1. | Hospitality Management |
| 2. | Travel and Tour Management |
| 3. | Post Harvest Technology |
| 4. | Electrical Technology |
| 5. | Aqua Culture and Aquatic Resources Management |
| 6. | Electronic Technology |
| 7. | Building Services Technology |
| 8. | Quantity Surveying |




Empowering through Skills Development

UNIVOTEC

UNIVERSITY COLLEGE

**University of Vocational Technology**
**Ministry of Youth Affairs and Skills Development**

FOR THE FIRST TIME IN JAFFNA....

IT/BPM EXPORT FORUM & ENTREPRENEURSHIP WORKSHOP

"Accelerating IT Exports and Fostering Entrepreneurship"

REGISTER NOW!

5 December 2014

Tilko City Hotel, Jaffna

A one-of-a-kind opportunity to interact and learn from some of Sri Lanka's leading enterpreneurs and IT experts!

To register, please visit www.jaffnaitweek.com or call Pamodi on 071 699 6966.

EVENT SPEAKERS



Saman Maldeni – Director – Export Services EDB
Dr. Sanjiva Weerawarana – Founder, Chairman and CEO of WSO2
Reshan Dewapura – CEO of ICTA
Mangala Karunaratne – Founder and CEO of Calcey
Madu Ratnayake – Head of Digital, SVP & General Manager at Virtusa



Dr. Harsha Subasinghe – CEO & Chief System Architect of CodeGen
Jagath Seneviratna – Programme Head of Monitoring & Evaluation at ICTA
Dr. Arul Sivagananathan – Managing Director Hayleys Industrial Solutions and Hayleys BPO
Ruwindhu Peiris – Managing Director of Stax Inc
Mano Sekeram – Co-Founder and CEO of 99X Technology

Organized By: ICTA ideas actioned, EDB

Supported By: SLASSCOM

Official Bank: NDB bank

JAFFNA IT WEEK
www.jaffnaitweek.com

Exclusive Mobile Communication Partner: Sri Lanka Telecom Mobitel

## பட்டிருப்பில் பெரியளவில் தேர்தல் ஆயத்தங்கள்

பட்டிருப்பு, நவ.30

இலங்கையில் தனிப்பெரும் தமிழ்த் தொகுதி யான பட்டிருப்புத் தொகுயின் பல இடங்களிலும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு என்று மில்லாதாவாறு பெரியள விலான பதாகைகளும் அலங் காரங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக களுவாஞ்சிக் குடி, பட்டிருப்பு, களுதா வளை, பெரியபோரதீவு, வெல்லா வெளி, பொன் கோட்டைக்கல்லாறு போன்ற இடங்களில் ஜனா தியின் பதாகைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. பெரியபோரதீவு, வெல்லாவெளி ஆகிய வற்றில் உப காரியாலயங்களும் களுவாஞ்சிக்குடி பிரதான வீதியில் பிரதான காரியாலயமும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளைக்காரியாலயங்களும் அமைக் கப்பட்டுள்ளன.

எந்தவொரு ஜனாதிபதி தேர்தலின்போதும் இல்லாத வகையில் இவ் வாறான ஏற்பாடுகள் முன் கூட்டியே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.(வ–10)

அறிமுகப்படுத்துகிறோம் சுறுசுறுப்பான தினத்திற்காக

நியுட்ரெக்ஸ் சக்தி

சுறுசுறுப்பான தினம் - பரிபூரண நாளை




நியுட்ரெக்ஸ் பருகுங்கள் நாள் முழுவதும் சுறுசுறுப்பாயிருங்கள்

வ/ப ஆர்பிகோ பார்மசியுடிகல்ஸ் (தனி) நிறுவனம்

அனைத்து பார்மசி மற்றும் சுப்பர் மார்க்கட்களிலும் பெறலாம்

யார் என்ன சொன்னாலும், அதிக தொகை தருவது நாங்களே!



24 கரட்டுக்கு ரூ.42,000/-*

22 கரட்டுக்கு ரூ.36,000/-*

ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுடனும் பெறுமதியான அன்பளிப்பு



(C/16934)

எல் பீ பினான்ஸ், தங்க நகைகளுக்கு உயர் மதிப்பு

* முன்னறிவித்தல் இல்லாமல் நகைகளை மீட்கலாம். * வாரத்தின் 7 நாட்களும் பி.ப. 6.00 வரை திறந்திருக்கும். * தங்க நகைகளுக்குப் பூரண காப்புறுதி.

| | |
|---|---|
| கெனிஸ்டன் | 0777 716 986 |
| சுரேஸ் குமார் | 0773 384 981 |
| மோகன்ராஜ் | 0778 065 387 |

L B FINANCE
எல்.பீ.ஃபினான்ஸ் பி.எல்.சி
275 / 75, பேராசிரியர் ஸ்டான்லி, விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
T. 0114 521 000 | www.lbfinance.com

L B FINANCE GOLD LOANS

# மாணவர்களின் இலட்சியத்துக்கு பெற்றோர் ஒத்துழைப்பு அவசியம்

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர்

தென்மராட்சி, நவ.30
மாணவர்களின் எதிர்கால இலட்சியம் மற்றும் இலக்கின் தன்மையைப் பெற்றோர்கள் புரிந்து கொள்வதுடன் அவர்களது இலட்சியத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பெற்றோர் ஆசிரியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு கிடைப்பின் மாணவர்கள் தமது இலக்குகளை அடைவதற்கு உந்து சக்தியாக இருக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை. முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அண்மையில் வெளியான ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் மாகாண, மாவட்ட, வலய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களின் பேட்டிகள் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன. ஒவ்வொரு மாணவனும் தனது பேட்டியில் எதிர்கால இலட்சியத்தை இலக்கை தெளிவாகக் கூறியிருந்தார்கள்.

பிஞ்சு வயதில் மாணவரின் எதிர் கால இலட்சியம் இலக்கு பற்றி தெளிவாகக் கூறுவதை எவரும் சாதாரணமாக கருதக்கூடாது. அந்த மாணவனின் எதிர் கால இலட்சியத்தை நிறைவேற்ற அனைவரும் பாடுபடவேண்டும்.

இதில் முதலிடம் பெற்ற மாணவர்களால் வழங்கப்பட்ட பேட்டிகளில் கூறப்பட்டவை. ஆனால் பரீட்சை பெறுபேற்றின் வெட்டுப் புள்ளி வரை புள்ளிகள் பெற்ற ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு இலட்சியம், இலக்கு உள்ளது. அதை பெற்றோர், ஆசிரியர்கள் தொடர்ந்து இலட்சியத்தை இலக்குகளை ஞாபகப்படுத்தும் வகையில் செயற்படல் வேண்டும்.

பெற்றோர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் காட்டும் அக்கறை ஊக்குவிப்பு போன்றவற்றை இடைநிலை வகுப்புகளில் காட்டுவதில்லை. இதனால் மாணவனின் கற்றல் செயற்பாட்டில் பெரிய இழுபறி நிலை ஏற்படுகிறது.

இடைக்காலத்தில் ஏற்படும் இழுபறி நிலையால் உயர்தரப் பரீட்சையில் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காமல் போகிறது. ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தி பெறாத சில மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் கிடைக்காத சித்தியை உயர்தரப் பரீட்சையில் பெற்று விடுகிறான். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாதோர் பெற்றோர் கொடுத்த அழுத்தம் ஊக்குவிப்பாக மாறி அவனது இலட்சியத்தை குறிக்கோளை அடைய வைத்து விடுகிறது.

அந்த மாணவரின் கல்வி உயர்வுக்கு பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கொடுத்த ஊக்குவிப்பே காரணமாகிறது. மாணவர்கள் தவறான பாதையில் செல்வதாக பலர் மத்தியில் தப்பான அபிப்பிராயம் உருவாகியுள்ளது. இந்த தப்பான அபிப்பிராயம் உருவாக பெற்றோர்களும் காரணமாகின்றனர். மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு நேரம் ஒதுக்க மறந்து விடுகின்றனர். பாடசாலைக்கு ரியூசனுக்கு விளையாட்டு, தொலைக்காட்சி பார்க்க, இரவில் பாடங்களை படிக்க நேரம் ஒதுக்க வேண்டும்.

இதனை ஒழுங்காகச் செயற்படுத்த பெற்றோர் முன்வந்தால் மாணவர்கள் மீது சுமத்தப்படுகின்ற களங்கம் நீங்குவதுடன் எதிர்காலத்தில் நல்லொழுக்கமுள்ள பிரசையாக வாழ வழி வகுக்கும்- என்றார். (வ)

# கோப்பாயில் தீவிரமாகும் நுளம்பு ஒழிப்பு செயற்பாடு

யாழ்ப்பாணம், நவ.28
கோப்பாய் சுகாதார மருத்துவஅதிகாரிபணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் பொது இடங்கள் வெற்றுக்காணிகள் போன்றவற்றைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்களின் குடியிருப்பு சுற்றாடல்களை பார்வையிடும் சுகாதாரப் பகுதியினர், நுளம்பு பெருகாத வண்ணம் பற்றைகள் செடிகள் போன்றவற்றை உடனடியாக வெட்டி அழிக்க வேண்டும்.

அத்துடன் தற்போது மழை காலம் ஆகையால் தேவையற்ற வெற்றுப் பொருள்களை உடனடியாக வெட்டிப் புதைக்க வேண்டும்.

அவற்றில் மழை நீர் தேங்கி அதன் ஊடாக நுளம்புக் குடம்பிகள் பெருக அதுவழியமைக்கும். அதே சமயம் வெற்றுக் காணிகளில் அடர்ந்த காடுபோல் வளர்ந்திருக்கும் பற்றைகள் செடிகளை மக்கள் உடனடியாக வெட்டி அழித்திட வேண்டும் என அறிவுறுத்தி வருகின்றனர்.

அந்தப்பற்றைகள் மூலம் நுளம்புகள் அதிகமாக பெருகுவதாக தாக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும்.

நுளம்பு ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அவற்றை 14 தினங்களுக்குள் துப்புரவு செய்ய வேண்டும். இல்லையேல் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் இருக்கும் கிராமங்களில் உள்ள குடியிருப்பு சுற்றாடல்களில் நுளம்பைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புகையூட்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வ-17)

# 2015 இற்கான கூ. ஊழியர் சங்க மாநாடு கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், நவ. 30
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் அடுத்த பேராளர் மாநாடு கிளிநொச்சியில் நடத்தப்படும் என்று சங்கத்தின் தலைவர் எஸ். சிவகுமார் தெரிவித்தார்.

வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தொழிற்சங்க மாநாட்டுக்கு தலைமை தாங்கி உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன் போது அவர் மேலும் கூறுகையில்;

"எமது வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் மூலம் எமது பிரதேச கூட்டுறவாளர்கள் எதிர்நோக்கும் சவால்களை வென்றெடுக்க தீர்வைப் பெற்றுக்கொடுக்க சங்கம் முயற்சிக்கும்.

இந்த ஊழியர் தொழிற்சங்க மாநாடு முதன்முதலில் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அடுத்த மாநாடு 2015 ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் நடத்தப்படும்.

அதனைவிட எமது தொழிற்சங்கத்தில் மேலும் கூட்டுறவாளர்களை இணைந்து அதன் செயற்பாடுகளை தீவிரப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வன்னிப் பிரதேசத்தில் உள்ள கூட்டுறவாளர்களை எமது தொழிற்சங்கத்தில் கூடுதலாக இணைந்து சங்கத்தைப் பலப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்றார். (வ-17)


சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் சிறிய குடும்பத்திற்கு அளவான வீடு
"STUDIO TYPE CONDOMINIUM FLAT" தற்போது நம் இலங்கையில்




இரு வருட நிர்மாண காலப்பகுதியில் இலகு தவணை முறையில் செலுத்தி இரு வருடங்களின் பின் குடிபுகலாம்.
இரண்டு அறைகளைக்கொண்ட வீட்டுடன் குளியலறை, வரவேற்பறை மற்றும் பான்றி விருந்தினர் குளியலறையுடன் கூடியது.

Nimavin Developers (Pvt) Ltd
187, Ward Place, Colombo 07.
Visit our Web Site : www.nimavingreenpark.com
தொ. இல. : (011) 269 5714, (011) 269 5728
0776 959197 (தமிழில்) 0776 147065 0776 216016
எமது வலைத்தளத்தில் பார்வையிட : www.nimavingreenpark.com

www.sdb.lk






- ரூபா.100,000 இற்கான குறைந்த தலைமைக் கட்டணம்
- உள் ஈட்டு விகிதத்திற்கு அமைவான வட்டி விகிதம்
- குத்தகை ஒப்பந்தத்தின் தொகை முற்கட்டணமாக செலுத்தப்பட்டிருப்பின் கவர்ச்சிகரமான சலுகைகள்
- மறைநிலை கட்டணங்கள் அறவே இல்லை
- ஆகக்குறைந்த ஆவணங்கள்
- ஒரு நாள் சேவை வசதி
- இலகுவான சேவைகள்
- உங்களின் தேவைகளுக்கு ஏற்ற தீர்வு

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் : 0112 515 100/101
சேவை மையம் அழைப்பு இலக்கம் : 0112 832 577

SDBL சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ தேசத்தின் முன்னோடி

# செய்திகள்







வடமராட்சி, கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. விருந் தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் திருமதி குயின் ஜெசிலி கலாமணி மாணவனுக்குப் பரிசில் வழங்குவதையும் காணலாம். (வ-108)



## அபிவிருத்தி காணவுள்ள குறிகாட்டுவான் பாலம்

யாழ்ப்பாணம், நவ.30

புங்குடுதீவு குறிகாட்டுவான் பாலத்தின் தொடக்கப் பகுதிக் கரையோரத்தின் தென்பகுதியில் ஒரு கிலோ மீற்றர் தூரமும் வடகிழக்கு கரையோரத்தில் ஒரு கிலோ மீற்றர் தூரமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. குறித்த கரையோரப்பகுதிகளை அழகிய நகராகவும் அதனை அண்டிய பகுதிகளில் குடியேற்றம் அமைத்தலும் மக்களுக்கான பொழுதுபோக்கு இடம் பேச்சி அம்மன் கோயிலுக்கான தீர்த்தக் கரையை அபிவிருத்தி செய்தல் என்பனவும் இந்தத் திட்டத்தின் கீழ் இடம்பெறும் எனவும் வடக்கு பிரதேச நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிகாட்டுவான் பகுதியை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஏனைய தீவுகளுக்கு ஒரு சேவை செய்யக் கூடிய நகரமாக அது உருவாகும். அனைத்து தீவுகளையும் சுட்டிக் காட்டக் கூடிய ஓர் இடமாகக் குறிகாட்டுவான் உள்ளதாகவும் தீவுப் பகுதிக்கான சேவை நிலையமாகவும் அந்தப் பிரதேசத்தை ஏற்படுத்தும் பொருட்டே நகர அபிவிருத்தி அதிகார சபை குறிகாட்டுவானைத் தெரிவு செய்துள்ளது. பாதிப்புக்கள் ஏற்படாதவாறு மீனவர்களுக்கான திட்டம் ஒன்றும் நடைமுறைப் படுத்தப்படும்.

தீவுப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அங்கேயே பெற்றுக் கொள்ளக் கூடியதான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் வாழ்வாதார வளங்களை மேம்படுத்திக் கொள்ளவும் வாகனத் தரிப்பிடங்களை உருவாக்கவும் கூடியதாக முதல் கட்ட வேலைகள் இடம்பெறும். இதற்கென ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டு மூன்று கட்டங்களாக இடம்பெறவிருக்கும் இந்த அபிவிருத்தித் திட்டத்தினூடாக பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதுடன் ஒரு நகர தரத்திலான அமைப்பைக் கொண்டு வரமுடியும்-என்றார்.(வ-7)

# சாவகச்சேரி பிரதேச சபையின் 31 வேலைத் திட்டங்களுக்கு நிதி

### வட மாகாண சபை உறுப்பினர்களின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ்

தென்மராட்சி, நவ.30

வட மாகாண சபை உறுப்பினர்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபைக்கு 31 வேலைத் திட்டங்களுக்கென 31 லட்சத்து 15 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய உதவிஉள்ளூராட்சிஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் அறிவித்துள்ளார்.

இந்த வேலைத் திட்டங்களில் உறுப்பினர் கேசவன் சயந்தன் 14 வேலைத் திட்டங்களுக்கென 22 லட்சத்து 95 ஆயிரம் ரூபாவும் உறுப்பினர் இராமநாதன் அங்கஜன் 14 வேலைத் திட்டங்களுக்கென 6 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், பாலச்சந்திரன் கஜதீபன், கந்தையா சர்வேஸ்வரன் தலா 50 ஆயிரம் ரூபா வீதமும் ஒதுக்கீடு செய் துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் உறுப்பினர் கேசவன் சயந்தன், வேம்பிராய், மட்டுவில் வண்ணாத்திப் பாலம், மந்துவில் மேற்கு இருவன்குடமியன், கைதடி தச்சன்பிட்டி, எழுதுமட்டுவாழ் தெற்கு இராமியன், ஆகிய 6 இந்து மயானங்களுக்கு எரியூட்டல் கொட்டகைகள் அமைக்க தலா 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதமும் தாவளை, இயற்றாலை திருமதி இ.செல்லம்மா, கொடிகாமம் கொயிலாமனை திருமதி செ.யோகம்மா, சாவகச்சேரி சிவன் கோயிலடி திருமதி பு.காமாட்சி ஆகியோருக்கு வீட்டுபுனரமைப்புக்கு 60 ஆயிரம் ரூபாவும், சரசாலை வடக்கு திருமதி பசுபதி அம்மா, எழுதுமட்டுவாழ் தெற்கு அருணாசலம் நாகேஸ்வரி ஆகியோருக்கு மலசலகூடம் அமைத்துவழங்க 60 ஆயிரம் ரூபாவும் கச்சாய் எறியால்பிட்டி இந்து மயான வீதி புனரமைக்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வரணி இடைக்குறிச்சி சண்முகானந்தா சனசமூக நிலைய நிர்மாண வேலைக்கு 50 ஆயிரம் ரூபாவும் கைதடி மேற்கில் சலவைத் தொட்டி அமைக்க 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளார். உறுப்பினர் இராமநாதன் அங்கஜன்- நாவற்குழி ஐயனார் கோயிலடி, மறவன்புலோ கிழக்கு சிவகவி சனசமூக நிலையம், மறவன்புலோ மத்தி பாரதி சனசமூக நிலையம், மறவன்புலோ வடக்கு சனசமூக நிலையம் பாலாவி தெற்கு கொடிகாமம் பெரிய நாவலடி விநாயகர் சனசமூக நிலையம், தனங்கிளப்பு ஸ்ரீகணேசா சனசமூக நிலையம், கரம்பைக்குறிச்சி கிழக்கு ஸ்ரீகணேசா சனசமூக நிலையம், மந்துவில் மேற்கு இருவன் இந்து மயானம் ஆகியவற்றில் குழாய்க் கிணறு அமைக்க தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், நாவற்குழி பாரதி சனசமூக நிலையம், நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு குடிதண்ணீர் வசதி மேற்கொள்ள தலா 40 ஆயிரம் ரூபா வீதமும் பாலாவி மேற்கு மயானத்தின் கிணறு புனரமைக்க 40 ஆயிரம் ரூபாவும், நாவற்குழி பல நோக்கு மண்டப கூரை திருத்த வேலைக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளார். உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன்- கைதடி கிழக்கு கள்ளிநகர் துர்க்கா சனசமூக நிலைய கட்டட புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும் உறுப்பினர் பா.கஜதீபன்- கைதடி விநாயகர் சனசமூக நிலையத்துக்கு கலையரங்கு அமைக்க 50 ஆயிரம் ரூபாவும் உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்துக்கு கட்டடம் அமைக்க 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவித்துள்ளார். (வ-9)

## மீசாலை வீரசிங்கம் ம.கல்லூரிக்கு தரம் 6 இற்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, நவ.30

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் அடுத்த வருடம் (2015) தரம் 6 வகுப்புகளில் (தமிழ்,ஆங்கில மொழி மூலம்) மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கல்லூரி அதிபரால் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்று டிசெம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அதிபர் தி.அம்பலவாணர் அறிவித்துள்ளார். (வ-9)

# பதிவுகள்







தென்மராட்சி கல்வி வலயத்தால் சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் நடத்தப்பட்ட கை கழுவுதல் தின நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும், கலந்து கொண்டோரையும் இங்கு காணலாம். (வ-9)





கோண்டாவில் பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு. சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கத்தின் நூல்களை அறிமுகம் செய்யும் நிகழ்வை நடத்தியது. இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபனும் விழா நாயகரும் உரை நிகழ்த்துவதை காணலாம்.





சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வொன்றையும் கிறிஸ்மஸ் தாத்தா மாணவர்களுடன் நிற்பதையும் காணலாம். (வ-9)



இணுவில் மத்திய கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத் தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கல்லூரி ஆசிரியர்கள் கௌர விக்கப்பட்டனர். (ஒ-10)









சாவகச்சேரி செலான் வங்கி யால் டிறிபேர்க் கல்லூரி மண் டபத்தில் நடத்தப்பட்ட சிறுவர் தின விழா நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற் கப்படுவதையும், கலை நிகழ்வை யும், கலந்து கொண்ட மக்களையும் காணலாம். (வ-9)







வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு பாடசாலையில் கண்காட்சியும் நூலகம் மற்றும் பல்லூடக திறப்பு விழாவும் கல்லூரியின் அதிபர் எம்.எஸ்.பத்மநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி க.கந்தையா கலந்து கொண் டார். சிறப்பு விருந்தினர்களாக தமிழ்மணி அகளங்கன் மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செ.விஜயகாந்தன் மற்றும் ஆரம்பக் கல்விப் பிரிவு அதிபர் சி.சிறிரங்க நாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கண்காட்சியை நாடா வெட்டி பிரதம விருந்தினர் ஆரம்பித்து வைப்பதையும் கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் காணலாம். (வ-102)

# விளம்பரங்கள்

**நாகபூஷணி திருமணசேவை**
**மணமகள் தேவை**

01)இந்து கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த 1981, 8 இல் செவ்வாய், பாவம் 30, B.Sc,MSc,UK(PR) சைவம்
02)1978, 12 இல் செவ்வாய், பாவம் 20 Canada (PR)
03)1983 சூரி, செவ், பாவம் 25 அரச உயர்தொழில்
04)1981 செவ்வாயற்ற, பாவம் 30 Doctor
05)1981, சூரி/செவ், பாவம் 15 அரச உத்தியோகத்தர் மணமகன்களுக்கு மணமகள்கள் எதிர்பார்க்கப் படுகின்றனர்.

நீங்கள் விரும்பும் உயர்தொழில்/அரச/தனியார்/உள்நாட்டு/வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் நிறைய உள்ளனர். மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்யலாம்.

15/11, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P:021 222 9306, 077 138 7596, 075 554 6000
Email: nakapoosanywedding@gmail.com

(54483) (4.6.3)

FINCO **நீர்க்கசிவைத் தடுத்தல்**
**Water Proofing**

உங்கள் வீடுகள், நிறுவனங்களில் சிமெந்திலான கூரைகள் (Flat), நீர்த்தாங்கிகள் ஆகியவற்றி னால் ஏற்படும் நீர்க்கசிவை உடன் சீர்செய்து தருகின்றோம். இதற்குரிய இரசாயனப் பொருள் களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

* கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விசேட கழிவில் பொருள்கள் வழங்கப்படும்.

உடன்தொடர்புகொள்வதற்கு:

**நோர்த் & ஈஸ்ட் இஞ்சினியறிங்**
**யாழ்வீதி, மானிப்பாய்.**
**(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்)**
T.P. 077 756 8685,
077 756 8686
Finco ஸ்தாபனத்தின் ஏக விநியோகத்தர்கள்.

## சனிபெயர்ச்சி

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாருக்கும்உத்தர வாதம்தரவோ,பிணைக் கையெ ழுத்துப் போடவோ வேண்டாம். கொடுத்த வாக்கைக் காப் பாற்றுவீர்கள். கண் சம்பந்தமான சிரமங்களுக்கு வாய்ப்புள்ளது. சிலர் தனிக் குடித்தனம் செல்ல இடமுண்டு.

13.07.2015 வரை குருபகவான் ஜென்ம ராசியில் இருப்பதால் திருமணம் நடக் கும். வேலை கிடைக்கும். கணவன் மனை விக்குஇடையில்பரஸ்பர அன்புமேலோங் கும். 14.07.2015 இல் குரு பகவான் உமது ராசிக்கு 2இல் வருவதால் சரளமான பணப் புழக்கம் உண்டாகும். சேமிப்பு வளரும். தற்போது ராகு 3ஆம் இடத்தில் இருப்ப தால் குடும்பத்தில் மகிழ்ச்சி தரக் கூடிய இனிய சம் பவங்கள் நடைபெறும்.

உடல்நிலை–
உடல்நிலை சிறப்பாகவே அமை யும். எந்தக் காரியத்தையும் சுறுசுறுப்புடன் செய்து முடிக்கக் கூடிய ஆற்றல் உண்டா கும். எதிர்பாராத பயணங்களால் அலைச் சலும் வருமானமும் அதிகரிக்கும். குடும் பத்தில் உள்ள வர்கள் ஓரளவுக்கு உடல் நலத்துடன் இருப்பார்கள்.

உத்தியோகத்தர்கள்
வேலையில் பதவி உயர்ச்சி கிட்டி இன்ப அதிர்ச்சி கொடுக்கும். சிலருக்கு எதிர்பார்க் கும் இடமாற்றமும் உண்டாகும். அதி காரிகளும்முதலா ளிகளும்பாராட்டும் படி உங்கள் திறமைகளை வெளிப்படுத்து வீர்கள். புதிய வேலை தேடுபவர்களுக்கு வேலலகிடைக்கும்.

மாணவர்கள்–
மாணவர்கள் கல் வியில் சிறந்து விளங்கி நல்ல மதிப் பெண் களைப் பெறுவீர்கள். மேற் கல் விக்காக எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெற்றோர் ஆசிரி யர்களின் ஆதரவும் பெரிய மனிதர்களின் உதவியும் கிடைக் கும்.

அதிர்ஷ்டக் குறிப்புகள்
எண் – 17,26,35,53,62,98. கிழமை – புதன், திசை– வடக்கு, நிறம்–நீலம், ரோஸ், கல் – வைரம், தெய்வம் –லட்சுமி.

**ST.ANTONY'S**
No.187, K.K.S. Road, Jaffna Town.
T.P: 021 222 4865, 075 069 8608.

சிறுவர்களுக்கான கணினி
மலிவு விற்பனை
12900/= மட்டுமே
Free:-
Games, Head Phone/
4GB Pendrive
ஒரு வருட உத்தரவாதம்
கைபிறப்பு உள்ளவரை மட்டுமே



HP Full Set Computer
24750/=
• Intel 3.2 GHZ CPU
• 80 GB Hard disk
• 1 GB Ram
• "17" LCD Monitor
• DVD Rom
• Keyboard
• Optical Mouse
• Speaker
Free:- Head Phone/Web cam, 4GB Pendrive
ஒரு வருட உத்தரவாதம்

Intel Full set Computer
Only 39500/=
• Dual-Core 3.20GHz CPU
• Asrock Motherboard
• 250GB Hard Disk
• 2GB Ram
• "19" LED Monitor (Samsung,Viewsonic,HP)
• DVD Writer
• Keyboard
• Speaker
Free:- Head Phone/
Web cam, 8GB Pendrive
மூன்று வருட உத்தரவாதம்

Only 53500/= HP I3-Laptop
4 GB Ram
500 GB Hard Disk
1 Year Warranty

Only 49500/= HP D.Core-Laptop
2 GB Ram
500 GB Hard Disk
1 Year Warranty

Only 18500/= HP D.Core-Laptop
1 GB Ram
80 GB Hard Disk
1 Year Warranty



Intel Full set Computer
Only 41500/=
• Dual-Core 3.20GHz CPU
• Asrock Motherboard
• 500 GB Hard Disk
• 2 GB Ram
• "19" LED Monitor
• (Samsung,Viewsonic,HP)
• DVD Writer
• Keyboard
• Speaker
Free:- Head Phone/
Web cam, 8GB Pendrive
3 Years Warranty

(C/17649)(10)

**புரோட்டினெக்ஸ்®**
"நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத்தருகின்றது"

100% தாவரப்புரதம்
கொலஸ்ரோல் அற்றது
விட்டமின்கள் கனியுப்புக்கள் அடங்கியது

புரோட்டினெக்ஸ் ஆனது கொலஸ்ரோல் அற்ற 100% தாவரப்புரதம் செறிந்த விட்டமின்கள் கனியுப்புக்கள் அடங்கிய போசனை உணவாகும். இதில் உள்ள தாவரப்புரதம் முற்சமிபாடு அடைந்துள்ளதனால் இலகுவில் அகத்துறிஞ்சப்படக்கூடியது.




Astron Limited, 688, Galle Road, Ratmalana.
Tel : 011 2636741, 5566741 Fax : 011 2636173
E-mail : astron@astron.lk Web : www.astron.lk
MRP. RS. 940/-



**காதுகேள்திறன் கருவி மற்றும் செயற்கைக் கை வழங்கும் செயல் திட்டம்**

**வறுமைக்கோட்டின் கீழ் உள்ள**



♦ செவிப்புலன் இயந்திரம் தேவைப்படுபவர்களுக்கும்
♦ செயற்கைக் கை தேவைப்படுபவர்களுக்கும்

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் அவற்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் உதயன் அலுவலகங்களில்விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து அதே இடங்களில் சமர்ப்பிக்க முடியும்.

யாழ்ப்பாணம் - இல. 359 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பரணம்.
சாவகச்சேரி - நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி.
நெல்லியடி - இல. 55 பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
கிளிநொச்சி - ஏ - 9 வீதி, கராஜ் போக்குச் சந்தி, கிளிநொச்சி
வவுனியா - இல.104 மேல்மாடி பஸ்நிலையம், வவுனியா.

முல்லைத்தீவு,மன்னார் பிரதேசங்களில் உள்ளவர்களும் ஏனையவர்களும் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்து டன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

**யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகம்** Rotary

இல. 359 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மேலதிக விபரங்களுக்கு : 021 5675747

# விளம்பரங்கள்

## Vacancies

We are one of leading Group of Companies in the' Construction industry looking for suitable candidates for the following vacancies in the Finance Department in Mannar.

**Accountant / Assitant Accountants**
Partly qualification in ICA or CIMA or full qualification in AAT or equivalent qualifications with five years experience in the field.

**Accounts Assistant**
Partly qualification in AAT or equivalent qualifications with three years experience in the field.
Salary - Negotiable
Good knowledge and experience in Computer environment and good communication in English and Sinhala/ Tamil will be added qualifications for all posts.
**Northern Provine Condidates will be Preferable.**
Please sent your CV immediately to,
**Human Resources Manager, /**
**Mega Group of Company,**
**No. 18 / A, Kelenkaduwa Place,**
**Colombo 06.**
**Mail : hrmmega@gmail.com**
(54472) (4.6.3)

---

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான
IATA Accredited Agent

## METRO
Travles & Tours (Pvt) Ltd.

### எமது சேவைகள். . . . .

* மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
* இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
* சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
* உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்
* குழு பிரயாண வசதிகள்
* வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்
* சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,**
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: +940212224647, +94 212217199, +94 777881115
Email: Jesurah@metrotravels.lk
(சி.16758) (12.3.6)

---

## கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

| Job Category | Qty | Salary QRS | Salary RS |
|---|---|---|---|
| ஆபீஸ் போய்ஸ் | 90 | 1000 Qrs | 36,000/= |
| ஜெனரல் கிளினர்ஸ் | 50 | 1000 Qrs | 36,000/= |
| டிரைவர் (G.C.C Licence -Light ) | 05 | 1500 Qrs | 54,000/= |
| கிளினிங் சுப்பவைசர்ஸ் | 05 | 1500 Qrs | 54,000/= |

1 QRS = Rs. 36.00

max adz

நிபந்தனைகள் & சலுகைகள் :
- தங்குமிடம்,போக்குவரத்து,மருத்துவ வசதி வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தம்
- வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் ,48 மணி நேரம் கிழமைக்கு.
- கிழமையில் ஒரு நாள் லீவு வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தகால நிறைவின் பின் இருவழி விமானச்சீட்டு வழங்கப்படும்
- ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

**அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் ரூ.40,000 மட்டும் அறவிடப்படும்.**



எமது நிறுவனத்திற்கு கிடைத்த விருது
EXCELLENCE AWARD WINNER

AL / 2427 /ADVT 18/14

## INTERVIEW
**05,06,07 December 2014**

நேர்முகத்தேர்வு வெளிநாட்டு
பிரதிநிதிகளினால் நடைபெறும் பாஸ்போட்
உடன் கீழ்க்தாணும்
முகவரிக்கு
விரைந்து வாருங்கள்



RODNEY
FOREIGN EMPLOYMENT AGENCY
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 2928-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு - 05.
Tel : 0112552598|0112506900 |0773074744 |0752058078
E - Mail : rodneyagency@hotmail.com (சி/18109)(3.6.4)

---

## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல இலத்திரனியல் மின்சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை. அனுபவம் உள்ளவர்கள் நாளை(01.12.2014) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்

**Jaffna Electricals**
**No.94 (06) Stanley Rd, Jaffna. 021 222 2353**
(சி.18041) (45.3)

---

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

---

## Astron Limited இன் அதிர்ஷ்டசாலிகள்



2014 ஜனவரி மாதம் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் Astron நிறுவனத்தினரால் Protinex கொள்வனவாளர் களிடையே நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் அதிர்ஷ்டசாலிகளாகச் தெரிவு செய்யப் பட்ட வர்களுக்கான பரிசு வழங்கும் வைபவம் கடந்த 19.11.2014 Ratnam பார்மஸியில் நடைபெற்றது.

**பரிசு பெற்றவர்கள்:**

1 ஆவது பரிசு -Mobile Phone (SAMSUNG S3)- ஜெ.தம்பையா
2 ஆவது பரிசு-Television - S.சிவசுப்பிரமணியம்
5 ஆவது பரிசு -Blue Ray DVD Player - செல்வி S.காயத்திரி

அதிர்ஷ்டசாலிகளுடன் எமது வியாபார மேம்பாட்டுக்குழு. Ratnam Pharmacy Proprietor S.சிவனந்தன், City Medicals Manager S.ரஞ்சித் மற்றும் Astron நிறுவன Brand Manager றுவந்த நாணயக்கார, Field Development Co.Ordinator வி.குணாளன் Nutrition Advisor S. சறோன் சாம், Marketing Representative இ.பிரசாத்

Astron
Astron Limited 688, Galle Road, Ratmalana.
Tel: 011 263 6741, 5566741 Fax: 011 263 6173
Email: astron@astron.lk Web: www.astron.lk
(சி/17930) (4.3.6)

---

## விசா பெற்றுக் கொள்ள இருப்பவர்களுக்கு.......




**German, France, Italy, Denmark, Norway, Sweden, Switzerland, Finland, Poland, Netherlands, Austria, Spain, Latvia, Belgium, Portugal, Hungary, Slovakia, Greece, Malta, Luxembourg,(Schengen Country) Korea**

### Visit Visa

- எவ்வித முற்பணமும் இல்லாமல் 2,3 வாரங்களில் செல்வதற்கு உண்டான வாய்ப்பு.
- தனியாக அல்லது குடும்பத்தாரோடு செல்வதற்கு உண்டான வாய்ப்பு.
- 100% நம்பிக்கையான முறையில் செய்து கொள்ளலாம்.

(சி.18188)



SKYWALK Visa Solutions
**SKYWALK VISA SOLUTIONS**
No.65,1/1,Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)
www.skywalk-vs.com
**Hotline: 0777711905**
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

செய்திகள்

வணிகம்



இலங்கை வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாடளாவிய ரீதியில், ஒரு இலட்சம் மரக் கன்றுகளை நடும் "துருமித்துரு" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திருகோணமலை உப்புவெளி கிளையினால் நிலாவெளி – இக்பால் நகர் வீதியின் இரு மருங்கிலும் 200 மரக்கன்றுகளை நடுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதன் முதற்கட்டம் வங்கி வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கிழக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.பி.ஆனந்த நடேசன், இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் தர்மகீர்த்தி மற்றும் உப்புவெளி கிளையின் முகாமையாளர் என்.ரி.ரகுராம் உட்பட பலர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டனர். (த)



தேசிய சேமிப்பு வங்கியின் தலைமைக்காரியாலயத்தின் பொதுமுகாமையாளர் உள்ளிட்ட குழுவினர் கடந்த திங்கட்கிழமை கொடிகாமம், முல்லைத்தீவு ஆகிய கிளைகளைத் திறந்து வைத்தனர். அன்றைய தினம் கிளிநொச்சிக் கிளைக்கு வருகை தந்து புதிதாக தேசிய சேமிப்பு வங்கியால் அறிமுகப் படுத்தப்பட்ட சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கான கடன்களை வாடிக்கையாளர்களுக்கு பொது முகாமையாளர் டம்மிக்கா பெரேரா வழங்குவதைக் காணலாம். (ஒ)



சர்வதேச நீரிழிவு தினம் 2014 ஐ முன்னிட்டு, சன்ஷைன் ஹெல்த் கெயார், எதிர்வரும் 14ஆம் திகதியை சர்க்கரை அற்ற தினமாகப் பிரகடனப்படுத்தி தி ள்ளது.

# லைசோலின் பல்நோக்கு தொற்று நீக்கி




கிருமிகள் மற்றும் நோய்களுக்கு எதிரான பாதுகாப்பு ஊடாக தினசரி அடிப்படையில் ஆரோக்கியமான மற்றும் தூய வீட்டை உருவாக்க வேண்டியமை மிக முக்கியமாகும். லைசோலின் புதிய பல்நோக்கு தூய்மையாக்கியானது வீட்டின் அனைத்து பரப்புகளிலும் பயன்படுத்த மிகச் சிறந்தது.

லைசோலின் பல்நோக்கு தொற்று நீக்கியானது, இலங்கையில் தாய்மார்கள் மற்றும் குடும்பத் தலைவிகளுக்கு தங்களது குடும்பங்களின் பாதுகாப்பு தொடர்பில் நம்பிக்கை வைக்கக்கூடிய பரிசோதிக்கப்பட்ட தூய்மையாக்கியாக திகழ்கிறது.

லைசோலின் சக்திமிக்க தூய்மையாக்கியானது, நாளாந்தம் படியும் அழுக்குகள் மற்றும் கிரீஸ்களை நீக்கி 99.9 வீதமான கிருமிகளை அகற்றுவதுடன், சாதாரணமான பினைலினை விட பத்து மடங்கு செயற்திறன் மிக்கதாக தொழிற்படக்கூடியது.

பக்ரீறியாக்களினால் ஏற்படும் துர்நாற்றத்தைபோக்கி அனைத்து மேற்பரப்புகளிலும் புத்துணர்ச்சியான நறுமணத்தை வழங்குவதுடன், ஒன்று அல்லது இரண்டு நாளுக்கு நீடிக்கச் செய்கிறது. இந்த நறுமணம் தங்களது வீடு உண்மையாகவே சுத்தமாக உள்ளது என்ற தன்னம்பிக்கையை தாய்மாருக்கு வழங்குவதாக அமைந்துள்ளது.

"லைசோல் தூய்மையான, சுகாதாரமான சுற்றுச்சூழலை பேணுவதற்கு தேவையான கருவிகளை குடும்பங்களுக்கு வழங்குகிறது. சுத்தம் செய்வதைத் தாண்டி சக்திமிக்க தூய்மையை வழங்குவதற்கு குடும்பங்களுக்கு உதவுவதை நாம் உறுதிப்படுத்துகிறோம்" என லைசோல் வர்த்தக நாமத்தின் சிரேஷ்ட வர்த்தகநாம முகாமையாளர் ருச்சிர மணி தெரிவித்தார்.

லைசோலின் பல்நோக்கு தூய்மையாக்கியானது, அன்னையர் மற்றும் குடும்பத் தலைவிகள் மத்தியில் சிங்க்குகள், அடுப்பின் மேற்பாகங்கள், அலுமாரிகள், குளிர்சாதன பெட்டியின் வெளிப்புறம், பாத் டப், குளியலறைத் தொட்டி, ஷவர் கதவுகள் மற்றும் கழிப்பறை தொட்டியின் வெளிப்புறம் ஆகியவற்றில் படிந்துள்ள அழுக்குகள், கிரீஸ் மற்றும் சவர்க்கார அழுக்குகள் போன்றவற்றை நீக்குதல் உள்ளிட்ட வீட்டின் அனைத்து பரப்புகளிலும் பயன்படுத்த முடிகிறது. மேலும் புளோரல், பைன், லெவண்டர் மற்றும் சிட்ரஸ் போன்ற இயற்கை நறுமணங்களை கொண்டுள்ள இந்த உற்பத்தி, அறைகளில் இனிய நறுமணத்தால் பரவச் செய்கிறது.

# வீவாவின் புதிய படைப்பு




மோல்டட் ஆகார பான உற்பத்திகள் மத்தியில் இந்த நாட்டில் புகழ்பெற்ற வர்த்தக நாமமான வீவா ஆனது வீவா ஜின்ஜர் எனும் புதிய ஆகார பானத்தை அறிமுகம் செய்து மோல்டட் உற்பத்தி சந்தையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

புதிய வீவா ஜின்ஜர் உற்பத்தியில் பால் மற்றும் மோல்ட் நலச்செழுமை மற்றும் இஞ்சி சுவை ஆகியன உள்ளடங்கியுள்ளமையால் இலங்கையரின் தேநீர் மேசையில் முக்கிய பானமாக மாற்றமடைந்துள்ளது.

சம்பிரதாயமான மோல்டட் பானத்துக்கு தம்மை பழக்கப்படுத்திக்கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு புதுமையான அனுபவத்தை வீவா ஜின்ஜர் வழங்குகிறது.

புதிய வீவா ஜின்ஜர் தயாரிப்பானது வாடிக்கையாளருக்கு ஏழுச்சியூட்டும், சுவையான மோல்டட் ஆகார பானத்தை வழங்குகிறது. சம்பிரதாய தேநீர் கோப்பையில் மோல்டட் சுவையைச் சேர்த்த நாம் தற்போது இஞ்சி சுவையையும் சேர்த்து தேநீர் அருந்துவதை புதிய அனுபவமாக மாற்றமடையச் செய்துள்ளோம். இந்த புதிய அனுபவத்தைபெற்றிட வாடிக்கையாளர்கள் தமது வழக்கமான தேநீர் கோப்பையில் வீவா ஜின்ஜர் சுவை சேர்க்க வேண்டியது மாத்திரமே உள்ளது என GSK நிறுவனத்தின் வர்த்தக நாம பிரிவின் முகாமையாளர் தர்ஷன் ஜயசிங்க தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக எவ்வித மாற்றங்களும் ஏற்படாத மோல்டட் ஆகார பான சந்தையில் புரட்சியை ஏற்படுத்தி வாடிக்கையாளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த)

# சர்க்கரை அற்ற தினத்தை பிரகடனப்படுத்தியுள்ள சன்ஷைன் ஹெல்த்கெயார்

சன்ஷைன் ஹெல்த்கெயார் நிறுவனம் இலங்கை நீரிழிவு சங்கத்துடன் இணைந்து, இலங்கையில் நீரிழிவு தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வந்துள்ளது.

ஆரம்பத்தில் மேலைத்தேய நாடுகளில் மட்டுமே அதிகளவில் காணப்பட்ட நீரிழிவு நோய், தற்போது உலகம் முழுவதும் பரவலாக காணப் படுவதுடன், தென்கிழக்காசிய நாடுகள் இந்த நோயால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. சர்வதேச நீரிழிவு சம்மேளனத்துக்கு அமைவாக, உலகின் ஐந்தில் ஒரு வயது வந்த நீரிழிவு நோயாளர்கள் தென்கிழக் காசிய நாடுகளில் வசிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சன்ஷைன் ஹெல்த்கெயார் நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி பேர்னாட் ஜோசப் கருத்துத் தெரிவிக்கையில்; நீரிழிவு என்பது எவரையும் பாதிக்கக்கூடியது. இலங்கையை பொறுத்தமட்டில் இது தற்போது அதிகளவானவர்களின் கவனத்தை ஈர்த்த விடயமாக அமைந்துள்ளது.

இருந்த போதிலும், மக்கள் இந்த நோய் பற்றி அதிகளவு சிந்திப்பதில்லை. இதன் காரணமாக, இலங்கையர்கள் மத்தியில் நீரிழிவு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டத்துக்கு இணை அனுசரணை வழங்க நாம் தீர்மானித்தோம் என்றார்.

இலங்கையில் தற்போது வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றமையால், நீரிழிவுநோய் என்பது அதிகளவில் காணப்படுகின்றது. 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 25 வீதமானவர்கள் நீரிழிவால் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. (த)

# விளம்பரங்கள்

### சுகாதார விழிப்புணர்வு வேலைத்திட்டம்

கரணவாய், நவ.30

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நாளை முதல் சுகாதார விழிப்புணர்வு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஆரோக்கியமான இலங்கை தேசிய சுகாதார நிகழ்ச்சித்திட்டம் என்ற தொனிப் பொருளில் மத்திய கல்வி அமைச்சும் வடமாகாண கல்வி அமைச்சும் இணைந்து முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை சுகாதார விழிப்புணர்வு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அந்த வகையில் வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலும் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த–108)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18.01.1932

மறைவு
22.11.2012

**அமரர் பசுபதி செல்லாச்சி**

திதி: 30.11.2014

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிய எம் குல விளக்கே! - நீர்
எம்மை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆனாலும்
உம் நினைவுகள் என்றும் எம்மை விட்டு மறைவதில்லை

சோலங்கள்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி. (சி.62027) (49.6.3)

என்றும் நினைவால் வாடும்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 . 07 . 1949



மறைவு
07 . 12 . 2013

**அமரர் வைத்திலிங்கம் கந்தசாமி**

(முன்னாள் I.P. உத்தியோகத்தர் Police College களுத்துறை)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த (07.12.2013) சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் வைத்திலிங்கம் கந்தசாமி அவர்களின் ஓராண்டு நினைவாக இன்று (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை சிவபூமி அன்னதான மண்டபத்தில் மதியபோசன நிகழ்வு இடம்பெறும். இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"புவனேஸ்வரி"
நாமிகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(54470) (45.6.3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
24 . 05 . 1948



விண்ணில்
28 . 10 . 2014

**சபாரட்ணம் கிருபாமூர்த்தி**

(கட்டட ஒப்பந்தக்காரர் – ஏழாலை மேற்கு ஏழாலை)

மாதமொன்று மறைந்தாலும் மாறாது எமது துயர்
ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயிலில்
எங்கே மறைந்து விட்டீர் எமது தெய்வமே !
உள்ளவரெல்லாம் நல்லவரென்று ஊரவரெல்லாம்
உற்றத்தார் என்று நேசம் கொண்டு
பழகி வந்தீர்களே – உங்கள் பாசம் அறியாத
பாசமலர்கள் வேஷம் கொண்டு
வேதனை தந்தார்களே – உங்கள் தெளிவான
பேச்சும் கனிவான புன்னகையும்
களங்கமில்லா வதனமும் கம்பீரத் தோற்றமும்
நிதம் காணத் துடிக்கின்றோமே
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இல. 32C, இன்னர் பெயர்லைன் வீதி, தெஹிவளை

## நெஞ்சங்களில் நிழலாடும் நினைவுகளோடு...

**நிலை தளர்ந்த பதின்னான்கில்**

**வழி நெகிழ்ந்த பதினெட்டில்**

மண்ணகம்
03.08.1942

மண்மலர்வு
19.10.1976





தேகம் எனும் அந்தரங்க
சாம்ராஜ்ஜியத்துள்
மனிதம் நிறைந்த புனித ஜீவனே!
காற்றில் கரைய முடியாத
கண்ணீர்த் திவலைகளோடு – எம்
சந்தோஷங்கள் விசும்பல்களாகி
வெந்து கொண்டிருக்கின்றன–
உம் பிரிவால்
பாசமிகு ஜீவன்களே!
இனிய காலை வரவிற்காய்
காத்திருக்கும்
ஒரு நாளின் புனிதத்தைப் போல
உம் ஆசீர்வாதங்களுக்காக
காத்திருக்கும்
நாமும்...

விண்ணகம்
30.11.2000

**அமரர் இராசு செல்வரட்ணம்**

(அம்பாள் மரக்காலை உரிமையாளர்)

மண் உதிர்வு
21.08.1996

**செல்வி செல்வரட்ணம் றஜனி**

(யாழ்.இந்து மகளிர் கல்லூரி A/L 1995 வர்த்தகப்பிரிவு)

செல்வபதி, 256, நாவலர் வீதி,
இலுப்பையடி சந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(54500) (4.6.3)

# விளம்பரங்கள்

## கால்நடைகளால் விபத்து அபாயம்

பூநகரிப் பிரதேசத்தில் வீதியோரங்களில் கால்நடைகளை மேயக் கட்டுவதினால் வாகனங்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பூநகரி பிரதேச சபைத் தவிசாளர் விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் வீதியோரங்களில் கால்நடைகளைக் கட்டுவதைத் தவிர்க்குமாறு மக்களைக் கோரியுள்ளார்.

பூநகரி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதையடுத்து கால்நடைகளை வயல்வெளிகளில் மேய விட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் நெற்பயிர்களைப் பாதுகாக்கும் வகையில் கால்நடைகளைக் கட்டி வைக்க வேண்டிய நிலையும் உருவாகியுள்ளது. இதையடுத்து மக்கள் தற்போது கால்நடைகளை மேய்வதற்காக வீதியோரங்களில் கட்டுகிறார்கள். இதனால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதுடன் விபத்துக்கள் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.(த–115)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி நரநாராயணசிங்கம்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நரநாராயணசிங்கம் நேற்று (29.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

பொன்னாலை. (C17944) (10.6)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் இராமலிங்கம்



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் முள்ளானை, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராமலிங்கம் நேற்று (29.11.2014) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குஞ்சரத்தின் அன்புக் கணவரும், அப்புத்துரை, செல்லத்துரை, தர்மலிங்கம் காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னம்மா, இரத்தினம் ஆகியோரின் சகோதரனும், திருச்செல்வம் (ஆசிரியர் கிளி/கிராஞ்சி அ.த.க. பாடசாலை), காலஞ்சென்றவர்களான வேல்ராசா, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலகிருஸ்ணன், தர்சினி ஆகியோரின் அன்பு மாமனும், விஜிந்தன், விஜிந்தினி, விஜயரூபன், விஜய மோகன், விஜயகாந், சரணியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2014) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நணபகல் 12.00 மணியளவில் கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அன்பு மகன் இ. திருச்செல்வம்**
T.P: 077 958 3492

(54512) (10.6)

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் தில்லைநாதர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தில்லைநாதர் நேற்று (29.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்–அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி-தெய்வானை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கணவரும், காலஞ்சென்ற கமலநாதன், சிவநாதன் (லண்டன்),கௌரி (லண்டன்), காலஞ்சென்ற கௌசலா ஆகியோரின் தந்தையும், சந்திரமாதவன் (ரவி-லண்டன்), பவானி (லண்டன்) ஆகியோரின் மாமனும், அபிதா, தனுசியா, சிவகரன் மதுஷன், திலக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்.**

(54517) (10.6)

### இராயப்பு அல்பிரட் (மாஸ்ரர்)



13/5, மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவரும் பெரியகுளம் வீதி, நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை எனும் முகவரியில் வசித்து வந்தவருமாகிய இராயப்பு அல்பிரட் 28.11.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராயப்பு-மதலேய்னம் தம்பதியரின் அன்பு மகனும், அல்பிரட் பிரான்ஸ்சிஸ்காவின் (றோசா) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான யோசேப்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பெரியகுளம் வீதி, நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாரந் தனை இராயப்பர் சின்னப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**
தொலைபேசி இல:078 921 8306

(54514) (10.6)



### சிவகடாட்சம்பிள்ளை சிவகுமாரன்

(கண்ணன்-சாரதி, மாகாண பொது சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் லவ்லேன், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகடாட்சம்பிள்ளை சிவகுமாரன் (28.11.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகடாட்சம்பிள்ளை-தேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான் சிவகுரு-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், மலர்விழியின் அன்புக் கணவரும், அக்ஷனா, ஆர்த்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சத்தியகுமாரன் மற்றும் சிவாணி (சுவிஸ்), சியாமினி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கலாமோகன் (சுவிஸ்), ஜெயகௌரி (கொழும்பு), ஸ்ரீ (கனடா), மணிவண்ணன் (சுவிஸ்), சிவகுமார் (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்த மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோகுலபவனம்,**
**லவ்லேன், உடுவில்.**

(54492) (10.6.3)

தகவல்: **குடும்பத்தினர்.**
021 22 55 724



### இல்லங்குடி வண்ணமுத்து ஆச்சாரி

இந்தியா தூத்துக்குடியைப் பிறப்பிடமாகவும் கன்னாதிட்டி, பூநாறிமரத்தடி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இல்லங்குடி வண்ணமுத்து ஆச்சாரி 26.11.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22/18, **அம்பாள் ஒழுங்கை,**
**பூநாறி மரத்தடி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**
077 597 9444

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(54478)(46.6.3)

# விளம்பரங்கள்

## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

## வழிபடுநர் சபை, உறுப்புரிமை விண்ணப்பம் கோரல்-2015

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஆலய முகாமைத்திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் முகாமைத்திட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை செயலாளர், **நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்** எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியிலோ நேரடியாகவோ செலுத்த இயலும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுமீ திகதி: 2014.12.01 தொடக்கம் 2014.12.31 பிற்பகல் 5 மணி வரை ஆகும்.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய காசுக்கட்டளை தபாற் கட்டளை விவரங்கள் தேவைப்படும் இடத்தில் 021321 3024 021 320 7785 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாகத் தயாரித்துக் கொள்ளலாம்.

2014ஆம் ஆண்டு வழிபடுநர் சபை அங்கத்தவர்களாக இருப்பவர்கள் விண்ணப்பத்தை விண்ணப்பிக்க விரும்பின் வழிபடுநர் சபையின் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்திலும் (2 ஆவது அட்டவணை) அவ்வாறு இல்லாது புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வழிபடுநர் சபை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம் (முதலாவது அட்டவணை) விண்ணப்பிக்க வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பங்கள் பின்வருவோர்களில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும்

* சமாதான நீதிவான்
* இந்துமதகுரு
* இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்
* கிராம சேவை உத்தியோகத்தர்
* அரசாங்கப் பாடசாலை அதிபர்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயருடன் கூடிய இறப்பர் முத்திரை பொறிக்கப்பட வேண்டும்.

அன்னையின் சேவையில் :- ந.மோகன ரூபன் - செயலாளர், அறங்காவலர் சபை, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்.

## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

முதலாவது அட்டவணை

வழிபடுநர் சபை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம் - 2015

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:........................................
2. முகவரி:........................................
3. பிறந்த திகதி:........................................
4. நீர் ஓர் இந்துவா?........................................
5. நீர் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநரா?........................................
6. விளம்பர வாசகர் 2 (அ) அல்லது (ஆ) வின் பிரகாரம் உறுப்புரிமையைத் தகுதியுடையவராயின் பின்வரும் விவரங்களைத் தரவும்.
   அ. இந்த ஆலயத்தில் ஏதாவது உபயங்களுக்கு உரித்துடையவராய் இருக்கின்றீரா?...........
   ஆ.நித்திய பூசையா/உற்சவமா........................................
   (நித்திய பூசையாயின் திகதியையும் உற்சவமாயின் அதன் விவரத்தையும் தருக)
   இ.உபயப் பணம் செலுத்தப்பட்டிருப்பின் ப.சீ.இலக்கம்..............திகதி..................
7. நீர் ஏதாவது குற்றத்தின் பேரில் எந்த ஒரு நீதிமன்றத்தாலேனும் தண்டிக்கப்பட்டுள்ளீரா?......
8. இக்கோயில் மாத வேதனம் பெறும் அல்லது கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ/ குருவாகவோ உள்ளீரா?
9. இக்கோயிலில் நீர் ஏதாவது ஒப்பந்தம் செய்துள்ளீரா?
10. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/தபாற்கட்டளை பற்றிய விவரம்.
    கட்டளை இல................... திகதி .......................

எனக்குத் தெரிந்த வகையிலும் நம்புகின்ற வகையிலும் மேலே என்னால் கூறப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவை என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். வழிபடுநர் சபையின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு நான் இத்தால் விண்ணப்பித்துக்கொள்கின்றேன்.

........................................ ........................................

திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

இவ் விண்ணபத்தில் உள்ளவை யாவும் இதில் சொல்லப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் வாசித்து விளக்கப்பட்டன. இவரை எனக்குத் தனிப்பிட்ட முறையில் தெரியும், இவர் இவற்றை நன்கு விளங்கிக்கொண்டு என் முன்னிலையில் 20.... வருடம் மார்கழி மாதம்.... ஆம் திகதியே இன்று கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்திகின்றேன்.

பெயரும் பதவி முத்திரையும் என்முன்பாக

........................................ ........................................

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு: அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் ப்தவிக்கான றபர் ஸ்டாம் இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 31.12.2014 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.**

## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

இரண்டாவது அட்டவணை

வழிபடுநர் சபை உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் - 2015

கௌரவ செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீநாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு

அன்புடையீர்!

2015 ஆம் வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் ஆண்டிற்கான எனது வழிபடுநர் சபைச் சந்தாவைப் புதுப்பிப்பதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன். இத்துடன் ரூபா பத்து ஐம்பதுக்கான இலக்கம்......... உடைய காசுக்கட்டளை, தபாற் கட்டளை இணைத்துள்ளேன். வழிபடுநர் சபை உறுப்புரிமை வேண்டிய எல்லாத் தகைமைகளையும் நான் தொடர்ந்து பெற்றிருக்கின்றேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

1. எனது பெயர்: ........................................
2. முகவரி:........................................
3. ஆலயத்தில் எனக்கு இருக்கும் உபயம்:........................................
   (உபயம் நித்திய பூசையாயின் திகதியையும் உற்சவமாயின் அதன் விவரத்தையும் தருக)
4. உபயப் பணம் செலுத்தப்பட்டுள்ள ப.சீ.இல................ திகதி..........................
5. எனது முன்னைய உறுப்புரிமை இல. 2012 இல் ..........2013இல்....... 2014 இல்........

........................................ ........................................

திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

இவ் விண்ணபத்தில் உள்ளவை யாவும் இதில் சொல்லப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் வாசித்து விளக்கப்பட்டன. இவரை எனக்குத் தனிப்பிட்ட முறையில் தெரியும். இவர் இவற்றை நன்கு விளங்கிக்கொண்டு என் முன்னிலையில்.............. வருடம் மார்கழி மாதம்......... ஆம் திகதியே இன்று கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

பெயரும் பதவி முத்திரையும் என் முன்பாக

........................................ ........................................

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு: அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான றபர் ஸ்டாம் இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 31.12.2014 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.**

(சி/17938)


## வீடு வாடகைக்கு உண்டு

கல்வியங்காடு,செங்குந்த பாடசாலைக்கு அருகில் 5 அறைகள் (2 இணைந்த குளியலறைகள்), 2ஹோல்கள், வாகனத்தரிப்பிட வசதி மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு. Parking வசதி செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு : 071 860 5623

(54508)

நத்தார் புதுவருட தினத்தை முன்னிட்டு மாபெரும் விற்பனைத் த்ள்ளுபடி

SALE UP TO 25% OFF

9.00AM -7.00PM

Ranjanas CERAMIC

Special offer

QUALITY TILES AND SANITARYWARE

#212, Palaly Road, Jaffna. 0212220033/ 0212220044

## 3 சில்லு மோ.சைக்கிள்கள் விற்பனைக்கு

* ஊனமுற்றவர்களுக்கு * வியாபார தேவைக்கு * வீட்டுப்பாவனைக்கு ஏற்றது. ஊனமுற்றவர்களுக்கும், அவர்களுக்கு உதவிபுரியும் நிறுவனங்களுக்கும் விசேட விலைக்கழிவு.



தொடர்பு:
**Rajarajan**
**077 953 6221,**
**077 916 2981**
**socialdev.boy@gmail.com**

(சி/17766) (12.3.6)

## மாத, நாள் வாடகைக்கு -வீடு

வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கும், விசேட நிகழ்வுகள், வைபவங்களுக்கு வருபவர்களுக்கும் வசதியாக அனைத்துத் தளபாடங்களுடன் கூடிய சொகுசு மற்றும் அதிசொகுசு வீடுகள் (Swimming pool, Gym, Spa, restaurant, 24h scurity), தலைநகர் கொழும்பு, வெள்ளவத்தையை அண்டிய பகுதியில் நாள், கிழமை, மற்றும் மாத வாடகைக்குக் கிடைக்கும்.

மேலதிக விவரங்களுக்கு: 078 2845123


## 2015 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தை, கருவாட்டுக்கடை என்பவற்றை 01.01.2015 - 31.12.2015 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | தொ. இல. | விவரம் | வைப்பு மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| கனகராயன்குளம் நெடுங்கேணி | 01 | நெடுங்கேணி மீன் சந்தை | 2000.00 | 5000.00 | 88,000.00 |
| | 02 | நெடுங்கேணி மரக்கறி சந்தை | 2000.00 | 5000.00 | 100,000.00 |
| | 03 | கனகராயன்குளம் கருவாட்டுக்கடை | 2000.00 | 5000.00 | 15,000.00 |
| | 04 | கனகராயன்குளம் மரக்கறிச்சந்தை | 2000.00 | 5000.00 | 30,000.00 |
| | 05 | கனகராயன்குளம் மீன் கடை | 2000.00 | 5000.00 | 20,000.00 |
| | 06 | கனகராயன்குளம் மாட்டிறைச்சி கடை | 2000.00 | 5000.00 | 300,000.00 |
| | 07 | நெடுங்கேணி மாட்டிறைச்சி கடை | 2000.00 | 5000.00 | 350,000.00 |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 01.12.2014 - 14.12.2014
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 15.12.2014 பி.ப 01.30 மணி வரை
   கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி 15.12.2014 பி.ப 02.00 மணிக்கு
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா"** என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையும் அதன் நிழற்பட பிரதியையும் கொண்டுவருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
6. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 2/3 பங்குத்தொகையை 17.12.2014 ஆம் திகதி செலுத்தி அன்றைய தினமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 1/3 தொகையினை 30.08.2015 இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக 05ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கும், எந்தவொரு கேள்வியும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
8. கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. மரக்கறி சந்தை மண்டபம் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர் கொண்டுவரும் பொருள்களின் விற்பனையில் 4 % இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
11. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
12. கடை, சந்தைகளின் தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியுாவீர்கள்.
13. மரக்கறிசந்தைக்கு உற்பத்தியாளரால் விற்பனைக்கு கொண்டுவரப்படும் உற்பத்தி பொருள்களின் நிறையில் கழிவுகள் எதனையும் குத்தகையாளரால் விதிக்க முடியாது.

**மு.பாலசுப்பிரமணியம்**
**தவிசாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேசசபை,**
**நெடுங்கேணி.**

(C/17937) (10.6)

# தொடர்ச்சிகள்

## 9,000

நான்கு மாவட்டங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் பல கிராமங்களுக்குள் வெள்ளம் புகுந்தமையினால் கடும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

நேற்றையதினம் காலையில் மழை பெய்தாலும், அதன் பின்னர் ஓய்ந் திருந்தது. ஆனாலும் குளிரான காற்று தொடர்ந்து வீசியது. இயல்பு நிலை இதன் காரணமாக பூரணமாகத் திரும்பவில்லை. ஆனாலும் பெரும்பாலான பகுதியில் வெள்ளம் வடிந்தோடியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில், தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் நாவற்குழி மேற்குப் பகுதியில் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மழை வெள்ளத்தினால் குடியிருப்புகளை விட்டு வெளியேறி அருகில் உள்ள சனசமூக நிலையத்தில் தங்கியுள்ளனர். இந்தக் குடும்பங்களுக்கு ஒரு வாரத்திற்குரிய நிவாரணப் பொருள்கள் பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்பட் டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில், தொடர்மழை வெள்ளத்தினால், அச்சுவேலி தெற்கு கரதடி, புத்தூர் கிழக்கு, வாதரவத்தை, இருபாலை உள்ளிட்ட பகுதிகளில் தாழ்வான பகுதியில் குடியிருக்கும் வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளது. இந்தப் பகுதிகளில் இருக்கும் மக்கள் வெள்ளத்துக்கு தாக்குபிடிக்க முடியாத நிலையில் வீடுகளை விட்டு வெளியேறி உறவினர் இல்லங்களிலும்பொது இடங்களிலும்தங்கியுள்ளனர். மண் வீடுகள், குடிசைகள் சேதமடைந்துள்ளன.

தோட்டங்களில் மழை வெள்ளம் தேங்கி நின்று மரக்கறிவகை சேதமடைந் தமையினால் மரக்கறி வகைக்கு தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இடர் பதிவுகள் புதிதாக எதுவும் நேற்று மேற்கொள்ளப்படவில்லை. இது வரையில் யாழ்ப்பாணத்தில் 7 ஆயிரத்து 343 குடும்பமும், முல்லைத்தீவில் 174 குடும்பமும், வவுனியாவில் 874 குடும்பமும், மன்னாரில் ஆயிரத்து 466 குடும்பமுமே பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

(த-5-11-9-108)

## பளு தூக்கும்

58 கிலோ எடைப்பிரிவில் விஜயபாஸ்கரன் ஆசிகா 105 கிலோ எடையை தூக்கி முதலாமிடத்தைப்பெற்று தங்கப் பதக்கத்தினைப் பெற்றார். பெண்களுக்கான 63 கிலோ எடைப்பிரிவில் ஜே.ஜே டினோச 110 கிலோ எடையை தூக்கி தங்கத்தைத் தனதாக்கினார். (உ-23)

## பொது

தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வண. சோபித தேரர், பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க ஆகியோர் உட்பட கையெழுத் திடும் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் தலைவர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வை நடத்த விடாமல் தடுக்கப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது விகாரமாதேவி பூங்கா திறந்தவெளி அரங்கில் நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. சோபித தேரர் தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தில் இணைந்துள்ள கட்சிகள், ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க தலைமையிலான பிரிவு ஆகிய வற்றின் பிரதிநிதிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்து இடுவார்கள்.

(த-5)

## யாழ்ப்பாணத்துக்கு

வி.மகாலிங்கம், இந்த வருடம் ஆரம்பத்தில் கஜனாவுக்கான தூதுவராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றிருந்தார். இந்த நிலையில், கண்டியிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் தூதுவராகக் கடமையாற்றிய நடராஜ், யாழ்ப்பாணத்திலுள்ள துணைத் தூதராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் கண்டியில் கடமையாற்றிய தூதுவர் நடராஜுக்கு, பிரியாவிடை நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி மாலை நுவரெலியாவில் இடம்பெற்றது. அடுத்த மாதம்,அவர் யாழ்ப்பாணத் திலுள்ள தூதரகத்தில் பதவியேற்கவுள்ளார். இதேவேளை கண்டியிலுள்ள தூதரகத்துக்கு, நேபாளத்திலிருந்த ஒருவரே தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

(த-5)

## பொலநறுவையில்

புரத்திலிருந்தே தனது தேர்தல் பரப்புரையைத்தொடங்கவுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சியிலிருந்து எதிரணிக் குத் தாவிய மைத்திரிபால சிறிசேன, பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர், தனது சொந்த ஊரான பொலநறுவைக்கு இன்று செல்லவுள்ளார். இன்று அங்கு இடம்பெறும் பிரமாண்டமான முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

'ஜெயசிறி மைத்திரி' (வெற்றி மைத்திரி) என்ற முழக்கத்துடன் பரப்புரை ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தில், மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றவுள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுபநேரத்தில், தனது பரப்புரையை அநுராதபுரத்தில் இருந்து ஆரம்பிக்கவுள்ளார். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி வேட்புமனுத்தாக்கல் செய்த பின்னரே, பரப்புரையை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(த-5)

## சிறிசேனவின்

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின், சகோதரர் டட்லி சிறிசேன, அரலிய அரிசி ஆலையை நடத்தி வருகின்றார். இந்த அரிசி ஆலைக்குச் சொந்தமான லொறி, பொலனறுவையிலிருந்து மரதஹமுல்லவுக்கு அரிசி ஏற்றிச் சென்றுள்ளது.

இதன்போதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 'இனிமேல் மரதஹமுல்லவுக்கு அரிசி ஏற்றிக்கொண்டு வரக்கூடாது' என்று லொறியின் சாரதி மற்றும் நடத்துனருக்கு எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸி

(த-5)

## சுப நேரத்தில்

இடமாற்றம் செய்யப் பட்டார். இதனையடுத்து, இஸ்ரேலுக்கான பிரதித் தூதுவராகப் பணியாற்றி வந்த மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

பௌத்த, இந்து, கத்தோலிக்க மற்றும் இஸ்லாம் மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன், சுப நேரத்தில் அவர் தனது பதவியை நேற்று ஏற்றுக் கொண்டதாக, பலாலி கட்டளைத் தலைமைய ஊடகப் பிரிவு அதிகாரி மேஜர் மல்லவராச்சி தெரிவித்தார். (த-5)

## மஹிந்தவே

மஹிந்த ராஜபக்ஷ மூன்று தடவைகள் அல்ல நான்கு தடவைகள் இலங்கையை ஆட்சி செய்வார். ஜனாதிபதியே அடுத்த ஆட்சியை அமைப்பார்.

பொது வேட்பாளராக போட்டியிடும் மைத்திரிபால பொலனறுவை தொகுதியை மாத்திரமல்ல, பொலனறுவை மாவட்டத்திலோ, வடமத் திய மாகாணத்திலோ எந்த தொகுதியிலும் வெற்றி பெறமாட்டார் எனவும் சுமணதாச அபேகுணவர்த்தன கூறியுள்ளார். (த-5)

## வரலாற்று

அழைத்துள் ளார்கள்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவும் கலந்துகொள்ள விருக்கிறார். இந்த அழைப்பின் நோக்கம்பற்றியும்அது வந்துள்ள காலம் பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டும். இதுபோன்றதொரு அழைப்பு 2010இலும் கல்வி சார் ஊழியர்களுக்கு வந்தது. அதன் போது பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. ஆனால் தேர்தலின் பின் ஏமாற்றப்பட்டோம். இன்றும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கபட்டுள்ள நிலையில் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இக்கூட்டத்தில் என்ன விடயங்கள் ஆராயப்படவுள்ளன என்பது பற்றி யாருக்கும் தெரியாது. இவ்வாறு இருக்கையில் பல துணைவேந்தர்களும் அவர்கள் எள் என்றால் எண்ணெயாய் நிற்கும் சில துறைத் தலைவர்களும் கல்விசார் ஊழியர்களுக்கு கரட்டையும் தடியையும் காட்டி கூட்டத்திற்கு வருமாறு வற்புறுத்துகிறார்களாம்.

கல்வி சார் ஊழியர்களே இந்த அரசால் · எமக்களிக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப் படாமலேயே உள்ளன. எம்மையும் சாதாரண அப்பாவி மக்களை இலகுவாக ஏமாற்றுவது போல ஏமாற்றப் பார்க்கிறார்களா? இந்தக் கூட்டத்தையும் தமது அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்தப் போகிறார்களா? நாமும் இதற்குத் துணை போவதா?

அராஜகங்கள் மற்றும் சர்வாதிகாரம் அற்ற ஒரு நாட்டில் அனைத்து இன மக்களும் சம உரிமையுடன் ஐக்கிய இலங்கைக்குள் மகிழ்ச்சியாக வாழ வழி பிறக்கும் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படும் இந்த வேளையில் நாம் அனைவரும் நிதானமாகச் சிந்திப்போம். நாம் கல்வியியலாளர்கள். நாம் சரியாகவே சிந்திப்போம் என்பதை அனைவருக்கும் எடுத்துக் காட்டுவோம். விசேடமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க அங்கத்தவர்களே சிந்தித்து முடிவெடுப்போம். வரலாற்றுத் தவறுகளை இழைக்காதிருப்போம்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களது ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனமும் (ய்ஸ்ரா) எச்சரிக்கை மணியடித்து அறிக்கை வெளியிட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது – எனத் தெரிவித்தார். (உ-4)

## வருடா

கொட்டும் மழைக்கு மத்தியிலும் இவர்கள் போராட்டத்தை நடத்தினர்.

பொலிஸார், பெண்கள் மீது தடியடி நடத்தித் தமது வீரத்தைக் காண்பித்து போராட்டக்காரர்களைவலுக்கட்டாயமாக அகற்றினர். இருப்பினும் மேற்படி மக்கள் தங்கியுள்ள தனியார் காணியை முறைப்படி சுவீகரித்து பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று, அரச அதிகாரிகள் உறுதிமொழி வழங்கியதைத் தொடர்ந்து போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

### திடீர் போராட்டம்

ஒவ்வொரு மழையின் போதும் யாழ்.நகரப் பகுதியில் பொம்மை வெளிப் பிரதேசம் வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது. அங்கு தங்கியுள்ள மக்கள் வெள்ளம் வடியும் வரையில் வெளியேற வேண்டி ஏற்படுகின்றது. கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் கடுமையான வெள்ளம் அந்தப் பகுதியில் தேங்கியுள்ளது. நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை, தற்காலிகமாக வாய்க்கால் வெட்டி வெள்ளம் அகற்றப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த பிரதேசத்தில் தங்கியுள்ள மக்கள் திடீரென்று நேற்றுக் காலை போராட்டத்தில் குதித்தனர். கடுமையான மழையையும் பொருட்படுத்தாமல் கிராமத்திலுள்ள சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என்று சகலரும் வீதி மறியலில் இறங்கினர்.

யாழ்ப்பாணம் – அராலிக்கு, காக்கைதீவின் ஊடாகச் செல்லும் வீதியில் மழைக்கு நடுவில் அமர்ந்திருந்து போராட்டம் நடத்தினர். இதனால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

### நாங்களும் மக்களே

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு பதாகைகளையும் தாங்கியிருந்தனர். 'நாம் 15 வருடங்களுக்கு மேலாக் வறுமைப்பட்ட நிலையில் இங்கு வாழ்ந்து வருகின்றோம். ஒவ்வொரு மழைக்கும் நாம் இடம் பெயர வேண்டி ஏற்படுகின்றது. எங்களுக்கு நிரந்தர ஏற்பாடு செய்து தருகின்றனர் இல்லை. அரசியல்வாதிகள் தொடக்கம் பலரும் வந்து பார்வையிடுகின்றனர். ஆனால் தீர்வைத்தான் பெற்றுத் தருகின்றனர் இல்லை' என்று போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் தெரிவித்தார்.

தனியார் காணியில் இந்த மக்கள் தங்கியிருப்பதனால், வெள்ளத் தணிப்பு நடவடிக்கை எவையும் குறித்த காணியில் மேற்கொள்ளப்படவில்லை. 'எங்களுக்குக் காணி உரிமை இல்லை. இதனால் அரச அதிகாரிகள் உதவிகள் வழங்காமல் தட்டிக் கழிக்கின்றனர். பாடசாலை மாணவர்கள் மழையென்றால் பாடசாலைக்கு போக முடியாத நிலைமை இருக்கின்றது. சுகாதார வசதிகளும் எங்களுக்கு செய்து தரப்படவில்லை.

### ஏமாற்றுகின்றார்கள்

எங்களுக்கு காணி உரிமை பெற்றுத் தரப்படவேண்டும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காணி உரிமை பெற்றுத் தருவதாகச் சொன்னார். ஆனால் இது வரையில் அதனைப் பெற்றுத் தரவில்லை. இன்று (நேற்று) கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துகின்றோம். அமைச்சர் டக்ளஸ் வந்தார். ஆனால் எங்களுடன் கதைக்காமல் சென்றுவிட்டார் ஏன்? என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இளம் தாய் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

### பெண்களிடம் வீரம் காட்டிய பொலிஸார்

வீதியை மறிக்க வேண்டாம் என்று பொலிஸார் பலமுறை கேட்டும் மக்கள் அதற்கு இடம் கொடுக்கவில்லை. தமக்கான தீர்வு கிடைக்க வேண்டும். அது வரையில் போராட்டத்திலிருந்து விலக மாட்டோம் என்று தெரிவித்தனர். இதனையடுத்து மதியமளவில், மறியலில் ஈடுபட்டிருந்த பெண்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தி அவர்களை வெளியேற்றினர். இதில் பொதுமக்கள் சிலர் தாக்குதலுக்கு இலக்காகினர்.

### தீர்வுக்கு நடவடிக்கை

இந்த மக்களுக்கான நிரந்தரத் தீர்வு தொடர்பில் அரச அதிகாரிகளிடம் கேட்ட போது, மக்கள் தங்கியுள்ள காணி தனியார் காணி. இது நான்கு பேருக்குச் சொந்தமான வயற்காணி. இதனால் எம்மால் அதில் எதுவும் செய்ய முடியாது. தனியார் காணியில் அபிவிருத்தி நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க முடியாது.

குறித்த காணியை சுவீகரிக்க வேண்டும். அவ்வாறு சுவீகரித்து அரசுடமையாக்கினால் நாம் நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கலாம். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று குறிப்பிட்டனர்.

(த-5-7-23-106)

# சரணடைந்தது இங்கிலாந்து



இலங்கைமற்றும்இங்கிலாந்துஅணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்றைய தினம் கொழும்பு பிறேமதாச மைதானத்தில் இடம்பெற்றது. போட்டி ஆரம்பிக்கமுதல் மழை குறுக்கிட்டதன் காரணத்தினால் 45 பந்துப் பரிமாற்றம் கொண்டதாக ஆட்டம் மட்டுப்படுத்தப்பட்டது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப் பெடுத்தாட தீர்மானித்தது,ஆரம்ப வீரர்கள் உட்பட முன்னிலை வீரர்கள் எவருமே நிலைக்கத் தவறினர். குக்22,அலி2,பெல்4,மோர்கன்17,பட்லர்7 எனவெளியேற இங்கிலாந்து இலங்கையின் ஆதிக்கத்திற்குள் படிப்படியாக செல்ல ஆரம்பித்தது. மத்தியவரிசை வீரர்களான றூட்மற்றும்பொபாரா சற்று போராடி சிறு அழுத்தம் கொடுக்க முனைந்தாலும் அவர்களாலும்தொடர்ந்துதாக்குப்பிடிக்க முடியாமல் போக றூட் 42 ஓட்டங்களுடனும் வொப்பாறா 51 ஓட்டங்களுடனும் வெறிஹியுறினர். ஆவர்களைத் தொடர்ந்து பின்வரிசை வீரர்களும் அடுத்தடுத்து வெளியேறஇங்கிலாந்து அணி 43பந்துப்பரிமாற்றங்களில் சகலஇலக்கையும்இழந்து 185 ஓட்டங்களைமாத்திரமேபெற்றது.

பந்து வீச்சில் இலங்கையணி சார்பாக மெண்டிஸ் 3 இலக்கையும் டில்சான், பிரசாத் ஆகியோர் தலா 2இலக்கையும் மத்தியூஸ், கெரத், மற்றும் பெரேரா ஆகி யோர் தலா 1 இலக்கையும் கைப் பற்றினர்.

186 ஓட்டங்களை பெற்றால் வெற்றி எனும் இலகு இலக்கோடு பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய இலங்கை அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களான டிலசான் 26, குசல் பெரேரா 9 என வெளி யேறி ஏமாற்றம் கொடுத்தாலும் தொடர்ந்து வந்த மஹேல மற் றும்சங்கா சிறப்பாக துடுப்பெடுத் தாடி தமக்குள் இணைப்பாட்டமாக 149 ஓட்டங்களைப்பகிர இலங் கையணி 34.2 ஓவர்களில் 2 இலக்குக்களை மாத்திரமே இழந்து 186 ஓட்டங்களைப் பெற்று இலகு வெற்றியீட்டியது. அதிகமாக ஜெயவர்த்தன 77 ஓட்டங் களையும் சங்கா 67 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார் பாக அலி மற்றும் பின் ஆகியோர் தலா ஒருஇலக்கைகைப்பற்றினர். (த-பி)

ஆட்ட நாயகனாக ஜெயவர்த்தன தெரிவானார்.
7 போட்டிகளைக் கொண்ட தொடரில் இலங்கை 2:0 என முன்னிலையில் உள்ளது.
இவ்விரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் புதன்கிழமை அம்பாந்தோட்டையில் இடம்பெறவுள்ளது.



பந்து தலையில் தாக்கி உயரிழந்த ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸின் தாய், தந்தை, சகோதரி ஆகியோர் தாளாத சோகத்தில்

# இந்தியா- ஆஸி.

## முதல் டெஸ்ட் ஒத்திவைப்பு

பிலிப் ஹியூக்ஸ் சாவையடுத்து இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி திட்டமிட்டபடி நடைபெறாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதல் டெஸ்ட் போட்டி எதிர் வரும் 4ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்குகிறது. ஹியூக்ஸ் சாவினால் முதல் டெஸ்டை நடத்தவேண்டுமா? என்று பரிசீலிக்க வேண்டும் என்கின்றில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டி திட்டமிட்டபடி நடக்குமா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

ஹியூக்ஸ் சாவினால் ஆஸ்திரேலிய வீரர்கள் கவலையில் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவர்களால்போட்டியில்கவனம்செலுத்த முடியாதுஎன்றகருத்து நிலவுகிறது. இதேவேளை, எல்லோரும் கிரிக்கெட்டை நேசிக்கிறோம். எல்லோரையும் விட கிரிக்கெட் அதிகம் நேசித்தவர் ஹியூக்ஸ். வீரர்கள் கடும் சோகத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிவோம் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நிர்வாகி ஜேம்ஸ் சுதர்லாண்ட் தெரிவித்துள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டிக்கு இன்னும் 6 நாள்கள் உள்ளன. துக்கத்தில் இருந்து மீள்வதற்கு இந்த நாள்கள் போதாது என்று தெரியும். இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபையிடம் தொடர்பு கொண்டுள்ளோம். அவர்கள் சூழ்நிலையை நன்கு உணர்ந்து இருக்கிறார்கள், வீரர்களிடமும் பேசி இருக்கிறோம்.

ஆஸ்திரேலிய வீரர்கள் போட்டிக்குத் தயாராகுவது கடினம் என்றாலும் அது முடியும். முதல் டெஸ்ட் போட்டி நடந்தால் அதற்கு இரு அணி வீரர்களும் வித்தியாசமான மனநிலையில் தயார் ஆக வேண்டி இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் 4 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இந்தியா– ஆஸ்திரேலியா மோதும் முதல் டெஸ்ட் போட்டி நடைபெறாது என்றும், திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்த முடிவு எடுக் கப்பட்டுள்ளதா கவும் தெரிவிக்கப் படுகிறது. (த)

# ஹியூக்ஸிற்கு அரச மரியாதை

பவுன்சர் தாக்கிச் சாவடைந்த பிலிப் ஹியுக்ஸிற்கு சிட்னி மைதானத்தில், அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடக்க உள்ளன.

இதனிடையே,ஹியுக்ஸின் உடல்அடக்கத்தை அவரது சொந்த ஊரான மேக்ஸ்வி லியில் உள்ள நம்பக்கா ஆற்றங்கரை யில் நடத்த, அவரது குடும்பத்தினர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன், அவர் காயம் அடைந்த அதே சிட்னி மைதானத்தில் வைத்து உடலுக்குஅரசமரியாதைகொடுக்கப்படவுள்ளது. பொதுவாக அரசியல் பிரபலங் களுக்கு மட்டுமே இது போன்ற கௌரவம் அளிக்கப்படும். முதல் முறையாக கிரிக்கெட் வீரருக்கு இந்த பெருமை வழங்கப்பட உள்ளது. இது குறித்து நியூ சவுத் வேல்ஸ் தலைவர் மைக் பெயர்ட் கூறுகையில்,பிலிப் குடும்பத்துடன் ஆலோசித்து தான் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன் மூலம் இவரை விரும்பும் அனைவரும் மைதானத்தில் திரண்டு இறுதி மரியாதைஅளிக்கலாம்,"என்றார்.

கிரிக்கெட் ஆஸ்திரேலிய தலைமை அதிகாரி சதர்லாண்ட் கூறுகையில், ஹியுக்ஸிற்கு அரச மரியாதை கொடுப்பது என, முடிவெடுத்த தலைவர் மைக் பெயர்ட்டுக்கு நன்றி. சிட்னி மைதானத்தில் இது நடப்பதால், அனைவரும் அஞ்சலி செலுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது,'' என்றார்.

நியூ சவுத் வேல்ஸ் கிரிக்கெட் தலைமை அதிகாரி ஆன்ட்ரூ ஜோன்ஸ் கூறுகையில், சிட்னி மைதானத்தில்தான்ஹியுக்ஸ், முதல் தர போட்டியில்அறிமுகம்ஆனார். இங்கு வைத்து அஞ்சலி செலுத்துவது, அவருக்கு கொடுக்கப்படும் சரியான மரியாதையாக இருக்கும்,"என்றார்.



இறுதி மரியாதைமற்றும்ஊர்வலம்போன்றவை அடுத்த வாரம் நடக்கும் எனத் தெரிகிறது. (த)



# கிரிக்கெட் வரலாற்றை உலுக்கியெடுத்த சாவுகள்

ஹியூஸ் மரணச் செய்தி கேட்டு டெல்லி விக்கெட் கீப்பர் புனீத் பிஸ்ட், பந்தில் உங்கள் பெயர் எழுதப்பட்டிருந்தால் எந்த தலைக் கவசத்தாலும் உங்களை காப்பாற்ற முடியாது என்றார். இவரின் வார்த்தைகளுக்கு ஏற்ப கிரிக்கெட் வரலாற்றில் பல சோகமான சம்பவங்கள் நடந்துள்ளன. வேகமான பவுன்சரால் தான் ஒரு வீரர் தாக்கப்படுவார் என்று கிடையாது. சுழற்பந்தால் தாக்கப்பட்டு இறந்தவர்களும் உண்டு.

1870 ஆம் ஆண்டு லண்டன் லார்ட்சில் நடந்த முதல்தர போட்டியில் நாட்டிங்காம்ஷைர் வீரர் ஜார்ஜ் சம்மர்ஸ் (வயது 25) துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது, ஷாட் பிட்ச் சாக வந்த பந்து தாக்கியதில் படுகாயமடைந்தார். 4 நாள் கழித்து அவர் உயிரிழந்தார்.

1959 ஆம் ஆண்டு பாகிஸ்தான் முதல் தர கிரிக்கெட்டில் அப்துல் அஜீஸ் (வயது 17) என்ற விக்கெட் கீப்பர் நெஞ்சில் பந்து தாக்கியதில் சுயநினைவை இழந்தார். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தார்.

1998 ஆம் ஆண்டு வங்கதேசத்தில் நடந்த முதல்தர லீக் கிரிக்கெட்டில் இந்திய முன்னாள் டெஸ்ட் வீரர் ராமன் லம்பா (வயது 38) பங்கேற்ற போது, துடுப்பாட்டக்காரர் அடித்த ஷாட்டில் அருகில் களத்தடுப்பு செய்து கொண்டிருந்த இவரது நெற்றியை பந்து தாக்கியதில் கோமா நிலைக்கு சென்றார். மூன்று நாள்கள் சிகிச்சை அளித்தும் அவரது உயிரை காப்பாற்ற முடியவில்லை.

தென்னாபிரிக்க முதல்தர கிரிக்கெட் வீரர் டேரின் ரான்டால் கடந்த ஆண்டு உள்ளூரில் நடந்த போட்டியின் போது பந்து தலையில் தாக்கியதில் உயிரிழந்தார்.

தற்போது சர்வதேச கிரிக்கெட் வீரர் அவுஸ்திரேலியாவின் பிலிப் ஹியூக்ஸும் பந்து தாக்கியதில் மரணத்தை தழுவியிருக்கிறார். (த)

# சச்சினின் ஆன்மா சாந்தியடையட்டும்

## ஆங்கில நாளிதழால் பரபரப்பு

'சச்சின் டெண்டுல்கர் ஆத்மா சாந்தியடையட்டும்' என்று ஆங்கில நாளிதழ் ஒன்றில் தவறாக வந்த செய்தியால் ரசிகர்கள் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

பவுன்சர் பந்து தாக்கி உயிரிழந்த ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ் மறைவுக்கு அஞ்சலி செலுத்திய பிரபலங்கள் குறித்த டுவிட்டுகளை செய்தியாக்கிய தேசிய ஆங்கில நாளிதழ் ஒன்று, பிலிப் ஹியூக்ஸுக்குப் பதிலாக 'சச்சின் டெண்டுல்கர் ஆத்மா சாந்தியடையட்டும்' என்று பிரசுரம் செய்து ரசிகர்களிடன் கோபத்திற்கு ஆளாகியுள்ளது.



Shocked to hear about Phil. Sad day for cricket. Deepest condolences to family, friends and well wishers. RIP Sachin Tendulkar

"NO NO NO NO NO! RIP, Hughsey. Sean Abbott

உயிரிழந்த ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸுக்கு பிரபலங்கள் பலரும் தங்களது இரங்கல்களை டுவிட்டர் மூலம் தெரிவித்திருந்தனர்.

அதில் சச்சின் வெளியிட்ட இரங்கல் செய்தியை அந்த நாளிதழ், பிலிப் குறித்து கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தேன்.

கிரிக்கெட்டின் சோக நாள். அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், நலம் விரும்பிகளுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். சச்சின் டெண்டுல்கரின் ஆன்மா சாந்தியடையட்டும் (RIP Sachin Tendulkar) என்று வெளியிட்டுள்ளது.

அதாவது பிலிப் ஹியூக்சின் ஆத்மா சாந்தியடையட்டும் என்று சச்சின் தனது டுவிட்டர் செய்தியின் கடைசி வரியில் கூறியதை, மாற்றி அவரது பெயரையே போட்டுவிட்டது அந்த நாளிதழ். இதனை பார்த்து அதிர்ச்சியடைந்த ரசிகர்கள் அந்த பத்திரிக்கைக்கு எதிராக தங்களின் காட்டமான கருத்துகளைப் பதிவு செய்து வருகின்றனர். (த)



# ஹியூக்ஸின் காயமடைந்ததை நேரில் பார்த்தவர்கள்

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் பங்கேற்கும் ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருக்கும் டேவிட் வோர்னர், பிரட் ஹடின், ஷேன் வொட்சன், நாதன் லியான் ஆகிய நான்கு பேரும், பிலிப் ஹியூஸ் காயமடைந்ததை நேரில் பார்த்தனர். எனவே, மற்றவர்களை விட அவர்களுக்கு இந்தத் துக்கத்தில் இருந்து மீண்டு வர சிறிது காலம் ஆகலாம். குறிப்பாக, ஹியூக்ஸை பவுன்சர் பந்து தாக்கியபோது எதிர்முனையில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த டேவிட் வோர்னரை, இந்தச் சம்பவம் வெகுவாக பாதித்துள்ளது.

இதேவேளை, முதல் டெஸ்ட் நடைபெறுவது குறித்து இன்னும் உறுதியான தகவல் வெளியாகவில்லை என்றாலும், இந்திய அணி வெள்ளிக்கிழமை பயிற்சியில் ஈடுபட்டது. வீரர்கள் அனைவரும், ஹியூக்ஸின் மறைவுக்கு துக்கம் அனுசரிக்கும் வகையில், கைகளில் கறுப்புப் பட்டி அணிந்து பயிற்சியில் ஈடுபட்டனர். (த)

# தாங்க முடியாத வேதனை



ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்சின் சாவு அணிக்குத் தாங்க முடியாத வேதனை என அணித் தலைவர் கிளார்க் கண்ணீர் மல்கப் பேட்டியளித்துள்ளார்.

ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ் பந்து தாக்கி சாவடைந்த சம்பவம் கிரிக்கெட் உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இவரது மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்துவரும் நிலையில், அணித் தலைவர் மைக்கல் கிளார்க் கண்ணீர் மல்கப் பேட்டியளித்துள்ளார்.

அவர் கூறுகையில், ஹியூக்ஸ் சாவு ஆஸ்திரேலிய அணிக்கு தாங்க முடியாத வேதனையாகும். ஆழமான வலியை ஏற்படுத்தி உள்ளது. அவரது இழப்பை எங்களால் வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

அவர் ஆஸ்திரேலிய அணிக்காக மகிழ்ச்சியுடன் விளையாடினார். வீரர்களுடனும் மிகுந்த அன்போடு இருந்தார். 2009 இல் அறிமுகமான அவர் 26 டெஸ்டில் மட்டுமே விளையாடி உள்ளார்.

ஒருநாள் போட்டியில் ஹியூக்ஸின் உடை எண் 64 ஆகும். அந்த நம்பரை வேறு யாருக்கும் அளிக்கக்கூடாது என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையிடம் விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (த)

# ஹியூக்சுக்கு சச்சின் அஞ்சலி

தனது துடுப்பு மூலம் பிலிப் ஹியூசுக்கு, சச்சின் டெண்டுல்கர் தனது இரங்கலை தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலிய அணி வீரர் பிலிப் ஹியூக்ஸ், உள்ளூர் தொடரில் பவுன்சர்' பந்து தாக்கி உயிரிழந்தார்.



இந்தச்சம்பவம் உலகம் முழுவதிலும் உள்ள ரசிகர்களைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது, பலரும் தங்களது இரங்கலை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் இந்திய அணி ஜாம்பவான்' சச்சின், ஹியூக்ஸ் 25 வயதில் சாவு அடைந்ததை நினைவுபடுத்தும் வகையில், தனது 25 வயதில் விளையாடிய துடுப்பு மீது தொப்பியை வைத்து அஞ்சலி செலுத்தியுள்ளார். இது குறித்த படத்தை சச்சின், தனது டுவிட்டர்' இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளார். இந்த செய்தியில், எனது 25ஆவது வயதில் விளையாடிய துடுப்பு இது, ஹியூக்ஸ் ஆன்மா சாந்தியடையட்டும் என தெரிவித்துள்ளார். இதேபோல மேற்கிந்திய ஜாம்பவான்' விவியன் ரிச்சர்ட்ஸ், பாகிஸ்தான், நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணி வீரர்கள், தென்னாபிரிக்காவின் டுபிளசி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தியுள்ளனர். (த)

# விளம்பரங்கள்

## தேவை

மூன்று மொழிகளிலும் பரீட்சையமுள்ள (English, Tamil, Sinhala) சுற்றுலாத் துறையில் அனுபவம் மற்றும் ஆர்வமுள்ள ஓய்வுபெற்ற அரச/ தனியார் உத்தியோகத்தர் தேவை. (திடகாத்திரமான)

தொடர்பு: திங்கள் முதல் வெள்ளி வரை 021 221 7095

(54457) (4.6.3)

## Drive your Vehicle

நாங்கள் தருகிறோம் நீங்களே ஓட்டிச் செல்லுங்கள்

கார்கள், கப்கள், வான்கள், பஸ், லொறி



PEAKING RENT A CAR

அழையுங்கள் 0777484820

## தேவை

சங்கெனின் யாழ். ஹொட்டல் வேலைத் தளத்தில் கம்பி வேலை செய்யக் கூடிய உப கொந்தராத்துக்காரர் தேவை. தனிப் பட்ட கம்பி தொழிலாளிகளும் வரலாம்.

விவரங்களுக்கு

021 221 7270, 077 431 9792

071 869 7269 (C/17922)(10.6.3)

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.

ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச் சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல்

மாலை 5.00 மணி வரை.

இல.97/8, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம். (உரும்பிராய் சந்திக்கு அருகில்) (50509) (4.3.6)

T.P: 072 681 6681, 072 681 6691

## வெற்றியின் ஆதிக்கத்தில் நியூஸிலாந்து

பாகிஸ்தான் நியூஸிலாந்து அணிகளுக் கிடையிலான போட்டிகளில் 1:0 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி தொடரில் முன்னிலை வகிக்கிறது. மூன்றாவதும் இறுதி யுமான டெஸ்ட் போட்டி இடம்பெறுகின்றது. பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்கையும் இழந்து 351 ஓட்டங் களை பெற்றது. ஹபீஸ் 197 ஓட்டத்தை பெற்றார். நியூஸிலாந்து சார்பாக கிறைக் 7 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி 637 ஓட்டங்களைக் குவித்தது. மக்கலம் 202 ஓட்டங்களும், வில்லியம்சன் 192 ஓட்டங்களும் பெற்றனர். ஹற் அலி 4 இலக்கை கைப்பற்றினார். (த—ரி)

## வேலைவாய்ப்பு

சிவகுரு ஹாட்வெயார் கரடிப்போக்கு, கிளிநொச்சி A9 வீதியில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு

கணக்காளர், கணக்காய்வாளர்,

உந்துருளி சேவிஸ் செய்பவர்

ஆகிய வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

தொடர்புகளுக்கு: 0777722305

(47947)(10.6.3)

## சித்திரத் தேர் விற்பனைக்கு

கோயில் பழைய சித்திரத்தேர் விற்பனைக்கு உண்டு. பெற விரும்புவோர் பின்வரும் தொலை பேசி இலக்கத்துடன் மார்கழி (10th December 2014) 10 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

077 774 6829 / 021 222 3690

077 604 9581 (54511)(10.6)

## German Institute

German, Swiss மொழிகள்

தமிழ் மொழிபெயர்ப்புடன்

கடந்த 10 வருடங்களாக நடைபெறும்

ஒரே ஒரு Institute

10, Palaly Road, Jaffna.

T.P: 077 160 4823 Mrs. P.Kajenthini

## கணினிகள் விற்பனைக்கு

பாவித்த 15 கணினிகள், 3 குளிரூட்டிகள் சாவகச்சேரியில் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

075 242 1936 (C/17922) (10.6.3)

## விற்பனைக்கு

பெரிய இன ஆடு, மாடுகள் விற்பனைக்கு உண்டு.

கோண்டாவில் வடக்கு

T.P : 075 511 3457

## G.C.E (A/L) இன் பின்னர்...




BSc (Hons) / BA (Hons) / BEng (Hons) / LLB (Hons)

BTEC HND
Full Time / Part Time

Foundation Course

O/L

After A/L

இலங்கையில் சர்வதேச உயர்கல்வி கற்கை நெறிகளை வழங்கும் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனம் எனும் Edexcel, UK நிறுவனத்தின் சான்றிதழுடன் வெற்றி நடைபோடும் BCAS Campus வழங்கும் Access Programme (Degree Foundation) எனும் பாட நெறியினை GCE A/L பரீட்சையினை எழுதி முடித்திருக்கும் மாணவர்களாகிய உங்களுக்கு கணினி, ஆங்கிலம் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றில் திறமைகளை விருத்தி செய்வதற்கான முறையான பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதோடு 6 சர்வதேச வரவேற்பை பெற்ற சான்றிதழ்களையும் இப்பயிற்சி நெறி முடிவில் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்பும் கிடைக்கின்றது.

அத்தோடு குறுகிய காலத்திற்குள் UK, USA, Australia, Canada போன்ற நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களினூடாக (Hons) Degree பட்டப்படிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை இதன் மூலம் இலகுவாகக் கிடைக்கிறது.

IELTS

Dip. in English

கொழும்பிலிருந்து வருகை தரும் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஐரோப்பிய ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில் முழுமையான ஆங்கிலச் சூழலில் பாடநெறிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன | FREE Study Pack

உயர்கல்வி மற்றும் உயர்தரத்திற்கு பின்னரான கற்கை நெறி தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கு BCAS Jaffna Campus இனை நாடுங்கள்.

5 Certificates by BCAS | 2 Certificates from Edexcel, UK

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus

16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.

T: 021 2219910 | E: info@bcas.lk

தொடர்புகளுக்கு 0777 102131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayan.com

0215671111

## சிங்கப்பூர் வேலைவாய்ப்பு

இலங்கை வரலாற்றில் முதன் முதலாக சிங்கப்பூரில் 18வருடங்கள் வேலை செய்து உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஜெயலத் நிறுவனத்திடமிருந்து ஓர் அரிய வாய்ப்பு. சிங்கப்பூர் அரசின் (BCA) கட்டட நிர்மாணத்துறை ஜெயலத் ஷூதென்ங் லங்கா நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் 100% சிங்கப்பூர் வேலைவாய்ப்பு உத்தரவாதம் தரும் ஓர் பயிற்சிநெறி. ஏற்கனவே எங்கள் மூலம் யாழ்.இளைஞர்கள் பயனடைந்து சிங்கப்பூரில் பணிபுரிந்து வருவதை நிரூபித்துள்ளோம்.

தொடர்பு: 94, 4 ஆம் குறுக்குத்தெரு, அடைக்கலமாதா ஆலயவீதி, யாழ்ப்பாணம். (சி.18031) (12.3.6)

021 750 3503, 077 726 3181

தலைமைக்காரியாலயம், 011 750 3503

உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனை ஜெயலத்

## ஜோதிடர் வருகை

ஜாதகம், திருமணப் பொருத்தம், சனிப் பெயர்ச்சி பலன்கள் , தொழில் முன்னேற்றம் போன்ற அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் ஜாதக விளக்கங்களுடன் மலையாள மாந்திரீக முறைப்படி தீர்வு காணல். ஜோதிடர் C.M ஸ்ரீஹரி மானிப்பாய் வீதி, முட்டாஸ் கடைச் சந்தி

077 768 4406 (54513)

## பணியாளர் தேவை

தொலைபேசி விற்பனை நிலையத்திற்கும் புடைவை விற்பனை நிலையத்திற்கும் அனுபவமுள்ளவர்கள் / வேலை பழக விரும்புபவர்கள் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்

077 361 1282 (சி.17936)

## வேலையாள்கள் தேவை

ஜேர்மன் ரெக் சற்றலைற் சென்ரர்ஸ் இன் கட்டட பணிகள் செய்வதற்கு கொந்துராத்துகாரர்கள் தேவை.

கட்டடப் பணிகள் இடம்பெறும் இடங்கள்: கைதீடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பூநகரி, மன்னார், வவுனியா, மாங்குளம்.

விவரங்களுக்கு: 077 375 1803, 071 238 7076

Sanken Construction (Pvt) Ltd

(சி.17918) (45.3)

## உடன் விற்பனைக்கு

1. முதிரை அலுமாரி
2. தையல் மெஷின் சிங்கர்
3. தகர அலுமாரி
4. கட்டில் முதிரை (பெரிது)

தொடர்பு:- 076 53 81 701

(54510)(10.6)

## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்.

2015 இல் தரம் 2,3,4

மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

தரம் 4 - 30.11.2014 இல் ஆரம்பம்

தரம் 2,3 - 07.12.2014இல் ஆரம்பம்

அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும்

சின்னவிழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

இயக்குநர்

## நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருட்களை யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....




பொதிகை புத்தகசாலை

கொம்பியூட்டர் கிராபிக்ஸ்

14-01-2015 வரை ஞாயிறுகளிலும் வியாபாரம் இடம்பெறும்

இல. 03, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.[நவீனசந்தை அருகாமை]

பாடப்புத்தகங்கள் விசேட கழிவு விலையில்

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

Diary 2015

2015ம் ஆண்டு கலண்டர்கள், டயறிகள்

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை புரியும்

T.P :0212270447

email : phothigai@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.